உ

மகாமகோபாத்யாய டாக்டர்

உ. வே. சாமிநாதையரவர்கள்

இயற்றிய

தமிழ்ப்பா மஞ்சரி

முதற்பாகம்

(தெய்வத்துதிப் பாடல்கள்)

பதிப்பாசிரியர் :

கி. வா. ஜகந்நாதன்

மகாமகோபாத்யாய டாக்டர்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

அடையாறு, சென்னை-20

1961

T03198

R001H03

மகா மகோபாத்யாய உ. வே. சாமிநாதையர் நூல்நிலைய வெளியீடு நெ. 26

உ

மகாமகோபாத்யாய, டாக்டர்

உ. வே. சாமிநாதையரவர்கள்

இயற்றிய

தமிழ்ப்பா மஞ்சரி

முதற்பாகம்

(தெய்வத்துதிப் பாடல்கள்)

பதிப்பாசிரியர் :

கி. வா. ஜகந்நாதன்

மகாமகோபாத்யாய, டாக்டர்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

அடையாறு, சென்னை–20

1961

முதற் பதிப்பு 1961

விலை ரூ. 1-50

The Hind Press Private Ltd., Madras-28

முகவுரை

புதை பொருளாகக் கிடந்த சங்க நூல்களையும் வேறு பழந் தமிழ் நூல்களையும் கண்டு பிடித்து எடுத்து ஆராய்ந்து கண்ணாடி போலத் துலக்கி வெளியிட்டுத் தமிழிலே ஒரு புது யுகத்தைத் தோற்றுவித்த ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்கள் இளமை தொடங்கியே செய்யுள் இயற்றும் ஆற்றலைப் பெற்றிருந்தார்கள். அந்தக் காலத்தில் தமிழ்க் கல்வி பயில் பவர்கள் கவி பாடும் பயிற்சியையும் பெற்று வந்தார்கள். ஐயரவர் களுக்குத் தமிழாசிரியராக இருந்தவர்கள் பலர். அவர்களில் முதல் ஆசிரியராகிய அரியிலூர்ச் சடகோபையங்கார் செய்யுள் இயற் றும் ஆற்றல் மிக்கவர்; பல சிறு நூல்களை இயற்றியிருக்கிறார். ஐயரவர்கள் தம் அறிவுப் பசிக்குப் பெரு விருந்தாக நூல்களைக் கற்றுத் தேக்கெறியும்படி செய்த பெருமான் திரிசிரபுரம் மகா வித்து வான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். அவர்களோ பெருங் கவிஞர். ஆகவே, தமிழ் பயின்ற காலத்தில் கவி பாடும் சந்தர்ப் பங்கள் பல ஐயரவர்களுக்குக் கிடைத்தன.

இளமை தொடங்கி வந்த இந்தப் பழக்கம் கடைசி மூச்சு வரையில் ஐயரவர்களிடம் இருந்து வந்தது. ஆனால் அவற்றை உலகம் காண வெளியிட அவர்கள் விரும்பவில்லை. இடிந்த பழங் கோயில்களைப் போன்ற பழங் கவிகளைச் சிறப்படையச் செய்ய வேண்டுமென்று அவர்கள் எண்ணினார்களே யன்றி, தம்முடைய கவிகளை வெளியிடும் நாட்டம் அவர்கள்பால் எழவில்லை.

அவர்கள் பிராயம் முதிர முதிர அவர்களுடைய பாடல்களின் சுவையும் உள்ளுறையும் முதிர்ச்சி பெற்றன. ஆனால் இளம் பிராயத்தில் தாம் இயற்றிய கவிகளை எழுதி வைக்கும் பழக்க முடையவர்களாக இருந்த அவர்கள், பிற்காலத்தில் இறைவனுக்குத் தனியே விண்ணப்பம் செய்து கொள்ளும் முறையில் பல பாடல் களைப் பாடி வந்தார்கள். இராக் காலத்திலும் ஒருவரும் இல்லாமல் பொழுது போக்கும் சமயங்களிலும் எழுந்த அந்தக் கவிகளை எழுதி வைப்பார் யார்?

ஐயரவர்களுடைய பாடல்களை யெல்லாம் தொகுத்து வெளியிட வேண்டும் என்ற ஆசை பல அன்பர்களுக்கு உண்டாயிற்று. அடை

யாற்றில் உள்ள ஐயரவர்கள் நூல் நிலையத்தினர் இந்த அருந் தொண்டை மேற்கொண்டு, இதனை நிறைவேற்றும் பணியை எனக்கு அளித்தார்கள்.

அவர்களுடைய பாடல்களில் தெய்வத் துதிகளாக இருப் பவற்றை முதல் தொகுதியாகவும், மற்றவற்றை இரண்டாம் தொகுதி யாகவும் பிரித்து வெளியிடும் முயற்சி இது. இது முதல் தொகுதி.

இதில் உள்ள கடவுள் துதிகளில் பெரும்பாலன ஐயரவர்கள் இளமைக் காலத்துப் பாடியவை. அவர்களுடைய சிறிய தந்தையா ராகிய ஸ்ரீ சின்னசாமி ஐயர், ஐயர் அவர்களின் இளம் பருவப் பாடல் களைத் தொகுத்து ஒரு புத்தகத்தில் எழுதி வைத்துப் பாதுகாத்து வந்தார். அந்தப் புத்தகம் இல்லாவிட்டால் அதிலுள்ள பாடல்கள் வேறு வகையில் கிடைக்க வழி இல்லை.

இந்தப் பாடல்கள் ஐயரவர்களுடைய இளமை ஆர்வத்தையும் பழம் புலவர்களின் மரபை உணர்ந்து கவி பாடும் ஆற்றலை அவர் பெற்றிருந்ததையும் புலப்படுத்தும்.

இளம் பருவத்தில் மடக்கு, திரிபு ஆகியவை அமையப் பாடிப் பயின்றவர்கள் இப் பெரும் புலவர். பிற்காலத்தில் ஒவ்வொரு நாளும் தேவாரத்தைப் பாராயணம் செய்யாமல் எந்த வேலையையும் இவர் செய்வதில்லை. பாராயணம் முடிந்தவுடன் அன்று ஓதிய பதிகச் சந்தத் தில் பாடல் எழுதும் வழக்கத்தைச் சில காலம் மேற்கொண்டிருந் தார்கள். அத்தகைய பாடல்களையும் இத் தொகுதியில் காணலாம்.

ஐயரவர்களுடைய ஊராகிய உத்தமதானபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஆனந்தவல்லி முதல், அவர்கள் சென்னையில் வாழ்ந்த போது இருந்த திருவேட்டீசுவரன் பேட்டை ஆலயத்தில் விளங்கும் இறைவன் வரையில் அவர்களுடைய பாடல்களைப் பெற்றிருக் கிறார்கள்.

பல கவிஞர்களை நமக்கு அறிமுகம் செய்து வைத்தவர்களும், மாபெருங் கவிஞராகிய மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைய வர்கள் மாணவர்களுமாகிய இந்தக் கவிஞருடைய பாடலைத் தமிழர்கள் படித்துச் சுவைத்து இன்புறுவார்கள் என்று நம்புகிறேன்.

கி. வா. ஜகந்நாதன்

நன்றியுரை

ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் இயற்றிய தனிப் பாடல்களை அச்சிட்டு வெளியிடும்படி அவற்றை அன்புடன் உதவியவர்கள் ஸ்ரீ ஐயரவர் களின் பேரர் ஸ்ரீ கே. சுப்பிரமணிய ஐயரவர்கள்; அவற்றை நன்கு தொகுத்து. தலைப்புக்களுடன் குறிப் புரைகள் எழுதிப் பதிப்பித்து உதவியவர் ஸ்ரீ வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்கள்; இப் பிரசுரம் வெளிவருவதற்கு இதன் செலவில் பாதித் தொகையை அன்புடன் உதவி ஊக்கமளித்தவர் இந்திய அரசியல், அறிவியல், பண்பாட்டியல் வளர்ச்சி அமைச்சர் பெருந்தகையார் ஆவர். இவர்கள் யாவர்க் கும் நூல் நிலையம் தன் மனமார்ந்த கடப்பாட்டைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இந் நூலின் இரண்டாம் பகுதி விரைவில் வெளிவரும்.

நூல் நிலையத்தார்

உள்ளுறை

			பக்கம்
1.	**விநாயகப் பெருமான் துதிகள்**	...	1—5
	சுந்தரமூர்த்தி விநாயகர்	...	1
	சித்தி விநாயகர் இரட்டை மணிமாலை	...	1
	சந்தப்புகழ்	...	4
	தனித்துதி	...	4
2.	**முருகன் துதிகள்**	...	6—15
	திருவேரகச் சண்முகர் மாலை	...	6
	திருவேரக முருகன் துதிகள்	...	9
	சந்தத் துதிகள்	...	13
	தனித்துதிகள்	...	15
3.	**சிவபெருமான் துதிகள்**	...	17—58
	கும்பேசுவரர்	...	17
	கைலைப் பெருமான்	...	21
	திருவாவடுதுறைப் பெருமான்	...	24
	திருவேட்டீசுவரர் அதிசயப்பத்து	...	27
	வேறு துதிகள்	...	27
	மடக்கு	...	28
	திரிபு	...	31
4.	**அம்பிகை துதிகள்**	...	59—74
	ஆனந்த வல்லியம்மை பஞ்சரத்தினம்	...	59
	அருளுறை நீலியம்மன் இரட்டை மணிமாலை	...	62
	திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்துப் பெரிய நாயகி இரட்டை மணிமாலை	...	66
	மங்கள நாயகி	...	71
	பெருங்கருணை நாயகி	...	73
	கீர்த்தனம்	...	73
5.	**சரசுவதி துதிகள்**	...	74—78
	கலைமகள் மாலை	...	74
	வேறு துதிகள்	...	76

மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி **டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்.**

உ

மகாமகோபாத்தியாய ஐயரவர்கள்

அருளிய

தமிழ்ப்பா மஞ்சரி

விநாயகப் பெருமான் துதிகள்

சுந்தர மூர்த்தி விநாயகர்

(கட்டளைக் கலித்துறை)

1. சொல்லும் பொருளும் எனஎங்கும் தோய்பரஞ் சோதிதனைக்
கல்லுங் கரையக் கரைவார்க் கமுதைக் கடிவினைநோய்
வெல்லும் பரமனைச் சுந்தர மூர்த்தி விநாயகனை
அல்லும் பகலும் நினைவார்க்குத் துன்பம் அகன்றிடுமே.

சித்தி விநாயகர் இரட்டை மணிமாலை

(வெண்பா)

2. திங்கள் முடியணிந்த சித்தி விநாயகனே
வெங்கண் வினைதவிர்க்கும் வித்தகா—மங்களங்கள்
புல்வாக் கறியப் பொருள்சொல்லப் பாடிடவே
நல்வாக் கடியேற்கு நல்கு. (1)

(கட்டளைக் கலித்துறை)

3. நல்கிய தாயொடு தந்தையும் நீஎன்றன் நல்லுயிர்நீ
ஒல்கிய எண்ணம் கடைக்கணித் தேகவி ஓதவருள்
பில்கிய தேப்பகன் றைத்தொடை யாய்வெண் பிறையுடையாய்
மல்கிய ஆரருள் வாரிதி யேமுக மாதங்கனே. (2)

(வெண்பா)

4. மாதங்க ஆனனத்து வல்லவுணன் எஞ்சாத
போதங்க வான்படைகொள் புண்ணியனே—காதம்

---

1. கும்பகோணம் பக்தபுரி அக்கிரகாரத்தைச் சார்ந்த காவிரிப் படித் துறைக்குக் கிழக்கே உள்ள விநாயகர் மீது பாடியது.

2-14. இளமையில் பாடியவை.

3. தேப்பகன்றை - தேனையுடைய பகன்றை.

4. மாதங்க ஆனனம் - யானைமுகம். எஞ்சாதபோது - வலிமையில் மிக்கு நில்லாத சமயத்தில்.

மணக்கும் பகன்றை மலர்த்தொடையாய் நல்ல
குணக்குன்றே இன்பம் கொடு. (3)

(கட்டளைக் கலித்துறை)

5. கொடுப்பாய் மதுரக் கவிபாடும் வாக்கினைக் கோதகலக்
கெடுப்பாய் எனைத்தொடர் அஞ்ஞான மாகிய கேடிதனை
அடுப்பாய் அடியன் இதயமென் றுகிய அம்புயத்திற்
கடுப்பார் இலாத கரிமுகத் தாயருட் கற்பகமே. (4)

(வெண்பா)

6. கற்பகமே தேனுவே காமருசிந் தாமணியே
அற்பகமார் ஐங்கையுடை ஆரமுதே—சிற்பமுறு
தந்தா வளமுகத்துத் தற்பரனே சாலவும்உ
வந்தாள நாயேன்முன் வா. (5)

(கட்டளைக் கலித்துறை)

7. வாய்ந்த அருட்கட லேஅடி யார்க்கெய்ப்பில் வைப்பனையாய்
காய்ந்த வினைப்பகை யேஅருள் பூத்தருள் கற்பகமே
ஏய்ந்த உமைக்கொரு புத்திர னேஇந்த ஏழைதனை
ஆய்ந்த அறிஞர்கள் அங்கீ கரிப்ப அருள்புரியே. (6)

(வெண்பா)

8. புரிவளைகொள் செங்கரத்துப் புத்தேள் மருகா
கரிவதனத் தாய்ஐந்து கையாய்—உரிய
அடியேன் நவில அருங்கவிதை பாடக்
கடியாமல் ஈதல் கடன். (7)

(கட்டளைக் கலித்துறை)

9. கடல்வண்ண னும்புரங் காற்றிய வீசனும் கானிறைந்த
மடல்வண்ண அம்புய வாணனும் போற்றும் மலரடியாய்
அடல்வண்ண யானை முகத்தாய் அடியர்க் கனுதினமும்
உடல்வண்ணத் துன்பம் ஒழிப்பாய் எனையும் உவந்தருளே. (8)

---

5. கடுப்பார் - ஒப்பார்.

6. தந்தாவளம் - யானை.

7. எய்ப்பு - இளைப்பு. வைப்பு - சேமித்த பொருள்.

9. காற்றிய - அழித்த. கான் - நறுமணம். அம்புயவாணன் - பிரமன்.

(வெண்பா)

10. அருளே திருமேனி யாகக்கொண் டுள்ள
மருளே துமித்தருளும் வள்ளால்—இருளே
உருக்கொண்ட வல்லவுணர்க் கோரேறே ஊழால்
வெருக்கொண்டேன் காத்தருள்வாய் மேல். (9)

(கட்டளைக் கலித்துறை)

11. மேலாச் சுவர்க்கம் இருப்பதும் ஆதவன் மேற்செல்வதும்
தோலாக் கடலெல்லைக் குட்படும் சீரும் துதிக்கைமுக
மாலான் மடிய வருத்திய மாதங்க வத்திரன்புற்
றேரலாடை யீசற் கொருமகன் ஆணையின் தோற்றமன்றே. (10)

(வெண்பா)

12. தோற்றங் கெடுத்தேம் துகளுடையார் பால்நவிலும்
மாற்றங் கெடுத்தேம் மகிழ்ந்தேமால்—ஏற்றமுறும்
வானைமுத லாமுலகம் வாழ அருள்புரிந்த
யானைமுகத் தானையடைந் தின்று. (11)

(கட்டளைக் கலித்துறை)

13. இன்றுல் நமக்கரு ளென்றே யனுதினம் எண்ணியெண்ணிக்
குன்று திருத்தி மடநெஞ்ச மேஒன்று கூறிடக்கேள்
வன்றுள் மதகய ஆனனத் தான்தனை வாழ்த்துநரை
நன்றுண் டருளுமுன் னேன்றனைப் போற்றி நவிலுதியே. (12)

(வெண்பா)

14. வில்லாக மாமேரு வெற்பதனைக் கோட்டியவெட்
டொல்லாக மாதேவற் கோர்தனையன்—இல்லாத |விண்
ஒப்புடையான் வெள்ளைமருப் பொன்றுடையான் சென்னியில்
அப்புடையான் தாளை அடை. (13)

---

10. உள்ள மருளே - மனமயக்கத்தை. துமித்து - அழித்து.

11. தோலா - தோல்வியுறுத துதிக்கை முகமாலான் - கயமுகாசுரன். மாதங்க வத்திரன் - ஆனைமுகன்; வத்திரம் - வக்திரம். புல்தோல் - புலித்தோல்.

12. தோற்றம் - பிறவி. மாற்றம் - சொல்.

13. அருள் இன்றுல்.

14. இதற்குமேல் இந்த இரட்டை மணிமாலை கிடைக்கவில்லை. கோட்டிய- வளைத்த. எட்டு ஒல் ஆகம் எட்டாக அமைந்த திருவுருவத்தை உடைய. இல் லாத ஒப்புடையான் - ஒப்பு இல்லாதவன்; வடமொழி முடிபு. விண் அப்பு - ஆகாய கங்கை.

சந்தப் புகழ்

(கலிவிருத்தம்)

15. போதிவர் வார்குழல் பூரணி நாரணி
பாதியில் வாழ்தரு பாசவி நாசனை
ஓதிம றுதுற ஓதியை யீதரும்
ஆதிவி நாயக னுதர வானதே. (1)

16. தாழ்தரு பாவம தாழ்தரு தீயனே
வாழ்தரு மாறருள் வாயெனில் ஈதரும்
ஊழ்தரு கோடொரு பாலுற வேயருள்
சூழ்தரு மாதிவி நாயக மானதே. (2)

17. பாசவி மோசந பாவவி நாசக
ஈசவி நாயக னேயென ஓதிட
ஆசறு பாடல்க ளானவை பாடிட
ஏசறு சீரருள் யாவையும் ஈவனே. (3)

18. காரண காரண காரிய காரிய
ஆரண் நாயக ஆதிவி நாயக
வாரண மாமுக மாமயில் வாகன
ஞரண நாயடி யேனையு மாதரி. (4)

19. காசினி காரிகை மார்பொல மீதுறும்
ஆசைகள் போதரு மாறணல் நீயருள்
பாசறு கார்தரு பாசவி மோசன
ஆசறு மாமுக வாதிவி நாயக. (5)

20. பாகினை நேர்தரு பாடல்க ளோதிடு
வாகினை நீயருள் வாயெனில் வாழ்குவன்
சேகினை ஈர்தரு தேவசி காமணி
ஆகினை யூர்தரு மாதிவி நாயக. (6)

---

15. இது முதல் 24 வரையில் உள்ள பத்துப் பாடல்களும் சந்தக் கலிவிருத்தங்கள். ஆதி விநாயகனுதரவு ஓதியை ஈதரும். பாசவிநாசன் - சிவபிரான். அவனை ஓதி, மறுக்காமல் உறும்படியான ஓதியை ; ஓதி - ஞானம்.

16. ஆதிவிநாயகம் ஈதரும் ; ஈதரும் - ஈயும்.

18. மயில்வாகனனுர் அண்ண - முருகனுடைய தமையனே.

19. பொலம் - பொன். அணல் நீ - அண்ணலாகிய நீ. பாசறுகு - பசிய அறுகம்புல்.

20. சேகு - குற்றம். ஆகினை - பெருச்சாளியை.

21. வாடலை நீவிய வாழ்வுற வேயுறு
பாடலை யோதிடு மாறருள் நீபுரி
கூடலை மேவிய கோனருள் சேவக
ஆடலை மேவிய ஆதிவி நாயக. (7)

22. மானன மாதர்கள் மாதரை ஒவ்வு
தேனன பாடல்க ளோதிட நீயருள்
வானன மாவருள் வாரிதி யேகரி
ஆனன மேவிய ஆதிவி நாயக. (8)

23. தாபன மார்சுவை மேவிய பாடல்கள்
சோபனம் மேவுற ஓதிட நீயருள்
தீபம தேய்தரு தேகமு ளாய்அர
வாபர ணுதிரு வாதிவி நாயக. (9)

24. பாரணி யார்தரு பாடல்க ளோதிட
ஏரணி மாவறி வீதரு வாயினி
பேரணி யாயிர மேவிய வார்சடை
ஆரணி வானருள் ஆதிவி நாயக. (10)

தனித் துதி

(வெண்பா)

25. அதுவென் றிதுவென் றறைதற் கரிய
விதுவொன்று வேணி விமலன்—மதுவொன்று
தண்பகன்றை வேய்ந்தவொரு தந்தன் திருவடியே
பண்பகன்றேற் காக்கும் பரிந்து.

---

22. மாதரை - காதலை. வான் அன்ன.

23. தாபனம் - நிலை. சோபனம் - மங்கலம். ஏய்தரு - ஒக்கும்.

24. மா அறிவை ஈதருவாய். ஆர் அணிவான் - ஆத்தி மாலையை அணிந்த சிவபிரான்.

25. விது ஒன்று - சந்திரன் தங்கும். பண்பு அகன்றேனைக் காக்கும்.

முருகன் துதிகள்

திருவேரகச் சண்முகர் மாலை

காப்பு

(வெண்பா)

26. தாரகத்தின் மெய்ப்பொருளைச் சங்கரர்க்குச் சொற்றதிரு
ஏரகத்த னைப்புகழும் எம்மொழிக்குப்—போரகத்தில்
வண்டடந்தத் தாலவுணன் மாய ஒறுத்தஅருட்
கண்டந்த யானையடி காப்பு.

(குறள் வெண்பா)

27. உருகன் பருக்கருள்செய் தோங்கே ரகம்வாழ்
முருகன் றனைநெஞ்சே முன்.

நூல்

(கட்டளைக் கலித்துறை)

28. புண்ணிய நின்னடிப் போதைஎஞ் ஞான்றும் புகன்றெனெஞ்சம்
கண்ணிய நல்வரம் ஈந்திட வேளைஇ தேகவலாத்
திண்ணிய சூரற்செற் றேய்புல வாணர் சிகாமணியே
தண்ணிய பூம்புனற் காவிரி ஏரகச் சண்முகனே. (1)

29. எண்ணிற் சிறந்த நலம்ஈயும் நின்அடிக் கேழைநெஞ்சம்
கண்ணிற் சிறந்த நலமீதல் நின்கடன் காண்இடத்திற்
பெண்ணிற் சிறந்த வளைவைத்த நாயகன் பின்புதல்வா
தண்ணிற் சிறந்த புனற்பொன்னி ஏரகச் சண்முகனே. (2)

30. நினைப்புகழ் கல்வி தனைப்படித் தேநினை நேடலின்றித்
தினைப்புக ழேனும் இலாச்சிறி யோருடன் சேர்த்தருளேல்
நுனைப்புகழ் கும்ப முனிக்கருள் தேவ நுவலரிய
தனைப்புகழ் மிக்க புனற்பொன்னி ஏரகச் சண்முகனே. (3)

---

26. தாரகம் - பிரணவம். வண் தந்தத்தால். அவுணன் - கயமுகாசுரன். ஒறுத்த யானை, அருட்கண் தந்த யானை என்று கூட்டுக.

29. கண்ணில் - நியானித்தால். இடத்தில் - இடப்பாகத்தில். பின் புதல்வா - இளைய திருமகனே.

30. நேடல் - தேடுதல். நுனைப்புகழ் - மேலான புகழையுடைய. தனை - அளவு.

31. முருகா அகில முதலே திருச்செந்தில் முன்னவஎன்
றுருகாப் பணிந்து வழுத்தா தவன்என் றெருவவிடேல்
குருகார் கரவள்ளி நாதா அருட்கட லேகுளிர்பொன்
தருகா விரித்துறை ஏரகம் வாழ்எங்கள் சண்முகனே. (4)

32. பாடுகின் றுள்பரி வோடுநின் நாமத்தைப் பாவைமுகம்
வாடுகின் றுள்நினைக் காணுது நெஞ்சம் மருண்டுழன்று
தேடுகின் றுள்அன்பன் எங்கேஎங் கேஎனச் செப்பியெமைச்
சாடுகின் றுள்புனற் காவிரி ஏரகச் சண்முகனே. (5)

33. நேரார் பகையும் இரணத் துயரும் நிரப்பவமும்
பேராப் பழியும் பிறழாப் பிரிவும் பிறழ்ந்திடச்செய்
தோராத என்னையும் ஆண்டின் பளித்தனை என்னுரைப்பேன்
தாரார் எழிற்றுறைக் காவிரி ஏரகச் சண்முகனே. (6)

34. குரங்கத் தினுக்கிணை யாம்விழி யார்மயல் கொண்டடியேன்
இரங்கப் புடவி மிசையில்வைத் தாட்டல் இயல்பலவே
அரங்கத் திடைதுயில் மால்மரு காவடி யார்அமுதே
தரங்கப் புனற்பொன்னி சூழ்திரு வேரகச் சண்முகனே. (7)

35. பேயாய்ப் புடவி மிசைப்பிறந் தேஉழல் பித்தருடன்
ஓயா துறைந்து சலிப்பேனுக் கின்பம் உதவல்என்றே
நேயா பிணிமுக வாகன நித்த நிராமயநற்
றுயாய் அருள்புனற் காவிரி ஏரகச் சண்முகனே. (8)

36. மிடியும் துயரும் இரப்பும் இழிவும் விரவலின்றி
நொடியும் இவைக்கெதிர் வுற்றடி யேன்நினை நோற்பதென்றே
படியும் விசும்புமெக் காலமும் ஆடிப் பரவத்துயர்
தடியும் புனற்பொன்னி சூழ்திரு வேரகச் சண்முகனே. (9)

---

31. ஒருவ - நீங்க. குருகு - வளை.

32. நற்றுய் கூற்று.

33. நேரார் - பகைவர். இரணம் - கடன். நிரப்பு அவமும் - வறுமையாகிய துன்பமும்.

34. குரங்கத்தினுக்கு - மானுக்கு. தரங்கம் - அலை.

35. பிணிமுகம் - மயில்.

36. நொடியும் - சொல்லும். தடியும் - போக்கும்.

37. வாதாடும் அற்பரோ டோயா துறைந்து மனஞ்சலிக்கும்
தீதார் துயர்இனி யான்அடை யாதருள் செய்திடுவாய்
வேதாவெண் பாலர் நெடுமால் பணிந்திடு வித்தகசொற்
றுதார் புனற்பொன்னி சூழ்திரு வேரகச் சண்முகனே. (10)

38. ஓவாது பொய்ம்மை உரைப்போரைச் சேர்தல் ஒழிந்தடியேன்
நாவார் நினதடித் தாமரை போற்றிட நன்கருள்வாய்
தேவா திருச்செந்தில் வாழ்முரு காதிகழ் வெய்திஎன்றும்
தாவா எழிற்பொன்னி சூழ்திரு வேரகச் சண்முகனே. (11)

39. ஆடும் அரவிற்கு நேராகச் சீறும் அவரையகன்
றீடொன் றடியார்க ளோடென்றும் மேவி இருப்பஅருள்
நாடும் இருவர் தமக்கரி யான்அருள் நாததுயர்
சாடும் புனற்பொன்னி சூழ்திரு வேரகச் சண்முகனே. (12)

40. எண்மை விராவிய யான்துயர் நீங்கி இருந்தமிழ்கற்
றுண்மை விராவிய சேதனம் மேவ உவந்தருள்வாய்
ஒண்மை விராவிய சுந்தரி பால உயர்ந்தஎழில்
தண்மை விராவிய காவிரி ஏரகச் சண்முகனே. (13)

41. கழைவளர் சாறெனத் தித்தித் தொழுகும் கவிதைகளைப்
பிழைவளர் ஏழை சொலஅருள் செய்தல் பெரிதுகொலோ
இழைவளர் பூண்முலை வள்ளிதெய் வானை இறையவபைங்
தழைவளர் பூம்பொழிற் காவிரி ஏரகச் சண்முகனே. (14)

42. மறையா தரிக்கும்நின் பாதாம் புயத்தை வழுத்தலிலாக்
குறையா தரிக்கும் அடியேனை ஆண்டு குறைதவிர்ப்பாய்
பிறையா தரிக்கும் முடிப்பெரு மான்புதல் வாபெரிதும்
தறையா தரிக்கும் புனற்பொன்னி ஏரகச் சண்முகனே. (15)

43. கொந்தேர் குழல்மட வார்மயல் கொண்டு குவலயத்தில்
வந்தே உழல்சிறி யேனுக்குச் செந்தமிழ் மன்னஅருள்
செந்தேன் மொழிஉமை மைந்தா எவர்க்கும் தினம்அறத்தைத்
தந்தே உலவும் புனற்பொன்னி ஏரகச் சண்முகனே. (16)

---

37. வெண்பாலர் - நீறணிந்து வெண்மையாகத் தோற்றும் நெற்றியை யுடைய சிவபெருமான்.

39. ஈடு - பெருமை.

40. எண்மை - எளிமை. சேதனம் - அறிவு.

42. ஆதரிக்கும் - அன்புசெய்யும்.

திருவேரக முருகன் துதிகள்

(கலிவிருத்தம்)

44. திருவும் கலையும் திகழும் பெருமை
மருவும் திருவே ரகமா மலையாய்
அருவும் உருவும் அலனும் ஒருவன்
தருமெம் பரனே தமிழ்தந் தருளே. (1)

45. தந்திக் கிளையாய் தவரும் சுரரும்
வந்திக் குமதில் திருவே ரகனே
பந்திக் குமலப் பகைபாழ் படவும்
சிந்தித் திடவும் சிறியேற் கருளே. (2)

46. அருளா கரஜங் கரஅண் ணலுடன்
வருமா றுமுகா மதிலே ரகளம்
குருநா தகுணா லயநாற் கவியும்
ஒருமா லுமிலா வகைஉய்த் தருளே. (3)

47. உய்க்கும் பவபா சமொருங் கறவே
வைக்கும் கருணை மதிலே ரகனே
கைக்குந் தசிகா வளவா கனனே
துய்க்கும் துயரம் தொலைவான் அருளே. (4)

48. வானும் பணியும் மதிலே ரகனே
கானுந் துகடம் பணிகாங் கெயனே
ஊனும் உயிரும் உணர்வும் உனவா
யானும் உனவே எளிதீ வரமே. (5)

49. வரமா தவர்வாழ் மதிலே ரகனே
சிரமா லையனீன் றருள்சிற் பரனே
நரநா ரணர்நன் மருகா முருகா
பரநா தஉவந் தருள்பா வியையே. (6)

---

44. ஒருவன் - சிவபெருமான்.

45. தந்திக்கு - கணபதிக்கு. பந்திக்கும் - கட்டுப்படுத்தும்.

46. ஒரு மாலும் - ஒரு வகை மயக்கமும்.

47. கை குந்த - கையில் வேலைக் கொண்டவனே. சிகாவளம் - மயில்.

48. கான் உந்து - மணத்தை வெளியிடும். உனவா - உன்னுடையனவாக. உனவே - உன்னவே; நினைக்கவே.

49. சிரமாலையன் - தலைமாலையை அணிந்த சிவபெருமான்.

50. பாவிக் கும்பினைப் புகழ்பண் புறுமோ
ஆவிக் குநுகர்ந் தருகே துயில
வாவிக் குவளை மணம்நா றுமதில்
சோவிக் கவளம் துறுமே ரகனே. (7)

51. அகமுன் வயமா அடையும் படிசெய்
திகமும் பரமும் எளியேற் கருள்வாய்
மகமும் தவமும் மருவே ரகனே
நகமும் கடலும் நவில்வேற் கரனே. (8)

52. கரனு ருயிரைக் கவர்கூ ரியவெஞ்
சரனுர் மருகா தழைவெள் விடையூர்
அரனுர் புதல்வா அணியே ரகளற்
குரனுர் துயரம் ஒழிவா னருளே. (9)

53. அருகா தவலம் துறுமா ரயில்வேல்
முருகா அகிலம் மொழிஏ ரகமால்
மருகா அகவும் மயில்வா கனஎற்
கொருகா வலஎன் உறுகண் ஒழியே. (10)

54. கண்ணுர் நுதலன் கடுவார் களன்முன்
எண்ணுர் புரமெய் தவனன் றருளும்
அண்ணு அமலா அணியே ரகசெவ்
வண்ணு மயில்மேல் வருவாய் இனியே. (11)

55. இனிக்கும் கவிபா டிடஎற் கருள்வாய்
தனிக்குஞ் சரிநா யகசண் முகனே
தொனிக்கும் இயமார் சுகவே ரகசீர்
சனிக்கும் பெருமைச் சயிலப் புயனே. (12)

---

50. ஆ இக்கு நுகர்ந்து - பசு கரும்பை உண்டு. சோவிக்க - சோபிக்க; விளங்க. துறும் - செறிந்த.

51. மகம் - வேள்வி. நகம் - மலை. நவில் - புகழ் பேசும்.

52. சரனுர் - இராமபிரான் எற்கு உரன் ஆர் துயரம்.

53. அருகாத வலம் துறும் - குறையாத வெற்றி நிறைந்த. உறுகண் - துன்பத்தை.

54. கடு ஆர் களன் - நஞ்சை உண்டு அமைத்த கழுத்தை உடையவன். எண்ணுர் - பகைவர்.

55. தனி குஞ்சரி - ஒப்பற்ற தெய்வயானை. இயம் - இசைக் கருவி. சனிக்கும் - தோற்றும்.

56. புயமா றினொடா றுறுபுண் ணியபங்
கயமா நிதமுங் கவினே ரகனே
சயமா றில்அயிற் படையாய் தமியேன்
நயமார் கவிதை நவிலப் பணியே. (13)

57. பணியா டவலைப் பயமா டவவை
நணியா டமலன் அருணு யகசோ
அணியா டுகொடி அணியே ரகஎன்
பிணியா வுமறப் பெரிதீந் தருளே. (14)

58. அருவோ டுருவும் அகலா அமலன்
திருவோ டுகரந் தசிவன் புதல்வா
மருவா டுபொழில் வளையே ரகயான்
கருவோ டுதுயர் களைவான் அருளே. (15)

59. களைகண் ணெனஉன் கழல்வந் தனைசெய்
தளைகந் தவெனு அடியேன் நவில்வேன்
விளைகந் தமலர் மிகுமே ரககார்
தளைகந் தரனுர் தருபா லகனே. (16)

60. தருவும் மணியும் சதமா மகனுக்
கருளும் பெருமை அடியேன் உணரா
மருவுன் பதமா மலர்சார்ந் தனனல்
இருவும் புகழ்சேர் எயிலே ரகனே. (17)

61. அகமென் றிடுமோர் அலைவா ரிதியுள்
இகமும் பரமும் இலவா மருவி
மிகவும் துயர விடின்யார் துணைவா
னகமும் புவியும் நவிலே ரகனே. (18)

---

56. பங்கய மா - தாமரை மலரில் உள்ள திருமகள். சயம் மாறில் - வெற்றி மாறுத.

57. பணி ஆட - பாம்பு ஆட. அலைப் பயம் - அலையையுடைய நீராகிய கங்கை. அவை நணி ஆடு அமலன் - மன்றத்தை நண்ணி ஆடும் அமலனாகிய சிவபெருமான். சோ - மதில்.

58. மரு - மணம்.

59. அளை - என்பால் வந்து குலவுவாயாக. கந்தம் - மணம். கார் தளை - கருமையையுடைய.

60. தரு - கற்பகம் மணி - சிந்தாமணி. சதமாமகனுக்கு - இந்திரனுக்கு. உணரா - உணர்ந்து. இருவும் - தங்கிய.

61. அகம் - மனம். துயரவிடின் - துயரடையும்படி விட்டால்.

62. அகமும் புறனும் அடியேன் நினைவேன்
இகமும் பரமும் இனிநீ தருவாய்
நகமும் கடலும் நலியா அலரு
உகவேல் எறியோர் உறுமே ரகனே. (19)

63. ஏரார் மயில்மீ தெளியேன் முனம்நீ
வாராய் எனிலென் மனநோ வுறுமால்
ஈரா யிரவெள் ளமொடே குபுவெஞ்
சூரா தியரைத் தொலையே ரகனே. (20)

64. தொலையா தபவத் தொடுவா ரிதியுள்
புலைநாய் அனையேன் புகுதா உழல்வேன்
இலையார் அயில்வேல் இறைவா கயிலை
மலையான் தனயா மதிலே ரகனே. (21)

65. அகமே ஒருசொல் அறைவன் நிகரில்
மகமே ருவளைத் தருள்வள் ளலருள்
குகனே முருகா குமரா திருவே
ரகவே லவஎன் றழைநீ தினமே. (1)

66. தினமே மடவார் திரளு டுசெறிந்
தனமே நடையென் றவர்பால் அலையும்
மனமே திருவே ரகம்வாழ் முருகன்
தனசே வடியைத் தவிரா தடையே. (2)

67. அடையுஞ் சருகும் மறலும் பருகி
நடையும் தளர்வீர் நவிலே ரகன்வேற்
படையும் மயிலும் உடையாற் பணிமின்
உடையும் பவமற் றொருகோ டிகளே. (3)

---

62. நகமும் - மலையும். நலியா அலரு உக - நலிந்து அலறி அழிய.

63. ஏகுபு - சென்று.

64. பவத் தொடு வாரிதியுள் - பிறப்பாகிய கடலில். புகுதா - புகுந்து. தனயா - புதல்வனே.

65-71. இப் பாடல்கள், சீவகசிந்தாமணி பதிப்பித்த காலத்தில் (1896) பாடியவை. பத்துப்பாடல்கள் உண்டு; இப்போது கிடைத்தவை இந்த ஏழு பாடல்களே.

66. தன - தன்னுடைய.

67. அடையும் - இலையும். அறல் - தண்ணீர். ஒரு கோடிகள் பவம் உடையும் : பவம் - பிறப்பு.

68. இகமும் பரமும் இணையென் றுமிலாச்
சுகமும் பெறுவீர் தொழுவீர் திருவே
ரகமும் எளியேன் அகமும் உறைசே
வகமுன் னவனங் கிரிமா மலரே. (3)

69. மலர்கொண் டுனையே வழிபட் டிடுவேன்
அலர்கொண் டுவிளங் கலைவா விகள்சூழ்
கலர்கண் டறியாக் கவினே ரகவெற்
பலர்கண் டிகழும் படிவைத் ததெனே. (4)

70. ததைதீஞ் சுவைநற் றமிழ்பா டியுளம்
பதையா துறையும் படிவைத் தருள்வாய்
உதையா திபனேர் ஒளியாய் அளியாய்
சிதையா துறையுந் திருவே ரகனே. (6)

71. இடரே துமிலா தெனையாண் டருளும்
அடல்வே லழகன் அருளே ரகனைப்
படர்தீர் தரவே பணிவீர் புகழ்வீர்
விடரோ டுறுதல் விடுவீர் மடவீர். (7)

சந்தத் துதிகள்

(வஞ்சி விருத்தம்)

72. முருகமே கத்து டம்பரி
மருகமா சற்ற மைந்தவர்
உருகுமா கத்து றுங்குக
பெருகுபா டற்றி றஞ்செயே. (1)

---

68. சேவகம் - வீரத்தையுடைய. அங்கிரி - பாதம்.

69. கலர் - கீழ் மக்கள். என் பலர் கண்டு இகழும்படி வைத்தது என்னே ?

70. உதையாதிபன் நேர் - கதிரவனை யொத்த.

71. படர் - துயர். விடரோடு - காமுகரோடு. மடவீர் - பேதையரே.

72. சந்தம் : தனதன தத்த தந்தன. மேகத்து உடம்பு அரி மருக- மேகம் போன்ற திருமேனியையுடைய திருமாலின் மருகனே. மாசற்று அமைந்தவர். ஆகத்து - நெஞ்சில். பெருகு பாடல் திறம் செய் - பெருகுகின்ற பாடலைச் சொல்லும் வகையை என்பால் அமைப்பாயாக.

73. மயிலில்வாழ் வுற்று வந்தருள்
அயிலவா சக்க டம்பணி
சயிலமா றிற்றி கழ்ந்தவ
பயில்விலே ஊனப்ப தங்கொடே. (2)

74. மறையினே துற்ற மந்திரம்
அறைகிலா துற்ற அந்தகன்
குறையெலா மற்றி டும்படி
முறைசெய்வாழ் வுற்றி டுங்குக. (3)

75. குகவிணு டுற்ற குஞ்சர
மகளை யாசித்த மைந்தஇச்
சகமகா துக்க மென்றனை
இகவுமா றற்பின் வந்தருள். (4)

76. அருளினு சற்ற செந்திலிற்
பொருளின்மே வுற்ற மைந்தனே
மருளின்மே வுற்ற மங்கையர்
இருளுரு தெற்குன் அன்பருள். (5)

77. இனனைஏய் வுற்றி டுங்குக
அனனைமா றுற்ற அங்கைய
சினனையோ வுற்று நின்றனைத்
தினனுமே வுற்று நின்றனன். (6)

---

73. அயில - வேலையுடையவனே. கடம்பு அணி சயில - கடம்ப மாலையை அணிந்த மலைபோன்ற தோளையுடையவனே; கடம்பை அணிந்த மலைக்குத் தலைவனே எனலுமாம். ஆறில் - கங்கா நதியில்; சந்தம் நோக்கி றகரம் இரட்டிக் காமல் நின்றது. பதங் கொடு - பக்குவங் கொண்டு; பதங்கொடு வந்தருள்.

74. அந்தகன் - குருடனைப் போன்ற யான். முறைசெய் : ஏவல்.

75. விண்ணுடுற்ற. குஞ்சர மகள்-தெய்வயானை. இகவுமாறு - நீங்கும்படி. அற்பின் - அன்போடு

76. பொருளின் - செல்வத்தைப்போல. இருள் - மயல். எற்கு உன் அன்பு அருள்.

77. இனனை ஏய்வுற்றிடும் - ஒளியால் கதிரவனை ஒக்கும். அனனை மாறு உற்ற - அன்ன வாகனத்தையுடைய பிரமனுக்கு எதிராக மோதிய; குட்டியதை நினைந்தபடி சினனை - கோபத்தை. தினனும் - நாள்தோறும்; தினம் என்றது தினன் என்று நின்றது.

78. நனவுமா சற்று நன்குறு
கனவுமே வுற்று நின்றனே
வினவுமா றெற்கு நன்கருள்
சினவும்வே லுற்ற கந்தனே. (7)

79. உறவும்நீ உற்ற ஒண்பொருள்
பிறவும்நீ பெற்ற பெண்டிரும்
துறவும்நீ செற்ற துன்பும்நீ
திறமைமே வுற்ற கந்தனே. (8)

80. மயிலயா வுற்ற மங்கையர்
அயருமோ கத்தின் அஞ்சினேன்
துயரைநீ அட்டு நன்கருள்
செயலில்வா னத்தர் சிங்கமே. (9)

81. சிறையிலா துற்ற செம்புனல்
முறையிலோ வுற்ற முன்பனேன்
மறைசொலா துற்று வந்தனன்
கறைசெய் வேலுற்ற கந்தனே. (10)

தனித் துதிகள்

(கட்டளைக் கலித்துறை)

82. காரா றுடிகுழல் மோடிடை நேர்மங் கையர்மயலின்
ஓராறு மின்றி உழலுகிற் பீர்வளம் உற்றபொன்னிப்
பேராறு நிற்கப் பணித்தோற் கருள்பவன் பெற்றருள்செந்
தூராறு மாமுகன் தாட்டா மரையைத் தொழுதுய்மினே. (1)

---

78. சினவும் - பகைவரைக் கோபிக்கும்.

80. மயில் மென்மையைக் கண்டு துன்புறுதற்குக் காரணமான பெண்கள்.

81. சிறை - அணை. ஓவுற்ற முன்பனேன் - வலிமை குறைந்தவனுகிய யான். மறை மந்திரம். கறை - இரத்தக் கறை.

82. கார் ஆல் துடி ஆகியவற்றை முறையே குழலும் மோடும் (வயிறும்) இடையும் ஒக்கும் மங்கையர் ஓர் ஆறும் - ஒரு வழியும். பணித்தோன் - திருஞானசம்பந்தர். செந்தூர் ஆறுமுகன்.

83. சுக்கிர வார மதில்மயில் வாகனச் சுந்தரனைச்
சக்கிர வார முலைவள்ளி நாதனைத் தாழ்ந்துவரம்
மிக்கிர வாரவ மேனா ரியரை விழைந்தவர்பால்
வக்கிர வார முறுவாரென் னேசில மானிடரே. (2)

84. கட்டிலும் பாயல் நிலமும் மகளிர் கலந்தின்புறுங்
கட்டிலும் பாயலு மெய்யென்று வாயிலுங் கையிலும
கட்டிலும் பாயச மேவவுண் பீர்செந்திற் கந்தனைப்ப
கட்டிலும் பாய்மன மேவாது காவென்ற கங்கொண்மினே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

85. ஆறுதலை மருவிமயின் மீதிவர்ந்து சத்தியையோர்
அத்தந் தாங்கி
மாறுதலை யுற்றவொரு கரியொடரி வலிதொலைத்து
வானு ளோர்கள்
பாறுதலை நவிலவுணர் புரமழித்து விடையேறு
பரனென் றியாரும்
தேறுதலை உளமிளிருஞ் செந்திநகர்க் கந்தனையாஞ்
சிந்தை செய்வாம். (4)

---

83. சக்கிர ஆர முலை - வட்டமான ஆரம் அணிந்த நகில். மிக்கு இரவார். வக்கிர வாரம் - கோணலான அன்பு.

84. கட்டு இல்லும். பாயல் நிலம்- நீர்ப்பாசனமுடைய நிலம். இன்புறும் கட்டிலும். பாயல் - படுக்கை. கையிலும் அகட்டிலும்ம் பாயசம் மேவ உண்பீர் ; அகடு - வயிறு பகட்டிலும் -காளைமாட்டைக் காட்டிலும். மனம் மேவாது - மனத்தைக் கொள்ளாமல்.

85. முருகனுக்கும் சிவபெருமானுக்கும் சிலேடை. ஆறு தலை மருவி - ஆறு தலைகளைப் பெற்று ; ஆற்றைத் தலையின்மேல் பெற்று. மயின்மீது இவர்ந்து, மையின் மீது இவர்ந்து ; சிலேடைக்கு இப்படி வருதல் இயல்பு ; மயில் வாகனத்தின் மேல் ஏறி என்றும், இருளாகிய அஞ்ஞானத்துக்கு மேலேறி என்றும் பொருள் கொள்ள வேண்டும். சக்தி - வேல், அம்மை. அத்தம் - கை, பாதி. கரி - தாரகாசுரன், கஜாசுரன். அரி - சிங்கமுகன், தாருகாவனத்து முனிவர் விட்ட சிங்கம். பாறுதலை நவில் - ஓடுவதை விரும்பிய. புரம் - உடல், திரிபுரங்கள்.

சிவபெருமான் துதிகள்

கும்பேசுவரர்

(தரவு கொச்சகக் கலிப்பா)

86. எந்நாளும் நின்றனையே ஏத்திப் பணிபுரிவேற்
கிந்நாளில் இவ்வல்லல் எவ்வண்ணம் வந்திடுமால்
பன்னுகம் பூண்ட பரமா பசுபதியே
மின்னுரும் வேணி விமலாகும் பேச்சரனே. (1)

87. இழையார் முலைமடவார்க் கெண்ண மெலாம்ஈந்து
விழையா தனவிழைந்து வீணே பொழுதழிப்பேன்
பிழையா வையும்பொறுத்துப் பேணி அருள்புரிவாய்
வழையார் பொழிற்குடந்தை வாழுங்கும் பேச்சரனே. (2)

88. வாழ்வே மதித்து வழிபிழைத்து நிற்புகழா
தாழ்வே தனேமே வடியேனைத் தள்ளிவிடேல்
தாழ்வே இலாதார் தமக்கமுத மேதிங்கட்
போழ்வேய் குடந்தைப் புரிவாழ்கும் பேச்சரனே. (3)

89. புரியாத தீமை புரிந்தே அறவொழுக்கிற்
குரியாரைச் சேரா துறுவேனைத் தள்ளிவிடேல்
பெரியாய் பெரும்பற்றப் புலியூர்ப் பெருமானே
விரியார் பொழிற்குடந்தை மேயகும் பேச்சரனே. (4)

90. பண்ணாத தீமையெலாம் பண்ணுவே னயிடினும்
எண்ணு துனையிருந்த தெத்தினம்நீ இன்றருள்வாய்
நண்ணார் புரமெரித்த நாதா நயந்தஅந்தி
வண்ணு திருக்குடந்தை வாழுங்கும் பேச்சரனே. (5)

91. மாற்றார் நகைக்கு வருந்தி மனமயங்கி
வேற்றார் பழிப்ப விழுமம் உறுவேனை
ஏற்று தரிப்பாய் இயம்பினேன் வெண்டிங்கட்
கீற்றார் சடையாய் கிளருங்கும் பேச்சரனே. (6)

---

87. வழை - சுரபுன்னை.

88. திங்கள் போழ் - பிறை.

91. விழுமம் - துன்பம்.

92. நின்னை அன்றி வேறுதுணை நீள்நிலத்தில் ஆருளரே
உன்னைச் சரணடைந்தேன் உற்றென்னை ஆண்டருள்வாய்
பொன்னைப் புரையும் புரிசடையாய் புராதனனே
தன்னைப் பொருங்குடந்தைத் தண்ணகர்க்கும் பேச்சரனே.

93. யாரே துணையென்ன எண்ணி மனங்கலங்கும்
சீரேனை ஆளத் தினமும் இதுகண்டாய்
பாரே புனலே முதலாம் படிவத்தாய்
காரேய் பொழிற்குடந்தைக் கண்வளர்கும் பேச்சரனே. (8)

94. பற்றுத நின்பத்தி பாருடையேன் நின்றிருவை
உற்று தரவின் உனைப்பாட நீயருள்வாய்
செற்றார் புரமெரித்த சேவகா பன்னூல்கள்
கற்றார் புகழ்குடந்தைக் கண்வளர்கும் பேச்சரனே. (9)

95. ஓயாது பாழுக் குழைத்தே அவந்திரிவேன்
வாயார நின்றன்னைப் பாட வரமளிப்பாய்
தேயாத வண்ணம் பிறையணிந்த சடைமுடியாய்
ஓயா வளக்குடந்தை உற்றருள்கும் பேச்சரனே. (10)

(வெண்பா)

96. நின்புகழை ஆய்ந்து நினைநினைந்து நின்தாளில்
என்புருக வீழ்ந்திறைஞ்சி ஏத்துகின்றேன்—துன்பு
துடையாய் திருக்குடந்தைச் சோதீ அழற்கை
உடையாய்இஃ தென்னோ உரை. (1)

97. உரையாமுன் அன்பரிடத் தோடிவந்து காப்பாய்
விரையாத தென்னோ விளம்பு—திரையாரும்
மந்தா கினிச்சடையாய் வான்குடந்தை யூருடையாய்
நந்தா மணியினையன் னாய். (2)

98. நாயிற் சிறியேன் நலியஇரங் காதிருத்தல்
ஆயிற் சிறந்தாய்க் கடுக்குமோ—வேயிற்
றிரள்தோள் உமையிடத்துத் தேவா குடந்தை
அரனே விரைந்தென்னை ஆள். (3)

---

93. குடந்தைக்கண் வளர்கின்ற.
94. பாரில் பற்றுத பத்தியுடையேன்.
96. துடையாய் - துடைக்காமல் இருக்கிறாய்.
97. மந்தாகினி - கங்கை.
98. ஆயின் - தாயினும்.

99. ஆளா தெனைநீ அகற்றின் எவர்குடந்தைச்
சூளா மணியே சுடர்க்கொழுந்தே—தாளால்
மறலிதனைச் செற்று மறைச்சிறுவற் காத்த
விறலுடையாய் காப்பார் விளம்பு. (4)

100. விளம்பஇனிக் குந்தேனே விள்ளா அடியேன்
உளம்புகுந்து வாழும் ஒளியே—களங்கனிநேர்
கண்டா திருக்குடந்தைக் கண்ணுதலே வண்ணநிலாத்
துண்டா ஒருமாற்றம் சொல். (5)

101. சொல்லா முனமளிக்குந் தூயோர் மனிதரிலும்
நல்லாருண் டென்று நவிலுவரால்—எல்லா
வருத்தம் உனக்குரைத்தும் வான்குடந்தை வாழும்
நிருத்தஅரு ளாததெவன் நீ. (6)

102. நீயே மறைகள் நிகழ்த்தும் பசுபதிஎன்
றுயேன் பனுவ லவைதெளியேன்—தாயே
அனையாய் குடந்தை அதிபா முளரி
வனையாய் அருள்புரிகு வாய். (7)

103. வாயார நின்னை வழுத்தேன் வலஞ்செய்யேன்
தாயாய நின்னைச் சரண அடையேன்—நோயால்
கவரப்பட் டேன்குடந்தைக் கண்ணுதலே நின்னன்
புவரப்பட் டேனப் புரி. (8)

104. புரிசடையாய் புன்முப் புரம்பொடித்தாய் என்றும்
கரிசடையாய் சீர்க்குடந்தைக் கண்ணே—விரிசுந்
தரமுடையாய் மான்மழுக்கள் தாங்கும் கமலக்
கரமுடையாய் நாயேனைக் கா. (9)

105. காதலொடு கண்டேன் கவின்குடந்தை மாநகரில்
ஓத லொடுநினைப்ப ஒண்ணுனைச்—சாதல்
பிறப்பியல் பிற்றவிர்ந்த பெம்மானை என்றும்
இறப்பும் பிறப்புமுடை யேன். (10)

---

99. எவர் காப்பார்.
100. நிலாத்துண்டா - பிறையை அணிந்தவனே.
102. முளரி - முள்ளையுடைய தாழம்பூ.
103. நின் அன்பு வரப்பட்டேனாகச் செய்.
104. கரிசு அடையாய்.
105. உடையேன் கண்டேன்.

106. ஏனையர்கள் நின்போல் இறைஞ்சற் குரியாரோ
மானை அணிகரத்து வள்ளலே—வானை
அளக்கும் புகழ்க்குடந்தை அத்தா வணங்க
வளக்குஞ் சிதத்தாள் வழங்கு. (11)

107. வழுத்தாது நின்னை வறிதே பொழுது
கழித்தேன் இழிந்த கடையேன்—பழுத்த
சுவையமுதே தென்குடந்தைத் தூண்டா விளக்கே
அவையம் உனக்கியா னருள். (12)

108. அருள்பெருகு கண்ணு அவிர்குடந்தைக் கண்ணுய்
தெருள்பெருகு சிந்தையுற்ற தேவே—மருள்பெருகு
நெஞ்சத்தி னேன்வழுத்தேன் நின்புகழை நித்தஞ்செய்
வஞ்சத்தி னேன்பிணியை மாற்று. (13)

109. மாற்றுயர்ந்த பொன்னே மணிவிளக்கே வானமுதே
சாற்றுயர்ந்த தென்குடந்தைச் சங்கரா—போற்றும்
அடியார்க் கருள்வாயென் ருதரித்து வந்த
கொடியேனை நீக்காது கொள். (14)

110. கொண்டார் பெருந்தவமே கோதில்லாத் தெள்ளமுதே
வண்டார் கடுக்கைமலர் மாலிகையாய்—தண்டாத
செல்வக் குடந்தைச் சிவபரனே வேணிகொளும்
வில்வத்தாய் என்னை விரும்பு. (15)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

111. அறிவான உன்றன் அருள்மேனி நெஞ்சின்
அறியாத என்றன் வினையைச்
செறிவான நின்றன் அடியார்கள் தங்கு
திரளு டிருந்து சிதற

---

107. அவையம் - அபயம் ; இங்கே புகல் என்னும் பொருளுடையது.

109. சாற்று - புகழ்; சாறு உயர்ந்த எனப் பிரித்து விழாவில் சிறந்த என்றும் பொருள் கொள்ளலாம்

110. கடுக்கை - கொன்றை.

111. வினையைச் சிதற. பாதபங்கச வரா - திருவடித் தாமரையையுடைய மேலானவனே. புயங்கதர - பாம்பை அணிந்தவனே.

மறிவான அன்பர் பணிபாத பங்க
சவராபு யங்க தரஜம்
பொறிவாய் கடந்து புலன்வாய் கடந்து
மிளிர்வோய் குடந்தை அரசே. (1)

112. அரசே இலங்கும் அமலா குடந்தை
அதிபாப வஞ்சம் அறியாப்
புரிசோதி எங்கும் உறுநாத அன்பர்
புகழ்வாச பங்க சபதா
பரபாச பந்தம் ஒழிதே சவஞ்ச
பவநாச என்றன் வினைதீர்
கரமீது வெங்கண் அரிணு ஒ ரைங்கை
மகவேசில் தந்தை யவனே. (2)

113. ....திருத்து
கவலாத அன்பன் முதலோர்
முனம்யாவும் எய்தி மொழிதுன்பம் ஓவி
முழுவாழ்வும் எய்தி னரரோ
தினமுன் பதங்கள் தொழுவேனை ஆளச்
செயலில்லை யாயின் அலைவேன்
சனகாதி நால்வர் தமைவாழ வோது
சகளா புயங்க தரனே. (3)

கைலைப் பெருமான்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

114. பரிந்த நெஞ்சம் ஒருங்குறவும்
பாட லினிய பலசொலவும்
விரிந்த சுவைகொள் வாக்கினொடு
வேண்டும் பலவும் அருள்புரிவாய்
கரிந்த இமையோர் தமைக்காக்கக்
கடல்நஞ் சயின்ற கண்ணுதலே
தெரிந்த சனகா தியர்க்கருணால்
தெரித்த கருணைச் சின்மயனே. (1)

---

112. பவஞ்சம் - பிரபஞ்சம். பங்கச பதா. அரிணு - மானை உடையவனே. ஐங்கை மகவு ஏசில் தந்னதயவனே - ஐந்து கைகளையுடைய குழந்தையாகிய கணபதிக்குப் பழியில்லாத தந்தையே.

113. ஓவி - நீங்கி.

115. மனமும் வாக்குஞ் செயலுமொரு
வழிப்பட் டிடவும் பலகவிகள்
தினமும் பாடிப் பேரின்பந்
திளைக்கு மாறும் அருள்புரிவாய்
தனமும் பலவும் அடியவர்கள்
தமக்கே யருளுந் தயாநிதியே
கனமும் மதியும் பரிதியுஞ்சூழ்
கைலை வாழுங் கண்ணுதலே. (2)

116. கண்ணுங் கருத்து மொருவழிசெல்
கவினுற் றிடவும் பலகவிதை
பண்ணுந் திறனு மடியேற்குப்
பாலித் தருளல் நின்கடனே
மண்ணும் புனலும் பாவகனும்
வளியும் வெளியுங் கடந்துயிர்கள்
எண்ணு மெதுவுங் கடந்திலகும்
ஈசா கைலை என்னரசே. (3)

117. எனக்கு மனமோர் வழிசெல்லும்
இயல்பு மினிய கவிபாடி
மனக்குள் மகிழு மோரியல்பும்
வழங்கிப் புரத்தல் நின்கடனே
கனக்குன் றனைய மாளிகையுங்
காவும் மேவுங் குடந்தையுள்ளாய்
அனக்குன் றொருவற் கருள்புரிந்த
அண்ணா கைலை அங்கணனே. (4)

118. அங்க ணுலகம் பெருவியப்பை
அடையும் வண்ணம் பாடிடவும்
இங்க ணியலும் மனம்வழிப்பட்
டியலு மாறும் அருள்புரிவாய்
செங்கண் விடைமே லிவர்ந்தருளும்
செல்வா வில்வ மணிசடையாய்
தங்க மலைவிற் றங்கியொளிர்
சாமீ கைலைச் சங்கரனே. (5)

---

115. கனம் - மேகம்.

116. பாவகன் - அக்கினி.

117. ஒருவற்கு - குண்டோதரனுக்கு.

119. சங்க மருவுந் தமிழ்க்கவிகள்
சாற்றுந் திறம்நான் சார்ந்திடவும்
இங்க ணியலும் மனம்வழிப்பட்
டியலு மாறும் அருள்புரிவாய்
பங்க மலமற் றடியவர்கள்
பரமா னந்த வாழ்வுபெறத்
துங்க முனிவர்க் கருள்புரியும்
துரையே கைலைத் தொன்மையனே. (6)

120. தொன்மைப் புலவர் போற்கவிகள்
சொல்லு மியல்பு பெற்றிடவும்
நன்மை வழியே நடந்துமனம்
நலமுற் றிடவும் அருள்புரிவாய்
வின்மை மேருக் கருள்புரியும்
வீரா வீர சிகாமணியே
அன்மை மருவுங் கந்தரத்தெம்
அண்ணா கைலை அற்புதனே. (7)

121. அன்பி னோடு மின்புபுல
னாகக் கவிக ளறைந்திடவும்
வன்பி னோடு நெஞ்சகமோர்
வழியே நடக்கு மாறும்அருள்
துன்பி னோடு படாதின்பந்
துய்ப்ப வடியார்க் கருளமலா
இன்பி னோடு முண்மையறி
வென்னுங் கைலை எண்குணனே. (8)

122. குணமார் சுவைகள் பலவுமிகக்
குடிகொள் கவிகள் கூறிடவும்
கணமார் விடயம் மருவாது
கருத்து வழிப்பட் டிடவும்அருள்
மணமார் கடுக்கைத் தொடைமிலைந்த
வணர்வார் சடையாய் மால்விடையாய்
நிணமார் சூல அயிற்படையாய்
நிகரில் கைலை நின்மலனே. (9)

---

120. வின்மை - வில்லின் தன்மை. அல் மை மருவும் - இருள் போன்ற கரிய நிறம் பொருந்திய. கந்தரம் - கழுத்து

121. வன்பு - வலிமை. 122. கடுக்கைத் தொடை - கொன்றைமாலை. வணர் - வளைவு. சூல அயில் - சூல வேல்.

திருவாவடுதுறைச் சிவபெருமான்

(கட்டளைக் கலித்துறை)

123. சாற்ற இனிக்கும் தமிழ்நூல்கள் ஆய்ந்திடச் சாந்தமொடும்
ஆற்ற இனிக்கும் அடிப்பணி செய்ய அடியனையாள்
தோற்ற இனிக்கும் மதில்சூழும் கோமுத்திச் சுந்தரனே
மாற்ற இனிக்கும் குணமுடை யார்க்கரு மாணிக்கமே. (1)

124. மடந்தந்த துன்பம் அனைத்தையுந் தீர்த்துன் மலரடிப்பால்
திடந்தந்த பத்தி அளித்தெனை ஆண்டருள் செய்குவையோ
குடந்தந்த மாதவன் போற்றும் பிரான்மலைக் கோமகளுக்
கிடந்தந்த செல்வ திருவா வடுதுறை எம்மிறையே. (2)

125. கடுங்கண்ணர் பாற்சென் றிரவாத
வண்ணங் கடைக்கணித்தால்
கொடும்பழி வந்துறு மோஎன்செய்
கேன்மிஞ்சங் கூசுமந்தோ
குடும்ப வருத்தம் அகற்று
யிரம்பொன் கொடுத்தறிஞன்
இடும்பை தவிர்த்த திருவா
வடுதுறை எம்மிறையே. (3)

126. நின்னை நினைந்த திழிந்தோரை எண்ணி நிலைகுலைய
உன்னை வழுத்திய தீனர்த் துதிப்ப ஒழித்ததென்னே
அன்னை அகற்றிற் சிறுவோரைக் காப்பவர் ஆர்கொலையா
என்னை அருள்தென் திருவா வடுதுறை எம்மிறையே. (4)

127. பாசாந்த காரம் புகுந்தே நினதடிப் பத்தியின்றி
ஆசா மயனென ஆனேனைச் சீறி அகற்றுவையோ [யோ
பேசாத இன்பம் அருள்குவை யோஎன்ன பின்செய்வை
ஈசா விளங்கும் திருவா வடுதுறை எம்மிறையே. (5)

---

123. கோமுத்தி - திருவாவடுதுறை. மாற்ற இனிக்கும் குணமுடையார் - பழகாமல் மாற்றினால் இனிக்கும் குணமுடையவர்கள்; தீயவர்கள்.

124. மடம் - அறியாமை. குடந்தந்த மாதவன் - அகத்திய முனிவன். மலைக் கோமகள் - பார்வதி.

125. அகற்று - நீக்குவாயாக. அறிஞன் - ஞானசம்பந்தர்.

126. உன்னை நினைந்த செயல் இழிந்தோரை எண்ணிக் குலையவும், உன்னை வழுத்தியது ஈனரைத் துதிக்கவுமாக முடியும்படி விலக்கியது என்ன காரணம்.

127. இதைப் பாடிய நாள் 10 7-1908.

128. ஓடேற்ற கையும் உமையேற்ற பாகமும் ஓங்குமன்றில்
ஆடேற்ற பாதமும் ஆலேற்ற கண்டமும் அந்தகனைச்
சாடேற்ற வீரமும் தாமேற்ற சிந்தையைத் தந்தெனையும்
ஈடேற்ற வேண்டுங்கண் டாய்திருக் கோமுத்தி எம்மிறையே.

129. செல்லொன்று கூந்தலின் வாழும்வண் டீரிச் செழுநுதலாள்
இல்லொன் றிடைமுலைப் பாரத்தி னுல்எய்த் திருந்துயரைப்
புல்லொன்றும் நீவிர் உணர்ந்திலிர் போலும் புராதனர்பொற்
கல்லொன்று கூன்சிலைக் கோமுத்தி நாதர் கவின்வரைக்கே.

130. சுந்தர மேனிப் பதுமா லயப்பைஞ் சுகமொழியாய்
மந்தரம் மானும் முலையாய் துலங்குநின் வாணுதலின்
அந்தரம் இன்மையி னுற்பிறை அந்தரம் ஆயதுவால்
கந்தரை ஈன்றவர் கோமுத்தி நாதர் கனவரைக்கே.

131. காய்ந்த கனலினில் வெப்பமும் சீதமும் காணுதல்போல்
தேய்ந்த இடைமங் கையர்பெரு மாட்டிதன் சேல்விழிதாம்
ஆய்ந்த அருளும் மருளும் ஒருங்கின் றளித்தனவால்
வாய்ந்த புகழ்த்திருக் கோமுத்தி நாதர்தம் மால்வரைக்கே.

(குறள் வெண்பா)

132. முக்கணனைக் கோமுத்தி முன்னவனை அன்பர்தொழும்
அக்கணனை நெஞ்சே அடை.

---

128. ஆடு - ஆட்டம்; முதனிலைத் தொழிற் பெயர். ஆல் - ஆலம்; நஞ்சம். சாடு - சாடுதல்.

129. தலைவன் கூற்று. வண்டோச்சி மருங்கணைதல். செல் ஒன்று - மேகத்தின் தன்மை பொருந்திய. இல் ஒன்று - இல்லை யென்னும் தன்மை சேர்ந்த. எய்த்து - இளைத்து. புல் ஒன்றும் - பொருந்துதலைச் சேரும்; புல்: முதல் நிலைத் தொழிற் பெயர். பொற்கல் ஒன்று சிலை - மேருவில்.

130. தலைவன் தலைவியைப் புகழ்தல். பதுமாலயம் என்றது, தலைவியைத் திருமகளாகக் கூறியபடி. சுகம் - கிளி. அந்தரம் - ஒப்பு, ஆகாயம்.

131. தலைவன் கூற்று. குறிப்பறிதல். காணுதல் போல்: இல் பொருள் உவமை.

132. அக்கு அண்ணனை - உருத்திராக்கம் அணிந்த பெருமானை.

திருவேட்டீசுவரர்

அதிசயப் பத்து

(தரவு கொச்சகக் கலிப்பா)

133. பொய்யன் புலையன் புரட்டன் புகர்மிகுத்த
வெய்யன் பழிக்கஞ்சா வீணன் விரதமிலா
நொய்யன் எனஅறிந்தும் நோன்றே திருவேட்டி
ஐயன் கவலா தளிப்ப ததிசயமே. (1)

134. காரியந்தான் ஆவதுமற் காரணத்தின் மீதன்றே
சீரியலுந் தன்பூசை செய்யேன் தினந்தோறும்
நாரியலும் சானம் நவிற்றேன் திருவேட்டி
ஆரியன்மா தேவன் அளிப்ப ததிசயமே. (2)

135. வாலீச மாயமிகு மாரீச னைவதைத்த
கோலீச சீர்க்கும்ப கோணேச சண்பகத்தேன்
பாலீச மாதீர்த்த பாலீச வான்புகழ்க்கல்
லாலீச நாயேனை ஆள்வ ததிசயமே. (3)

136. திருமுறைக ளோதேன் தெளியேன் அருள்சார்
குருமுறையுட் கொள்ளேனைக் கோலஅவி நாசிக்
கிருமுறையும் மும்முறையும் ஏகச்செய் தீசன்
அருமுறையும் செய்தாண்ட தந்தோஅதிசயமே. (4)

137. உண்ணல் உடுத்தல் உறங்கல் பிறர்சேவை
பண்ணல் அவரைப் பரவல் உடையேனைத்

---

133. இது முதல் உள்ள பல பாடல்கள் ஐயரவர்கள் சென்னையில் வாழ்ந்த இடமாகிய திருவேட்டீசுவரம் பேட்டைத் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் திருவேட்டீசுவரரைப் பற்றியவை. புகர் - குற்றம். நோன்று - பொறுத்து. கவலாது - நான் கவலை கொள்ளாமல். அளிப்பது - காப்பாற்றுவது.

134. நார் - அன்பு. சானம் - தியானம். நவிற்றேன் - பயிலேன்.

135. வாலீசன் - வாலியாற் பூசிக்கப்பட்டவன். மாரீசனை வதைத்த கோல் - இராமனுகிய அம்பு; திரிபுர சங்காரத்தின்போது திருமாலை இறைவன் அம்பாகக் கொண்டான் என்பது வரலாறு. சண்பகத்தேன் - சண்பகவல்லி; திருவேட்டீச்சுரம் பேட்டைக் கோயிலிலுள்ள அம்மை. பால் - பாகத்தில் உள்ள. மாதீர்த்த மாகிய பாலியின் கரையிலுள்ள ஈசனே; பாலி - பாலாறு. இது இறைவனை முன்னிலைப் படுத்தித் துதித்தது.

137. பரவல் - புகழ்தல். தண் நல் இளம்

தண்ணலிளந் திங்கட் சடையான் திருவேட்டி
அண்ணல் கவலா தளிப்ப ததிசயமே. (5)

138. நித்தம் பிறர்தாம் நினைத்த படிஒழுகிச்
சித்தம் புனிதமிலாத் தீயேன் எனினும்எனை
மத்தன் மழுவாள் வலத்தன் திருவேட்டி
அத்தன் கவலா தளிப்ப ததிசயமே. (6)

139. நீதி வழிநடவா நீசன் பிறர்பாற்சென்
றீதி எனஇரக்கும் ஏழை எனினுமெனை
ஏதியென முத்தலைவேல் ஏந்தும் திருவேட்டி
ஆதி கவலா தளிப்ப ததிசயமே. (7)

140. நண்ணல் புரிவேன் நலிவா ரிடந்தினந்தோ
றுண்ணல் உடுத்தல்முதல் ஒன்றும் குறைவின்றி
எண்ணல் புரிவேன் எனினும் திருவேட்டி
அண்ணல் கவலா தளிப்ப ததிசயமே. (8)

141. கச்சன் புறுகொங்கைக் காரிகையர் மீதுமனம்
வச்சன் புறுவேன் மதியிலிஎன் றுலும்அருட்
பிச்சன் அமரர் பெருமான் திருவேட்டி
அச்சன் கவலா தளிப்ப ததிசயமே. (9)

142. தூண்டான் எனநிலையில் துன்னேன் ஒருவயிறு
சாண்டான் எனவுந் தரித்திட்டேன் ஆயிடினும்
நீண்டான் இருவர்க்கு நித்தன் திருவேட்டி
ஆண்டான் கவலா தளிப்ப ததிசயமே. (10)

வேறு துதிகள்

(கட்டளைக் கலித்துறை)

143. எட்டீசர் மேனி சிவிகை கவுணியர்க் கீந்ததிருப்
பட்டீசர் எண்டிசைப் பட்டீசர் வந்தி பரிந்தருத்தும்

---

138. மத்தன் - ஊமத்த மலரை அணிந்தவன்.

139. ஈதி - கொடுப்பாய். ஏதி - படைக்கலம். முத்தலைவேல் - சூலம்.

140. நலிவாரிடம் நண்ணல் புரிவேன்.

141. வச்சு - வைத்து. அச்சன் - தந்தை.

142. தூண்தான் என - தூணைப் போல.

143. இதுவும் அடுத்த பாடலும் திருவேட்டீசுவரர் கோயில் கோபுரத் திருப்பணிப் பத்திரிகையில் உள்ளவை. மேனி எட்டாக உள்ள ஈசர்; அட்டமூர்த்தி

பிட்டீசர் போதனைக் குட்டீசர் தந்தை பெருகுதிரு
வெட்டீசர் கோயில் திருக்கோ புரப்பணி மேவுமினே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

144. பூபுரந் தரர்தம் வாழ்வும் புத்தேளிர்க் கரச ராய
மாபுரந் தரர்தம் வாழ்வும் மற்றிதன் பயனுக் கொப்போ
தீபுரம் உண்ணச் செய்தோன் திருவுரு வாகி ஓங்கும்
கோபுரப் பணிக்கு நேராக் கூறஓர் பணியும் உண்டோ.

மடக்கு

145. ஆரணனை முனம்சிறையிட் டாரணனை
ஈன்றவனை அமர்பு யங்க
தாரணனை நீங்கியவு தாரணனைக்
காரணனைச் சங்கை இல்லாப்
பூர்ணனைப் பாண்டவர்க்கும் பூரணனை
நடவருளிப் (?) போர்த்த மத்த
வாரணனை வருபவநி வாரணனை
வாழ்த்திநிதம் வாழ்தி நெஞ்சே.

146. சாரணனை விடுத்துவெம்மை சாரணனை
விடுத்தபின்னோன் தன்னைக் காத்த

என்ற திருநாமத்தை ஓர்க. கவுணியர்க்கு-திருஞான சம்பந்தருக்கு. திருப்பட்டீசர்-திருப்பட்டீச்சரம் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமான்; இத் தலத்தில் சம்பந்தர் முத்துச் சிவிகை பெற்றார். அருத்தும்-உண்ணச் செய்த. போதனைக் குட்டு ஈசர்-முருகவேள்; அவருடைய தந்தை. திருவெட்டீசர்; திருவேட்டீசரை இப்படியும் வழங்குவதுண்டு. (பிலவங்க ஹு வைகாசி மாதம் 31-ஆம் தேதி).

144. பூபுரந்தரர் - அரசர். மாபுரந்தரர் - பெரிய இந்திரர். புரம் தீ உண்ண. கோபுரம் ஸ்தூல லிங்கம் என்று சொல்லப் பெறும்.

145. ஆரணனை - பிரமனை. சிறையிட்டார் அண்ணனை ஈன்றவனை - முருகனுக்குத் தமையனாகிய விநாயகனைப் பெற்றவனை. புயங்கதாரணனை - பாம்பை அணியாகப் பூண்டவனை. நீங்கிய உதாரணன் - தனக்கு உதாரணம் யாதும் இல்லாதவன். சங்கை - ஐயம். போர்த்த மத்த வாரணனை - மதம் பொருந்திய யானையினுடைய தோலைப் போர்த்தவனை. பவநிவாரணனை - பிறவித் துயரைப் போக்குகிறவனை.

146. சாரணனை - தூதனை. வெம்மை சார் அண்ணனை - இராவணனை. பின்னோன் - விடணன். நார் அண்ண நைந்து; நார் - அன்பு. பூதி - விபூதி.

நாரணனை ஆண்டவனை நாரணனைந்
துருகுநர்க்கு நலஞ்செய் பூதி
தாரணனைக் கடலருட்கு தாரணனைச்
சேய்ஞலூர் தன்னிற் போற்ற
வாரணனை வருபவநி வாரணனை
வாழ்த்திநிதம் வாழ்தி நெஞ்சே.

147. ஒருநாலு முனிவருக்கன் றொருவடிவாய்
ஒருவடிவாய் உபதே சித்த
குருநாதன் பலவடிவாய்ப் பலவடிவாய்ப்
பலவடியார் குழாங்க ளுக்குத்
திருநாளுந் தழைந்திடச்செய் தரிசனந்தந்
தருள்சிறப்பைத் தெரிசித் தேன்மற்
றொருநான்இன் புற்றனன்றுன் பற்றனன்மற்
றினிப்பெறுவ துண்டு கொல்லோ.

(கட்டளைக் கலித்துறை)

148. நத்தனைத் தேடும னத்தனை ஈண்டரும் நாயகனைக்
கத்தனை அன்பர கத்தனைக் காலனைக் காய்ந்திடும்ப
தத்தனை எக்கிய தத்தனைக் கால்தடிந் தார்வணங்கும்
அத்தனைச் சூலங்கொள் அத்தனை வாழ்த்தி அமர்நெஞ்சே.

149. பாரானை முன்விழப் பார்த்தானை வேதப் பரிகள்கொண்ட
தேரானை யாவையும் தேர்ந்தானை அன்பகல் சிந்தையின்—
கண்

தாரணன் - அணிந்தவன். அருட்குக் கடல் உதாரணன். வாரணனை - ஐராவதத்தையுடைய இந்திரனுக்கு. வரு பவ நிவாரணனை-வந்த பாவத்தை நிவாரணம் செய்தவனை. சேய்ஞலூரில் இந்திரன் பணிந்து நலம் பெற்றான் என்பது வரலாறு.

147. ஒரு வடிவாய் - ஒராலமரத்தின்கண். ஒரு வடிவாய் - ஒரு வடிவமுடையவனாய். பல வடிவாய் - பல வடிவாகி. பல அடிவாய் - குறும்பலாவின் அடியில் ; இது குற்றாலத் தலவிருட்சம்.

148. நத்தனை - சங்கையுடைய திருமாலுக்கும் ; தேடும் அனத்தனை - முடி தேடிய அன்ன வாகனமுடைய பிரமனுக்கும் ; உருபு மயக்கம். ஈண்டரும் - அணுகுவதற்கரிய. அன்பர் அகத்தனை. பதத்தனை. எக்கியதத்தன் - சண்டேசருடைய தந்தை. அத்தனை - தலைவனை, கையையுடையவனை.

149. பாரில் ஆனை முன்னே இறந்து விழப் பார்த்தவனை. தேர் - திரிபுரசங்காரம் செய்தபோது ஏறியருளிய பூமியாகிய தேர். நித்தம் உவந்து ஆனைக்காவில்

வாரானை நித்தமு வந்தானைக் காத்தவர் வந்தனைசெய்
ஊரானை மால்விடை யூர்ந்தானை நாளும் உணர்திநெஞ்சே.

150. ஆரானை வல்விடம் ஆர்ந்தானை நான்மறை அச்சுவங்கொள்
தேரானை யாவையும் தேர்ந்தானை மாமறை செப்புபல [நல்
பேரானைத் தீங்குளம் பேர்ந்தானைத் தான்பெற்ற பிள்ளைக்கு
கூரானை மால்விடை ஊர்ந்தானை நாளும் உணர்திநெஞ்சே.

151. ஓரானை அம்பென ஓர்ந்தானை முன்வழு வூரிலொரு
சாரானை யைத்தெறச் சார்ந்தானைச் சூலந் தனில்விளங்கும்
கூரானை நன்கருள் கூர்ந்தானைப் பெற்ற குமரர்க்குநல்
கூரானை மால்விடை ஊர்ந்தானை நாளும் உணர்திநெஞ்சே.

152. கத்தனை அன்பர கத்தனைக் கங்கைகொள் கத்தனையோர்
சித்தனை நற்பிர சித்தனை ஆண்டருள் சித்தனைநன்
முத்தனைத் தான்பெறு முத்தனை யர்க்கருள் முத்தனைஎன்
அத்தனைச் சூலங்கொள் அத்தனை வாழ்த்தி அமர்திநெஞ்சே.

153. பித்தனை முன்விரும் பித்தனைப் போற்றிடிற் பேறருள்பா
தத்தனைத் தண்குமு தத்தனைச் சென்னியில் தாங்கியொளிர்
சத்தனை உண்டநஞ் சத்தனைத் தொண்டர்நெஞ் சத்தனைஎன்
அத்தனைச் சூலங்கொள் அத்தனை வாழ்த்தி அமர்திநெஞ்சே.

தவர்கள் வந்தனை செய்கின்ற ஊரையுடையவனை. இது முதல் மூன்று பாடல்களில் சொல்முரண் அடிதோறும் வந்தது.

150. ஆரானை - ஆத்திமாலையை அணிந்தவனை. ஆர்ந்தானை - உண்டவனை. தீங்குடைய உள்ளத்தில் சாராமல் விலகினவனை. நல்கு ஊரானை - கொடுக்கும் துடையை உடையவனை ; ஊரு - துடை.

151. ஓர் ஆனை - தன்னிடம் விடையாக வுள்ள திருமாலை. ஒருசார் ஆனையைத் தெற ; தெற - அழிக்க. கூர் - கூர்மை. நல்கு ஊரான் ; ஊரு - துடை. மாலாகிய விடையை.

152. கங்கையைக் கொண்ட தலையை உடையவன் ; கம் - தலை ; கத்தன் - தலையையுடையவன். சித்தனை - எல்லாம் வல்ல சித்தனாக வந்தவனை. ஆண்டு அருளும் சித்தம் உடையவனை. நன்முத்துப் போன்றவனை. முத்தனையர்க்கு - மூன்று பிள்ளைகளுக்கு ; விநாயகன், முருகன், வீரபத்திரன் என்பவர் அம்மூவர். முத்தனை - பந்தத்தினின்றும் நீங்கினவனை. தனையர்க்கு முத்தம் அருள்பவனை எனலும் ஆம். அத்தனை - தலைவனை, கையையுடையவனை. இதில் அடிதோறும் மடக்கு வந்தது.

153. பாதத்தனை. குமுதத்தனை - சந்திரனை. சத்தனை - உண்மைப் பொருளாய் நின்றானை. உண்ட நஞ்சத்தனை - நஞ்சத்தை உண்டானை. அத்தனை - தகப்பனை, கையை உடையவனை. இதில் அடிதோறும் மடக்கு வந்தது.

திரிபு

154. அன்னம் பலத்தி ஞெடுமிசை வேம்அன்றி அன்பினுன்ருள்
உன்னம் பலத்தி னினியுறு வேங்கொல் உறுவரிஞல்
துன்னம் பலத்தி உரித்தணிந் தோய்சுதை மாடத்தில்லைப்
பொன்னம் பலத்தி னிடைநடம் செய்யும் புராதனனே.

155. கேட லவனம் புதிசெய்ய மாரனுங் கிட்டமிக
வாட லவனம் புறுத்தநை வேற்கருள் வைப்பதென்ருே
ஆட லவனம் புனைசடை யாயர வார்தொடையாய்
பாட லவனம் புடைசூழ் துறைசைப் பராபரனே.

156. ஏகாய மன்றத் தனிநோக்கி என்னை இழித்தவுரை
வாகாய மன்றத் தகையுண ராயல்லை மன்றல்செய்து
நீகாய மன்றத் தறவடி யார்க்கருள் நித்ததில்லை
ஆகாய மன்றத் தருணடம் செய்தருள் அற்புதனே.

157. வெருக்கோ கரண மிழந்தாங் கரிவையர் மேல்விரும்பி
மருக்கோ கரண வியசங்க மேவி வருத்தமுற்றேன் [வேன்
தருக்கோ கரணம் புதைத்ததந் தோவினித் தானென்செய்
திருக்கோ கரணத் திறையே எனக்கருள் செய்குவையே.

---

154. அன்னம் - சோற்றை. பலத்திஞெடும் - பழத்தோடும். மிசைவேம் - உண்போம். உன் தாள் உன்னம் - நின் திருவடியைத் தியானியோம். பலத்தின் - நல்ல பயனுன வாழ்வில். உறுவரிஞல் துன்னு அம் பல் அத்தி - பகைவரால் வந்த அழகிய தந்தத்தையுடைய கயமுகாசுரனை. சுதை - சுண்ணும்பு.

155. கேடு அலவன் அம்புதி செய்ய - துன்பத்தைச் சந்திரனும் கடலும் செய்ய. மிக வாடல் அவன் அம்பு உறுத்த; வாடல் - வாட்டத்தை; அவன் - மாரன். ஆடல வனம் புனை - அசைதலையுடைய நீரைப் புனைந்த. பாடலவனம் - பாதிரிச் சோலை. இது தலைவி கூற்று.

156. தோழி தலைவியை வரைந்து கொள்ளும்படி கூறுதல். ஏகு ஆய மன்ற - நான் சொல்வதை நிரம்ப ஆராய நீ இப்போது போவாயாக. தனி நோக்கி என்னை - என்னைத் தனியே பார்த்துப் பயன் யாது? இழித்த உரை வாகா - அயலார் இழிவு கூறிய பழிமொழி பொருத்தமாகுமா? அம் மன்றத் தகை உண ராய் அல்லை - அந்தச் சபையினருடைய தன்மையை நீ அறியாய் அல்லை. மன்றல் செய்து நீ கா - ஆதலின் இவளைத் திருமணம் செய்துகொண்டு நீ காப்பாற்று வாயாக. யமன் தத்து அற அடியார்க்கு அருள். ஆகாய மன்றம் - சிதம்பரம்.

157. வெரு கோகு அரணம் இழந்தாங்கு - அச்சத்தை உடைய கழுதை பாதுகாப்பை இழந்ததுபோல. மரு கோகர் - மணத்தையுடைய தோளைப்பெற்ற விட புருடர்கள். அணவிய - கூடிய. தருக்கோ கரணம் புதைத்தது - அகங்

158. முத்தன நங்கை மணாளா மதுரை முதலவவெங்
கொத்தன னங்கைக் கணியெனக் கொண்ட குழகனெனக்
குத்தன நங்கை யொழித்தா ளெனத்துதி கூறினேம்மு
கத்தன னங்கைய நீர்குறட் கீந்தவன் காப்பனெஞ்சே.

159. புரந்தர னங்கி சுரரோட வென்றருட் பூவையொடு
நிரந்தர னங்கி யெனநின்ற வாவுண் ணினைப்பின்றிமந்
தரந்தர னங்கிழந் தெய்த்தார் விவேக தனத்தரவன்
வரந்தர நங்கின்றி வாழ்ந்தா ரநேகரிவ் வையகத்தே.

160. கங்கங்கங் காநதி வேய்பர மாவுல கத்துயிர்தோ
றங்கங்கங் கானதி கம்பர கோமுத்தி யையவுடற்
பங்கங்கங் கானதி கக்குழற் கீயும் பரமவென்பம்
மங்கங்கங் கானதி வர்வோ னையுமுண் மதிக்கிலமே.

-காரம் என் அந்தக்கரணத்தை மூடியது. திருக்கோகரணம் - ஒரு சிவத்தலம்.

158. முத்தன நங்கை - தடாதகைப்பிராட்டியாகிய மீனாட்சி. கொத்து அனல் நம் கைக்கு அணி எனக் கொண்ட. எனக்குத் தன நங்கை ஒழித்து ஆள்-எனக்குச் செல்வத்தால் உண்டாகும் பழியை நீக்கி ஆள்வாயாக. ஐம்முகத்தன்-சிவபிரான். அனமும் கையில் வரும் நீரும் குறளுக்கு ஈந்தவன்; குறள் - குண்டோதரன்.

159. புரந்தரன் - இந்திரன். அங்கி - அக்கினி. வென்று - தக்கயாக சங்கார காலத்தில் வென்று. அருட்பூவையொடு - அருட்சக்தியாகிய தேவியோடு-நிரந்தரன் - நிலையாக இருப்பவன். அங்கி - மற்ற எப்பொருளையும் தன் அங்க மாகக் கொண்டவன். நின்றவா - நின்றவாற்றை. மந்தர் அந்தர் - மந்த புத்தி யுடையவராகியும் குருடராகியும். அனங்கு இழந்து - தாம் சிவபெருமான் யோகத் தைக் கலைக்க விட்ட மன்மதனை இழந்து. எய்த்தார் - சோர்வுற்றார். விவேக தனத்தர் - அறிவுச் செல்வமுடையராகிய தேவர்கள். அவன் - சிவ பெருமான். வரந்தர - வரம் தருவதனால். நங்கு இன்றி - பழியில்லாமல். அறிவுடைய தேவர்கள் தக்க யாகத்தில் சிவபிரான் பெருமையை அறிந்தும் அதை மறந்து காமனை அவன் பால் விட்டுச் சோர்ந்தனர். ஆனால் எளியராகிய உலகத்தவரோ அவனைப் பணிந்து வாழ்ந்தார் என்றபடி.

160. கங்கு அம் கங்கா நதி - கரையால் அழகிய கங்கையாறு. வேய் - தலையில் அணிந்த. உயிர்தோறு அங்கு அங்கு அங்கு ஆன திகம்பர. கோமுத்தி - திருவாவடு துறை. உடற் பங்கு அங்கம் கான் அதிகக் குழற்கு ஈயும் - உடலின் பாதியாகிய அங்கங்களை நறுமணம் மிகுதியான குழலையுடைய அம்மைக்கு வழங்கும். என்பம் - என்று துதிப்போம். மங்கம் - மங்கமாட்டோம். கங்கு ஆனது இவர்வோனையும் - கருடன்மேல் வரும் திருமாலையும்.

161. தொண்டான மானக தூரிய வோதை துதையுமெழில்
வண்டான மானக ராயசெவ் வந்தி வளர்வள்ளலுக்
கெண்டான மானகஞ் செற்றுவந் தானுக் கினியெமைநீ
கண்டான மாநக ருற்று லழிகுதி கட்டுரையே.

162. நோபா தகந்தவ ருதுற லாலுளம் நொந்துநின்றன்
ஆபா தகந்தரி சித்தறி யேனையு மாள்தல்நன்றே
நீபா தகந்தக மென்னப் புரஞ்செற்ற நித்தமத்தன்
மாபா தகந்தவிர்த் தாய்திருக் கூடல் மகேச்சுரனே.

163. சேயனை யார்கொன்றை வேய்ந்த சடாடவிச் செல்வமுனந்
தாயனை யாது தடுத்தாட் கொளுந்தண் டலைநகராய்
பேயனை யாவற வோருடன் கூடப் பெரிதியற்றி
நாயனை யாருடன் சேராது காப்பதுன் னல்லருளே.

164. நற்றவத் தார்தினந் தெண்டனிட் டேத்தி நவில்துறைசைப்
பற்றவத் தார்கொன்றை யாக்கொண்ட வேணிப் பகவ
என்றும்

---

161. யமனை நோக்கிக் கூறியது. தொண்டான் - யாம் செய்யும் தொண்டினால். தொண்டால் இனியெம் என்று முடியும். அம் ஆனக தூரிய ஓதை துதையும் - அழகிய முரசும் வாத்தியங்களும் எழுப்பும் ஓசை செறியும். வண் தானம் மால் நகர் ஆய - வளம் பெற்ற இடமும் பெருமையையுடைய நகருமாகிய. செவ் வந்தி - திரிசிரபுரம். எண் தானம் மான் நகம் செற்று உவந்தானுக்கு - எண்ணுதற் குரிய மதத்தையுடைய விலங்காகிய யானையாகிய மலையை அழித்து மகிழ்ந்த வனுக்கு; மான் நகம்: உருவகம். இனியெமை - இனியேமை. வள்ளலுக்கு உவந்தானுக்குத் தொணடான் இனியேமை என்று கூட்டுக. கண்டால் நமா; நமா - நமனே. நகருற்றால் - எம்மைப் பற்ற நகர்ந்தால். அழிகுதி - அழிவாய். கட்டுரை - இது உறுதியான வார்த்தை.

162. நோவும் பாதகமும் தவருமல் அடைதலால். ஆ பாத கம் - அடி முதல் தலைவரையில். நீபா - கடம்ப வனத்திலுறைபவனே; நீபம் - கடம்பு. தகந்தகம் என்ன - தக தக என்று எரிய. மத்தன் - காமப்பித்துப் பிடித்தவன். மாபாதகம் தவிர்த்தது, மதுரைப் பெருமான் திருவிளையாடல்களில் ஒன்று.

163. சேய் - குழவிப் பருவத்திலுள்ள திங்கள். அனை - கங்கையாகிய அன்னை. ஆர் - ஆத்தி. வேய்ந்த - அணிந்த. தாயன் னையாது - அரிவாட்டாய நாயனர் வருந்தாமல். தண்டலை நகர் - ஒரு சிவத் தலம். பேயன் - பேய் போன்ற யான். ஐயா அறவோருடன் கூட இயற்றி.

164. நல் தவத்தார். நவில் - புகழுகின்ற. துறைசைப் பற்ற - திருவாவடுதுறை யென்னும் திருத்தலத்தில் இருப்பவனே; பற்று - ஊர். அத் தார் கொன்றையாக் கொண்ட - அந்த மாலை கொன்றையாக மேற்கொண்ட. என்றும் முற்று அவத்தில்

முற்றவத் தார்சிறு புன்றெய்வ வாஞ்சை முதலறவவ்
வெற்றவத் தார்தம்மிற் கூட்டாது காக்கவிவ் வீணனையே.

165. அறவா னிவரு மழகன்செவ் வந்தி யதிலென்றும்வாழ்
தறவா னிவரும் பரையாளு வோன்பெயர் சாற்றின்மறம்
இறவா னிவரும் பெயர்நல்கு மீதன்றி யேழையரின்
புறவா னிவரு முடனெஞ்ச மேயி துணர்ந்திலையே.

166. ஆடர வம்புலி காணமன் ருடிய வங்கணனைக்
கோடர வம்புலி யன்னவர் போரிற்செய் கொண்டலுக்கா
நீடர வம்புலி வேணியி னுயென்று நெஞ்சுருகார்
மூடர வம்புலி யெல்லா நரகத்து மூழ்குவரே.

167. உருப்பொதி யாசல றச்செயும் பின்னென் றுணர்ந்திலனீள்
மருப்பொதி யாசல மார்நமை யன்றி வடிவமெனுங்
கருப்பொதி யாசல னம்பெறுங் கைநொடிக் காலத்தெணத்
திருப்பொதி யாசலத் தெந்தா யுணர்ந்திலன் செய்வ
தென்னே.

ஆர்கின்ற; அவம் - கேடு. வாஞ்சை முதல் அற - விருப்பம் முதலியன அற. வெற்று அவத்தார் தம்மில் - வீணுகப் பயனில்லாத செயலைச் செய்வோரிடையே; அவம் - பயனின்மை.

165. அற ஆன் இவரும் - தர்ம ரிஷபத்தில் ஊரும். செவ்வந்தி - திரிசிராப் பள்ளி. வாழ்தல் தவான்; தவான் - நீங்காதவன். இஅரும் பரை ஆளுவோன் - இந்த அரிய பராசக்தியை மனைவியாகக் கொள்பவன். மறம் இற - பாவம் அழிய. வான் நிவரும் பெயர் நல்கும் - தேவலோகத்தில் ஓங்கும் புகழைத் தரும். ஏழையர் இன்புற - மாதர் இனபத்தை நுகர. உடல் ஆனி வரும் - உடம்புக்குக் கேடு வரும்.

166. ஆடு அரவம் - ஆடுகின்ற பதஞ்சலி. புலி - வியாக்கிரபாதர். கோடு அரவம் புலி அன்னவர் போரில் செய் கொண்டலுக்கா நீடு அர - சிங்கத்தைப் போன்றவர்கள் எதிர்த்த போரில் சங்கு முழக்கத்தைச் செய்த மேகம் போன்ற திருமாலுக்காக ஓங்கி வளர்ந்த ஹரனே. அம்புலி வேணியினுய் - சந்திரனை அணிந்த சடையை உடையவனே. நெஞ்சு உருகார் மூடர். அவம் புல்லி-கேட்டை அடைந்து.

167. உரு பொதி ஆசு அலறச் செயும் பின் - அடுத்த பிறவியில் இப்போது உள்ள உருவத்தில் அடங்கிய குற்றம் துன்பத்தால் புலம்பச் செய்யும். நீள் மரு பொதி ஆசலம் ஆர் நமை அன்றி - பிறவி தோறும் நீண்டு வருகின்ற வாசனை நிறைந்த துன்பத்தையுடைய உயிராகிய நம்மை யல்லாமல். வடிவம் எனும் கருப் பொதி - உடம்பு என்னும் கருமூட்டை. ஆ சலனம் பெறும் கைநொடிக் காலத்து - அந்தோ ஒரு மாத்திரையில் ஆட்டத்தை அடையும்; ஆ : இரக்கக் குறிப்பு. திருப் பொதியாசலம் - பொதிகை மலை.

168. விண்டானந் தாதி விழைந்தா னமரர் வெருவவிடம்
உண்டானந் தாதிரை யான்சடை மீதி லுறைதிரையான்
வண்டானந் தாதி னலர்மேவுங் கோமுத்தி வாழ்பவன
கண்டா னந்தாதியைக் கண்டாஞ் சனனங் களகலவே.

169. சந்தங் குலேயணி மால்பல காலர்ச் சனைசெய்தனம்
வந்தங் குலேய மருந்திருக் கோமுத்தி வாழ்பவனை
இந்தங் குலேய மிளிர்முகி வாமனை யேத்தினனேல்
பந்தங் குலேய வவனைத் தொழார்சில பாதகரே.

170. நம்பாச முத்திர வாஞ்சைசயி லார்க்கு நலிவறச்சொல்
வெம்பாச முத்தி ரதநுகர் வோர்ந்திவ் விதத்திணையில்
கொம்பாச முத்திர .....தெழி குறிபொருநை
அம்பா சமுத்திரத் தெம்மான் கயிலை யதினண்பனே.

171. பங்கப் பலகை வெலும்விழிக் கீந்த பரன்மதுரை
அங்கப் பலகை தனைமறை யோனுக் ககற்றியதும்

---

168. விண்டான் - மூங்கிலில் தோன்றினவன்; திருநெல்வேலிப் பெருமான். அந்தாதி - சேரமான் பெருமாள் பாடிய பொன்வண்ணத்தந்தாதியை; அது கைலையில் அரங்கேற்றப் பெற்றது. நந்து ஆதிரையான் - பெருகும் ஆதிரை நட்சத்திரத்தை உடையவன். திரை - கங்கை. வண்டானம் - நாரை. தாதை யுடைய தாமரை மலரில் தங்கும். கோமுத்தி - திருவாவடுதுறை. வாழ்பவன், அகண்டானந்த ஆதியை. சனனங்கள் அகலவே கண்டாம்; கண்டாம் - கண்டோம்.

169. திருமாலே இறைவனை ஏத்தியிருக்கச் சிலர் அவனைத் தொழாமல் இருக்கிருர்களே என்ற கருத்தை உடையது இது.

சந்தம் குல்லை அணி மால் - சந்தனத்தையும் துளவத்தையும் அணியும் திருமால். பலகால் அர்ச்சனை செய்து ஏத்தினனேல் என்று முடியும், அனம் வந்து அம் குலை அமரும் - அன்னங்கள் வந்து நீர்க்கரையின் மேல் தங்கும்; அம் - நீர். இந்து அம் குலேய மிளிர்முகி - சந்திரன் தன் அழகு குலையும்படி விளங்கும் முகத்தை யுடைய உமா தேவியார். வாமன் - இடப் பாகத்தில் உடையவன். பந்தம் குலேய - பாசம் அழிய. மால் வாமனை ஏத்தினனேல் சில பாதகர் அவனைத் தொழார் என்று கூட்டுக.

170. பாட்டுக் குறையாக இருப்பதால் முடிவு தெரியவில்லை.

171. பங்கு அப்பு அலகை வெலும் விழிக்கு ஈந்த பரன் - தன் திருமேனியில் ஒரு பங்கை அம்பின் நுனியை வெல்லும் திருவிழியை யுடைய உமாதேவிக்கு வழங்கிய இறைவன். மதுரை - மதுரையில். அம் கப்பு அலகை தனை - அழகை உண்ட பேயாகிய பிரமஹத்தியை. மாபாதகம் தீர்த்த திருவிளையாடலை நினைந்து கூறியது. சங்கப் பலகை புலவருக்கு ஈந்தது ஒரு திருவிளையாடல். அரி வாண

சங்கப் பலகை புலவருக் கீந்ததுந் தாமுணரார்
மங்கப் பலகை குறைத்தா னரியென்பர் வாணனுக்கே.

172. உருவா திரையி னலையுமென் றேயறி வுற்றுமதை
வெருவா திரையி னமிழா துறவொன்று விள்ளுவன்றே
வருவா திரையினன் னம்பூத மஞ்சி வழிநடப்பத்
திருவா திரையி னடித்தா ளடிமலர் சிந்திமினே.

173. குகனு மகப்பயந் தாகாய மேய குழுவினருக்
குகனு மகப்பய மொன்னார்க் குதவு முரமதன
தகனு மகப்பயன் றக்க னுருது தடுத்தவகா
முகனு மகப்பய னின்புகழ் வாழ்த்தச்செய் முன்புவந்தே.

174. தீங்கான மாந்த ருடனிதஞ் செய்வம்நின் சீர்த்தியுட
னுங்கான மாந்த மயலிசை கேட்பம் அருள்வதென்றோ
வேங்கான மாந்தரங் கப்பொது வாக்கொள் விமலமிசை
ஓங்கான மாந்தரு வின்னிழ லாய்கச்சி யூரினனே.

னுக்கு மங்க பல கை குறைத்தான் என்பர். அரி - திருமால். வாணன் - வாணு சுரன். மங்க - மங்கும்படி. குறைத்தான் - வெட்டினன். திருமாலின் செயலைச் சொல்கிறார்களே அன்றிச் சிவபிரானது பெருமையை உணரவில்லை என்றபடி.

172. உரு ஆ திரையின் அலையும் என்றே - நம் உருவம் அந்தோ தோற் சுருக்கத்தால் அலைவுறும் என்று. அதை வெருவாது - திரை வரும் என்று எண்ணி அஞ்சாமல். இரையின் அமிழாது - உணவுச் சுவையில் ஆழ்ந்து போகாமல். உற - இருக்க. ஒன்று விள்ளுவன் - ஒரு வழியைச் சொல்வேன். தேவர் உவா திரையின் அன்னம் பூதம் அஞ்சி வழி நடப்ப - தேவர்களின் யானையாகிய ஐராவதமும், பிரமன் வாகனமாகிய நீர் நிலையில் உள்ள அன்னமும் பூதங்களைக் கண்டு அஞ்சிச் செல்ல. பூதம் என்றது இறைவன் ஆடும்பொழுது உடனிருந்து ஆடும் பூதங்களை.

173 குகன் ஆம் மக பயந்து. மக - புதல்வனை. ஆகாயம் மேய குழுவினருக்கு - தேவருக்கு. உக நாம் - அச்சம் போகும்படி. திரிபாதலின் தந்நகர றன்னகர வேறுபாடின்றி வந்தது. ஒன்னார்க்கு அகபபயம் உதவும் உர - பகைவர்களுக்கு நெஞ்சில் பயத்தை உண்டாக்கும் வலியவனே. மதன தகனு - காமனை எரித்தவனே. தக்கன் மகப்பயன் உருது தடுத்தவ; மகப்பயன் - வேள்வியின் பயன். காமுகனும் அகப்பயல் - காமுகனுகிய அகந்தையை யுடைய சிறியவனுகிய யான்.

174. தீங்கு ஆன - தீமையே வடிவான. இதம் செய்வம் - இதமான செயல்களைச் செய்து நட்பாவோம். நின் கீர்த்தியுடன் ஆம் கானம் மாந்தம் - நின் புகழுடன் உள்ள இசையை நுகரோம். அயல் இசை - வேறு சங்கீதத்தை. வேம் கானம் - பிணம் வேகும் சுடுகாட்டை. ஆந்தரங்கப் பொதுவாக் கொள் - அந்தரங்க

175. பாரத்து வாசந் தவஞ்செயக் கூடற் பதிக்கணருள்
ஆரத்து வாசந் தவரு முடிய னருண்முருகா
கூரத்து வாசந் தவரையற் கோப்புங் குழகவிந்த
நேரத்து வாசந்த வண்ணங்கள் யான்சொல நேருறவே.

176. ஓரா யிரங்கணன் முன்னானிர் தக்க னுடையசெயல்
நீரா யிரங்கண னன்றல வென்று நிகழ்த்திப்பின்னர்ச்
சீரா யிரங்கண னஞ்சணி கண்டச் சிவற்கடிமைப்
பேரா யிரங்கணன் பில்லே மறிவு பெறலெவனே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

177. திருவாப் பாடி தனிலுறையுஞ்
செங்க ணானைத் துதியாது
தருவாப் பாடி யுலுத்தர்களைத்
தவித்துத் திரியும் புலவீர்காள்
ஒருவாப் பாடிங் கிதுவகல
வுயர்ந்தோர் தமைச்சார்ந் தினியேனும்

மான சபையாகக் கொள்ளும். மிசை ஓங்கு - மேலே ஓங்கிய. ஆனம் மாந்தருவின் நிழல்வாய் - தேனையுடைய மாமரத்தின் நிழலில்; ஆனம் - கள்; தேன். கச்சியூர் - காஞ்சீபுரம்.

175. இது முருகன் துதி.

பாரத்துவாசம் - கரிக்குருவி. கூடற்பதி - மதுரை. ஆரத்து வாசம் - ஆத்தி மாலையின் மணம்; ஆரம் - ஆத்தி மாலை. முடியன் - சிவபெருமான். ஆரத்து வாசந் தவரு முடியன் என்பன அனைத்தும் ஒரு பெயராய் நின்று அருள் என்னும் பெயரெச்சத்தின் முடிபாயின. கூர் அத்துவா சந்த வரையற்கு ஓப்பும் - மிக்க அத்துவாக்களைப் பொதிய மலையையுடைய அகத்தியனுக்குப் போக்கிய. குழக - இளமையையுடையவனே. இந்த நேரத்து வா. சந்த வண்ணங்கள் - சந்தமும் வண்ணமும். சொல்ல நேருற இந்த நேரத்தில் வா.

176. இந்திரன் முதலிய தேவர்களை நோக்கிக் கூறும் வகையில் அமைந்தது, இப் பாடல். ஓராயிரங்கணன். முன் ஆனிர் - இந்திரன் முதலானவர்களே. நீர் ஆராய மாட்டீர். அங்கணன் - சிவபெருமான். நன்று அல என்று நிகழ்த்தி - நீர் செய்த காரியம் தக்கதன்று என்று உணர்த்தி. சீராய் இரங்கு அண்ணல் - சிறப்பாகக் கருணை செய்த இறைவன். அடிமைப் பேராய் - அடிமைகளாய். இரங்கு அண் அன்பு இல்லேம் - மனம் உருகும் நெருங்கிய அன்பு இல்லேமாகிய யாம். எவன் - எப்படி.

குருவாப் பாடி யங்களெலாம்
குறிப்பீர் பிறந்தை யறுப்பீரே.

178. சிறந்த வளத்த சேய்ஞலூர்ச்
சிவனை யவநை வுறச்செய்யும்
உறந்த வளத்த கடலைநிக
ருறுபே ரருளி னுத்தமனை
நிறந்த வளத்தண் மதியணிந்த
நிமலன் தன்னை யிமவரையிற்
பிறந்த வளத்த முடையவனைப்
பேணித் தினம்வந் தனைபுரியே.

179. படவா ரணிய முலையரவின்
படவா ரல்குற் பவளவிதழ்
மடவா ரணிய மஞ்சிவணி
வருந்திப் பெருந்துன் பருந்துவேன்
திடவா ரணிய மலைபீடத்தெந்
தேவன் மூவர் திருத்தலைவன்
வடவா ரணியந் தனைச்சார்ந்தேன்
மகிழ்ந்தேன் மலவே ரகழ்ந்தேனே.

180. கனக வரையன் றளித்தமயில்
கணவன் குணவன் பரைப்புரக்கும்
அனக வரையன் றளித்தபுன
லாருஞ் சடைய னிடைமருதப்

---

177. திருவாப்பாடி - ஒரு தலம். செங்கணன் - சிவபெருமான். உலுத்தர்களைத் தருவாப் பாடி - உலோபியரைக் கற்பகமாக வைத்துப் புகழ் பாடி. ஒருவா பாடு இது - நீங்காத துன்பமாகிய இந்த நிலை. குருவா - குருவாகக் கொண்டு. பாடியங்கள் - விரிவுரை நூல்கள். பிறந்தை - பிறப்பு.

178. சிறந்த வளமுடைய. அவம் நைவுற - கேடு அழியும்படி. உறந்த அளத்த கடலை நிகர் - மிக்க உப்பளங்களோடு கூடிய கடலை ஒத்த. நிறம் தவளம் தண்மதி - நிறத்தால் வெண்மையான குளிர்ந்த சந்திரனை. பிறந்தவள் அத்தம் உடையவனை; அத்தம் - அர்த்தம்; பாதி. நெஞ்சே என்ற முன்னிலையை வருவிக்க.

179. பட வார் அணிய முலை-துகிலையும் வாரையும் அணிகளையும் உடைய நகில்கள். அரவின் படம் போன்ற நீண்ட. மடவார் அண் நியமம் சிவணி - பெண்கள். நெருங்கிய இல்லத்திற் பொருந்தி. திட ஆரணி அமலை - உறுதியையுடைய வேத சொரூபியும் மலமற்றவளுமாகிய உமாதேவியையுடைய. இடத்து - இடப் பாகத்தையுடைய மூவர் - மும்மூர்த்திகள். வடவாரணியம் - திருவாலங்காடு.

பனக வரையன் றளித்தவறு
பரிந்தே மகிழ்ந்தின் றிருந்தவிடம்
எனக வரையன் றளித்தருவாழ்
வெனக்கோர் பொருளோ வியம்பீரே.

181. விஞ்சத் தனத்தி னோதனத்தின்
விழைகோ தனத்தி லரிவையர்கள்
கஞ்சத் தனத்தில் வதனத்திற்
கருத்தை யிருத்தி வருத்தமுற்றேன்
அஞ்சத் தனத்தி யானத்த
னத்த னனத்த னத்தனிறைஞ்
சுஞ்சத் தனத்தி யிடைமருதிற்
சுடர்வோ னடிக டொழலென்றே.

182. சயிலச் சுவர்க்க மடமகளிர்
தம்மை விழைந்து மயங்கியிடும்
பையிலச் சுவர்க்கப் புறந்தீற்றிப்
பயில்வே னயில்வேன் றுயில்வேனல்

---

180. கனகவரை அன்று அளித்த மயில் - பார்வதி. குண அன்பரை. அனக அரையன் - பாவமற்ற அரசன். தளித்த - துளித்த. இடைமருதப் பனக அரையன்- இடைமருதில் உள்ள பாம்பை இடையில் அணிந்தவன். தவறு தள்ளிப் பரிந்து - என் குற்றத்தை நீக்கி இரங்கி. இன்று தான் இருந்த இடம் என் உள்ளமாகிய எல்லை. அளி - வண்டையுடைய. தரு வாழ்வு - கற்பக தருவின் நிழலில் வாழும் இந்திர பதவி. பொருளோ இயம்பீர்; அன்று என்க.

181. விஞ்சு அத் தனத்தின்; தனம் - பொருள். ஓதனம் - சோறு. கோதனம் - பசுக்களாகிய செல்வம். கஞ்சத் தனம் - தாளம் போன்ற நகில்கள். அஞ்சு அத்தன் - ஐந்து கைகளையுடைய விநாயகனும். அத்தி யானத்தன் - யானை வாகனனாகிய இந்திரனும். அத்தன் - பொருளுக்குத் தலைவனாகிய குபேரனும். அனத்தன் - அன்ன வாகனத்தையுடைய பிர்ம தேவனும். நத்தன் - சங்கத்தையுடையவனாகிய திருமாலும். இறைஞ்சும் சத்தன். நத்தி - விரும்பி. நத்திச் சுடர்வோன் என்க.

182. சயிலச் சுவர்க்கம் - மலை போன்ற நகிலையுடைய. இடும்பையில். அச் சுவர்க்கு அப்புறம் தீற்றி - உடம்பாகிய அந்தச் சுவர்க்குப் புறம்பே எழுதி; வரதனைத் தீற்றிப் பயில்வேன் என்க; உள்ளே நினையவில்லை என்றபடி. அயில் வேன் - நிரம்ப உண்பேன். அயில் அச்சு உவர்க்கடலும் வரையும் ஆக்கி - உண்ணும் வலிய உப்புக்கடலையும் மலைகளையும் ஆக்கிய திருமாலை; அவற்றை உணவாகக் கொண்டவன் என்றபடி. ஆக்கி; பெயர். அத்தன் - பாதி உருவத்

அயிலச் சுவர்க்க டலும்வரையு
மாக்கி யத்த னிடைமருதின்
மயிலச் சுவர்க்க மருளியவம்
மையினோ டமரும் வரதனையே.

183. தானந் தவநன் கியற்றுநர்மேற்
றழலூ டுழல்வா ரென்பவந்தோ
யானந் தவனன் மருவாமல்
எந்தாய் கருணை தந்தாளென்
றானந் தவன னிடைமருதி
னமல னைங்கை மகவனன்பல்
லூனந் தவன னுறச்செய்த
வும்பன் றன்னை நம்புதுமே.

184. மறவா தடிக்க மலம்வணங்கி
வழுத்த வறியேன் மடந்தையர்கா
தறவா தடிக்க வுடன்மிகவுந்
தடித்தே னிடைமா மருதுறையும்
அறவா தடிக்கத் திதலைபடர்
அருப்பு முலையம் பிகைக்கென்றும்
உறவா தடிக்கப் பனையசடை
யுடையா யருளை வழங்குதியே.

தில் உடையவன்; அவனுக்குத் தலைவன் எனலுமாம். இடைமருதிலுள்ள மயிலாகிய பல வகைஉடம்பு வகைகளை உயிர்களுக்கு நல்கிய அம்மையோடு. அச்சு-உடம்பு.

183. தானத்தையும் தவத்தையும் இம்மையில் நன்கு இயற்றுதவர்கள். மேல் - அம்மையில். தழலூடு - நரகத் தீயில். என்ப - என்று பெரியோர் கூறுவர். யான் அந்த அனல் மருவாமல். ஆனந்தவனன் - காசியில் இருப்பவன். ஐங்கை மகவன் - ஐந்துகையையுடைய கணபதியாகிய குழந்தையை உடையவன். நன் பல் ஊனத்தைத் தவனன் உறும்படி செய்த. தவனன் - சூரியன். தக்க யாக சங்காரத்தில் சூரியனது பல்லை இறைவன் உதிர்த்தான் என்பது வரலாறு. உம்பன் - தேவன்.

184. அடிக் கமலம் மறவாது வணங்கி. மடந்தையர் காதல் தவாது. தவாது அடிக்க - நீங்காமல் மோத. அறவா - அறமே உருவானவனே. தடிக்க - பெருக்க. திதலை - அழகுத் தேமல். அருப்பு முலை - தாமரை மொட்டுப்போன்ற நகில். உறவா - அன்பா. தடிக் கப்பு அனைய - மின்னற் கிளை போன்ற.

185. காட்டஞ் சுமந்த திருமுடியுங்
கமலை மறுகி னடந்தமலர்த்
தாட்டஞ் சுமந்த ரங்கமுளார்
தம்மைப் புரத்த றெரித்திடலும்
பாட்டஞ் சுமந்த விடைமருதிற்
பரமன் புகழைப் பரவுதலும்
கேட்டஞ் சுமந்த மனத்தனலங்
கெழுமத் துதியே னிதுவென்னே.

186. சுதத்தி ளுனுங் குறப்பட்டுச்
சுழல லொழிந்தின் புறவையா
யுதத்தி ளுனு மறவானு
முடையா னடையார் புரமெரித்த
கதத்தி ளுனுந் துறுசுடர்நேர்
கருத்த னிடைமா மருதமலன்
பதத்தி ளுனுந் தமருநிதம்
பணிவோம் வழுத்தத் துணிவோமே.

187. ஆதந் தினமும் படித்தறியேன்
அடியர் தம்மை யடுத்தறியேன்
வாதந் தினமும் புரிந்துழல்வேன்
மறந்துங் கடையர் கடைத்தலையிற்

---

185. காட்டம் - விறகை. கமலை - திருவாரூர். நடந்த மலர் போன்ற தாளாகிய பற்றுக்கோடும்; தஞ்சு - பற்றுக்கோடு; சுந்தரமூர்த்தி நாயனுருக்காகப் பரவைபால் தூது சென்றதை நினைந்தது. அந்தரங்கம் உளார் - உள்ளத்தோடு ஒட்டிய அன்புடையார். முடியும் தாளும் அன்பர்களை இறைவன் பாதுகாத்தலை உணர்த்துவதையும். பாட்டு அஞ்சும் - பஞ்சபுராணம் என்று வழங்கும் ஐவகைத் திருப்பாடல்களும்; தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்பன. தெரித்திடலும் பரவுதலும் கேட்டு, அஞ்சும் சுமந்த மனத்தன் நலம் கெழும.

186. சுதத்திஞல் நுங்குறப்பட்டு - அழிவினுல் உண்ணப்பட்டு; நாச மடைந்து. ஒழிந்து இன்புற நானும் தமரும் பணிவோம் என்று முடியும். ஐபாயுதத்தின் ஆனும் அற ஆனும் உடையான் - ஐந்து ஆயுதங்களையுடைய இடபத்தையும் தருமமாகிய இடபத்தையும் உடையவன்; முன்னது திருமாலாகிய இடபத்தைக் கூறியபடி. அடையார் - பகைவர்களுடைய. கதத்திஞன் - கோபத்தை உடையவன். நுந்துறு சுடர் நேர் கருத்தன் - தூண்டும் சுடர்போன்ற தலைவன்; "தூண்டு சுடரனைய சோதி கண்டாய்" (தேவாரம்.) பதத்தில் நானும் தமரும்; தமர்-உறவினர்.

போதந் தினமும் வருந்தாதுன்
புகழைப் பாட வருளடைந்தோர்
ஏதந் தினமுந் தியவளங்கொள்
இடைமா மருதி னுறையிறையே.

188. வாச வருக்க மலர்த்தெரியல்
வனைந்த சடையா யிடைமருதத்
தீச வருக்க னழன்மதிக்கண்
எந்தா யிறைஞ்சி யேத்துதற்குக்
கூச வருக்கன் பகன்றகுணக்
குன்றே யின்றே தொழுமடியேன்
பாச வருக்கங் களைந்தின்பப்
பரவை படியப் பணித்தருளே.

(வெண்பா)

189. பாடலவ னத்துப் பயில்சுந்த ரேசன்மன்றில்
ஆடலவ னன்பினபி ராமிதனை—நீடலுறு
மண்களிக்கச் செய்யும் மணக்கோலக் காட்சிகண்டு
கண்களிக்க வாருமன்பர் காள்.

190. தூயவர நதிமிலைந்த தேனுபுரே சப்பெருமான்
சுகுண மிக்க
நேயவடி யவரையினி தாட்கொள்வான் திருவுளத்தில்
நினைந்தே வில்லென்

187. ஆ: இரக்கக் குறிப்பு. தந்து இனமும் - நூல் வகைகளையும். வாதம் தினமும் புரிந்து. கடைத்தலையிற் போதந்து இன்னமும் வருந்தாது. அருள் - அருள்வாயாக. அடைந்தோர் ஏதம் தின்ன - தன்னை அடைந்தவர்களின் துன்பத்தை அழிக்க. தின உறை என்று முடியும். முந்திய வளம் - முற்பட்ட வளம்.

188. வாச அருக்க மலர்த் தெரியல் வனைந்த - மணத்தையுடைய எருக்கு மலர் மாலையை அணிந்த. இடைமருதத்து ஈச. அருக்கன் அழல் மதி கண் - சூரியன், அக்கினி, சந்திரன் ஆகிய கண்களையுடைய. ஏத்துதற்குக் கூசு அவருக்கு அன்பு அகன்ற - துதிப்பதற்கு நாணும் அத்தன்மையுடையவர்களுக்கு அன்பு நீங்கிய. பாச வருக்கம் - பாசவகை. இன்பப்பரவை - ஆனந்தக்கடல்.

189. கருப்பூர் என்ற பாடலவன க்ஷேத்திரத்திலுள்ள சுந்தரேசுவரர் திருக்கல்யாண உற்சவப் பத்திரிகையின் தலைப்பில் அமைத்த பாடல்; விக்ருதி, மார்கழி, 10-ஆம் தேதி.

மன்றில் ஆடலவன் - சிற்சபையில் நடனம் செய்பவன்.

ருயமதி வளருமமா வாசையிலம் பிகையோடும்
அணைந்தே காட்சி
ஏயவளித் தனன்கண்டு மகிழ்வுற்றேன் எண்ணிலதற்
கீடொன் றின்றே.

(கட்டளைக் கலித்துறை)

191. தேவாதி தேவன் இடைமா மருதிற் சிவபரனம்
மூவா முதலிர தாருட ஞந்தொறும் முன்னமெவ்வா
றேவா வடம்பிடித் தீர்ப்பவ ரோடும்வந் தீர்ப்பித்திர்கொல்
பாவாரீஞ் ஞான்றுமவ் வாறே புரிமின்கள் பண்பர்களே.

192. தழலுக்கு வாழ்விட மாகிய நெற்றியன் சங்கரன்பூங்
கழலுக்குப் பாடு படாதுட லுக்குக் கடும்புகளுக்
கழலுக்கு நேர்மொழி மின்னார்முன் னார்களுக் காவுழைத்து
விழலுக்கு முத்துலை போட்டிறைத் தேனென் விதிவசமே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

193. திருநின்றி யூரொடுசீர்த் திருப்புன்கூர்த் திருநீடூர்த்
தேவா ரங்கள்
தருநன்றி தனையென்று மறந்தொழியா துணைவழுத்தத்
தயைசெய் வாயோ
மருநின்ற மலர்க்குழலார் தமக்குழைத்து வீணர்களை
வழுத்துந் தீய

---

190. தேனுபுரேசர் - திருப்பட்டீச்சுரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். வில் என்று ஆய மதி - தனுர் மாதமாகிய மார்கழியில்.

191. திருவிடைமருதூர்த் தேரை இழுக்க வேண்டுமென்ற விருப்பத்தைச் சொல்லியது.

மூவா முதல் - முதுமை அடையாத முதல். இரதாருடன் ஆம் தொறும் - திருத்தேரில் எழுந்தருளும்போதெல்லாம். ஏவா - ஏவி. முன்னம் எவ்வாறு இழுக்கச் செய்தீர்களோ அப்படியே இன்றும் செய்யுங்கள்.

192. தழலுக்கு - அக்கினியாகிய கண்ணுக்கு. கடும்புகளுக்கு - சுற்றத்தினருக்கு. அழலுக்கு நேர் - தீயை ஒத்த. மின்னார் முன்னார்களுக்கு - பெண்டிர் முதலியவர்களுக்கு. விழல் - எதற்கும் பயன்படாத ஒருவகைப் பூடு. முத்துலை - மூன்று ஏற்றங்கள்.

193. ஐயரவர்கள் சென்னை வந்த பின்பு தேவாரங்களைப் பாராயணம் பண்ணும்போது ஒவ்வொரு பதிகமும் முடிந்தவுடன் பாடல்கள் சில பாடுவது

கருநின்ற பிறந்தையுறச் செய்குவையோ அறியகிலேன்
கயிலை வாழ்வே.

194. திருப்புன்கூ ரெனுந்தலத்திற் சிவலோகப் பெயர்மருவிச்
சேர்ந்த செல்வன்
மருப்புல்கு திருவடியை நினைந்துசிவ லோகமுற
மதியா தந்தோ
உருப்புல்கு வீணர்கள்தம் வழிச்சென்றுங் கவருரைத்த
துவந்து வந்தே
கருப்புல்கும் வழியடைய முயன்றிடுவே னலமுறலெக்
கால மேயோ.

195. பூவணமுந் திருச்சுழியற் பூம்பதியுங் குற்றலப்
பொருப்பு மாய
பாவணமார் பதிகளின்தே வாரவமு தம்பருகிப்
பாவி யேன்றன்
நாவணமார் தரவிழிகள் திருமேனி தரிசியா
நவையென் னேயென்
றேவணஞ்சாம் புறுமாலென் புரிவேன்றென் கயிலையுறை
யெம்பி ரானே.

196. பேயழைத்தா லெனவொருவ னிருவரைக்கொண் டெனையழைப்பப்
பேதை நெஞ்சஞ்
சீயழைத்த தென்னவவ மதிப்பென்று சிதைந்ததைநீ
தெரியாய் கொல்லோ
நீயழைத்தால் நினதடியர் தாமழைத்தால் வருந்துறுமோ
நேய நெஞ்சம்
தாயழைத்தா லுவவாத மகவுண்டோ தென்கயிலைத்
தம்பி ரானே.

வழக்கம். இந்தப்பாடல் தொடங்கி வருவன அப்படிப் பாடியவை. இந்தச் செய்யுள் பாடிய நாள், 17-11-1914.

நன்றி - உபகாரம். பிறந்தை - பிறப்பு.

194. சிவலோகப் பெயர் - சிவலோகநாதன் என்னும் திருநாமம். மரு - நறுமணம். கரு - பிறவி.

195. பூவணம் - திருப்பூவணம். பா வண்ணம் ஆர் - பாவின் அழகு நிரம்பிய. நவை - குற்றம். என்றே வண்ணம் சாம்புறுமால் - என்றே இயல்பு வாடும்.

(குறள் வெண்பா)

197. நின்னை நினைந்தடியேன் நின்பேர் வழுத்துறுவேன்
என்னை அளித்தியிறை யே.

198. அடிநினைவ தெவ்வா றருட்டெங்கூர் ஈச
கொடியவனுக் கவ்வழியைக் கூறு.

199. வாயே பலவகையா வந்தவிடர் மாறுறவே
தாயே அனையானைச் சாற்று.

(கலிவிருத்தம்)

200. ஈனசம் பந்தமா ரிவ்வுடல் விழைதியால்
ஞானசம் பந்தனூர் நவில்பதி கஞ்சொலி
வானசம் பந்தமார் மயேந்திரப் பள்ளிசேர்
ஊனசம் பந்தமால் ஒழிதியா னெஞ்சமே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

201. தேனிருக்குஞ் சுவைத்தமிழே சீரியர்நாப் பயிலமுதத்
தெளிவே இந்த
ஊனிருக்கும் துயராலும் உள்ளொன்று புறமொன்றும்
உலக ராலும்
ஏனிருக்க வேண்டுமென எண்ணுகின்றேன் நினைப்பிரிய
எண்ண மில்லேன்
மானிருக்கும் கரதலத்து வள்ளலருள் வழங்கியிடர்
மாய்த்தாள் வாயே.

(வெண்பா)

202. ஒருமுல்லை வாயி னுமையிடத்தான் வாழ்தென்
திருமுல்லை வாயில்தனைச் சேர்ந்தே—கருமுன்னும்
துன்பந் துடைத்தி துளிமண்டி யோதிமல
வன்பந் துடைத்தி மனம்.

---

197. அளித்தி - காப்பாயாக. இதைப் பாடிய நாள் : 18-12-1914.

198. இதைப் பாடிய தேதி : 9-10-1916.

200. ஈன சம்பந்தம் - இழிந்த தொடர்பு. மால் - மயக்கத்தை.

201. தமிழை முன்னிலைப் படுத்திச் சொல்லியது. பாடிய தேதி 25-12-17

202. ஒப்பற்ற முல்லை போன்ற பற்களையுடைய வாயைப் பெற்ற உமாதேவியை இடப்பாகத்திலே கொண்டவன். கரு - பிறவி. முன் ஆம் - முதலாகிய. துடைத்தி - துடைப்பாயாக. துளி மண்டி - கண்ணீர் மிகுதியாகி. வன்பந்து உடைத்தி - வலிய பந்தத்தை உடைப்பாயாக; பந்தம் என்றது பந்து என நின்றது. மனம் : விளி.
பாடிய தேதி : 26-12-1917.

203. மனமே அடைதி மடல்வரையென் றேனேத்
தினமே நினைதி தெளிதி—இனமார்
நலிக்காமூர் வேலி நளிர்சோலை சூழ்ந்த
கலிக்காமூர் ஈசன் கழல்.

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

204. நித்த நித்தலு மோதி நியதியொ டேநிலை நின்று
சுத்த முக்குள நீரில் தோய்ந்து தொலைவில்வெண் காட்டில்
அத்த ஞரரு ணுடி அனுதின மைந்தெழுத் தோதின்
மத்த மாகிய மாய வலையறுப் பாய்மட நெஞ்சே.

(தரவு கொச்சகக்கலிப்பா)

205. சாய்க்காட்டுப் பதிகத்திற் சண்பையர்கோன் பணித்தருளும்
வாய்க்காடு முதுமரமே யிடமாக வந்தடைந்த
பேய்க்காடல் புரிந்தானென் பதைக்கொண்டிப் பேதையேன்
ஆய்க்காடு தவிராலங் காடடையச் செய்ததென்னே.

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

206. தோடுலா மலர்க டூவி யென்றுவா கீசர் சொற்ற
பீடுலாம் பதிகந் தன்னைப் பிறழ்ந்திடா தோதி நெஞ்சே
ஈடுலாந் திருச்சாய்க் காட்டெம் மீசனை நினைதி யாயிற்
பாடுலாம் பிறவி யென்னும் பௌவத்தைக் கடந்துய் வாயே.

---

203. பாடிய தேதி : 27-12-1917.

ஈசன் கழலை மனமே அடைதி ; அடைதி - அடைவாயாக. மடல் வரை-தாளில் அவன் புகழை வரைவாயாக. என் தேனை - என்னுடைய தேன் போன்றவனை. நல் இக்கு ஆம் ஊர் வேலி - நல்ல கரும்பின் சாறு பரக்கின்ற வயல்களை உடைய.

204. பாடிய தேதி : 28-12-1917.

நியதி - வரையறை. முக்குளம் - சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம் என்ற மூன்று தீர்த்தங்கள் ; இவை திருவெண்காட்டில் உள்ளவை. மத்தம் - அகங்காரம்.

205. சண்பையர் கோன் - திருஞான சம்பந்தர், இங்கே குறித்தது, " போய்க் காடே மறைந்துறைதல் புரிந்தானும் பூம்புகார்ச் சாய்க்காடே பதியாக உடையானும் விடையானும் வாய்க்காடு முதுமரமே இடமாக வந்தடைந்த, பேய்க்காடல் புரிந்தானும் பெரியோர்கள் பெருமானே " என்ற திருப்பாட்டிலுள்ள இரண்டாவது அடி. ஆய்க்காடு தவிர் - தாயின் கூட்டத்தை மாற்றுகின்ற ; பல பிறவிகளை எடுக்காமற் செய்யும் என்பது கருத்து.

206. பாடிய தேதி : 30-12-1917.

" தோடுலா மலர்கடூவி " என்பது நான்காந் திருமுறையில் வரும் திருச்சாய்க் காட்டுப் பதிகத்தின் தொடக்கம். வாகீசர் - அப்பர். பாடு - துன்பம்.

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

207. பாவத்தை மிகச்செய்தே பயன்றுய்க் குங்கால்
பரிதவித்துத் துன்பமுறும் பாவி நெஞ்சே
கோவத்தை அடையாமல் கேட்டி நிற்றி
குளிர்மதியும் வெவ்வரவுஞ் சடைமேல் வைத்தார்
ஓவத்தை நிகருமையாள் வலப்பால் மேய
உத்தமனூர் சாய்க்காட்டை இனித டைந்தே
ஆவத்தை யொழிக்கவெனச் சரணம் புக்கால்
அல்லலெலா மறுத்தின்ப மடைந்துய் வாயே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

208. படியா ரேத்தும் பட்டி னத்துப்
பல்லவ னீச்சரஞ்சார்ந்
தடியார் பெருமை அறிந்தே அவரோ
டன்பி னரனடியை
முடியால் வணங்கிச் சரணம் புக்கால்
மும்மைத் துயரமுந்தீர்ந்
தொடியாப் பாவ விலங்குந் தீர்ந்தே
உறுவா யின்புளமே.

(கலிவிருத்தம்)

209. பரசு பாணிய ரென்றுசம் பந்தனூர்
உரைசெ யும்பதி கத்தை யுரைத்தரி
இரைசெய் பல்லவ னீச்சர மெய்தினோர்
திரைசெய் வேணிச் சிவனடிக் கன்பரே.

(தரவு கொச்சகக் கலிப்பா)

210. கண்காட்டு நுதலானென் றருள்பெருகிக் கழுமலக்கோன்
பண்காட்டு மொழியுடையான் பதிகமதை யோதினது

---

207. பாடிய தேதி : 31-12-1917.

ஓவத்தை - சித்திரத்தை. உமையாளின் வலப்பாகத்தே தங்கிய.

208. பாடிய தேதி : 1-1-1918.

படியார் - உலகத்தவர். மும்மைத்துயரம் - தாபத்திரயம்.

209. அரி - வண்டு. திரை செய் வேணி - கங்கை அலைகளை உண்டாக்கும் சடை.

மண்காட்டும் விண்காட்டும் மாதேவன் கழல்காட்டும்
எண்காட்டு மியல்காட்டு மின்பமெலாங் காட்டுமே.

(கலிநிலைத்துறை)

211. அன்பர்க் கெளிய னமரர்க் கரிய னன்பில்லா
வன்பர்க் கரியுள் வேரு நினையு மாட்சியார்
துன்பந் துடைக்குஞ் சோதி வெண்கா டடைநெஞ்சே
மின்பங் குடையான் விடையான் கருணை மேவுதியே.

(கலிவிருத்தம்)

212. மந்திர மறைநவில் வரன்வெண் காடடைந்
திந்திரன் வெண்கரி இறைஞ்சு மீசனைத்
தந்திரத் தாலருச் சனைசெய் வாரெவர்
உந்திர வுரவம தொழிவர் வாய்மையே.

213. நன்று சேரன்பர் நாவினிற் றேனூக்கும்
என்று நாவுக் கரச ரியம்புசீர்
துன்று முக்கட் சுயம்புவெண் காட்டினை
என்று முள்கி யிருமட நெஞ்சமே.

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

214. வளம்படைத்த வெண்காட்டில் வாழு மீசன்
மாதேவன் மீதமுத வாக்கின் மன்னர்
உளம்படைத்த அன்பினவில் தாண்ட கத்தை
ஒருகாலே யெனினுமுன்னி யோது வோர்கள்

---

210. கழுமலக் கோன் - திருஞான சம்பந்தர். ஓதின் அது. எண் காட்டும் - கணிதத்தை அறிவிக்கும்.

211. வன்பர்க்கு அரி - பகைவருக்குச் சிங்கம். உள் வேரு நினையும் மாட்சியார் - தம் முள்ளத்தே தனியே நிறுத்தித் தியானிக்கும் பெருமையுடைய அடியவர். மின் - உமாதேவியார்.

212. மந்திரங்களையுடைய மறை. வரன் - உயர்ந்தவன். தந்திரத்தால் - ஆகம முறையினல். உந்து இரவுரவமது ஒழிவர்; இரவுரவம் - ஒரு நரகம். வாய்மை - இது உண்மை.

213. பாடிய தேதி : 6-1-1918.

துன்றும் - பொருந்திய. உள்கி - தியானித்து.

களம்படைத்த உயிரியல்பும் பதியா முக்கட்
கடவுளின்றன் மையுமுணர்ந்தே கரைந்தே யுள்ளம்
தளம்படைத்த கடுக்கையணி யமலன் றாளைச்
சார்குவார் பவத்துயரந் தீர்கு வாரே.

(தேவாரச் சந்தம்)

215. நாவல் வந்த நாவ லவர்
நலவெண் காட்டில் அமலன் றன்னை
ஆவ லூற்றுக் கேட்ட பதிக
மதனை யன்பி னோது வோர்கள்
காவ லவர் காப்பு மேவிக்
கவினுந் திருவுங் கனக்க மேவித்
தீவல் பகையுஞ் செற்றே யீசன்
றிருவ டிக்கன் புறுவார் தாமே.

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிப விருத்தம்)

216. கண்ணுத லெந்தைபெம் மானரவக்
கங்கண னங்கையோர் பங்குடையான்
விண்ணுத லுந்திருக் காட்டுப்பள்ளி
வேதியன் வேதியர் நாதனம்பன்
பண்ணுதல் பாட லருதில்லைப்
பதியி னடஞ்செய் பரமன்றாளை
எண்ணுதல் செய்யடி யேனுக்கென்றும்
இடரிலை யிடரிலை இடரிலையே.

---

214. வாக்கின் மன்னர் - திருநாவுக்கரசர். களம் படைத்த - உலகமாகிய இடத்தைப் பெற்ற. உள்ளம் கரைந்து. தளம் - இதழ். பவத்துயரம் - பிறவித் துன்பம்.

215. பாடிய தேதி : 8-1-1918.

நாவல் - திருநாவலூர். நாவலவர் - சுந்தரமூர்த்தி நாயனார். கேட்ட பதிகம் - "விடங்க ராகித் திரிவ தென்னே வேலை சூழ்வெண் காடனீரே" என்று ஒவ்வொரு பாடலும் வினவாக முடியும். காவலர் காப்பு மேவி - அரசருக்குரிய ஆட்சியுரிமை பெற்று. இப் பாடல் சுந்தரர் பாடிய தேவாரச் சந்தத்தில் அமைந்தது.

216. பாடிய தேதி : 9-1-1918.

அரவக் கங்கணன் - பாம்பைக் கையில் காப்பாக உடையவன். விண் நுதலும் - தேவலோகத்தினர் புகழும். பண் நுதல் பாடல்.

(கலிவிருத்தம்)

217. காவியங் கண்மட வாளொடுங் கண்ணுதல்
மேவியங் குறைதரும் வெள்ளடை நகரடைந்
தாவியுன் அடிமையென் றன்னவற் பேணுவார்
ஏவிய செய்யுமா லிரும்புவி உயிர்களே.

(தரவு கொச்சகக்கலிப்பா)

218. முத்தனை வெள்ளடைவாழ் முழுமணியை உயிர்க்குயிராம்
அத்தனை மழுவேந்தும் அத்தனைக் காளத்திக்
கத்தனை நாவலர்கோன் கனிந்துரைத்த பதிகமதாம்
இத்தனை யாமாற்றை யியம்புவோர்க் கிடரிலையே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

219. பிறையணி சடைமுடி வானவன் கானவன்
பேணார் புரமூன்றும்
மறையணி வாய்நகைத் தீக்கிரை யாக்கிய
வள்ளல் உமையோடும்
உறையணி காழியி லுதித்தருள் பெரியவர்
உவந்தே யுரைசெய்த
நறையணி தோடுடை யசெவி யென்பதை
நவில்வோர் பெரியோரே.

(தரவு கொச்சகக் கலிப்பா)

220. பேணாதார் புரமெரித்த பெருமையினன் பிறைச்சடையான்
நாணாகச் சிலையுடையா னன்முகனார் வழிபட்ட

---

217. பாடிய தேதி : 10-1-1918.
வெள்ளடைநகர் - வெள்ளடை என்னும் ஆலயத்தையுடைய ஊராகிய திருக்குருகாவூர். அன்னவன் - அந்தச் சிவபெருமானை.

218. பாடிய தேதி : 11-1-1918.
வெள்ளடை - திருக்குருகாவூரில் உள்ள ஆலயம். அத்தனை - தலைவனை. மழு ஏந்தும் அத்தனை ; அத்தன் - கையையுடையவன். நாவலர்கோன் - சுந்தரர். "இத்தனை யாமாற்றை" என்று தொடங்குவது சுந்தரர் பதிகம்.

219. பாடிய தேதி : 12-1-1918.
கானவன் - வேட்டுவ வடிவம் தரித்தவன். உறை அணி - மழையை அழகாகப் பெற்ற. பெரியவர் - திருஞான சம்பந்தர். நறை அணி - தேன்சுவையைப் பெற்ற "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகத்தைக் குறித்தபடி.

சேணுரு மதில்புடைசூழ் சிரபுரத்துச் செல்வனடி
காணுதார் நலமொன்றுங் காணுதார் காண்மினே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

221. நீரணி வேணியர் தில்லை நிருத்தர் கருத்தர் விருத்தர்
காரணி கண்டத்த ரண்டர் கருதவொண் ணுத பரமர்
போரணி சூலங்கைக் கொண்ட புண்ணியர் தண்ணியர் [புரிசைச்
சீரணி பிரம புரத்துச் செல்வரை நினைமட நெஞ்சே.

(எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

222. நெஞ்ச மேயினி யொன்று ரைப்ப னிலைத்து
நின்றது கேண்மதி
வஞ்ச மேவிய மனிதர் தம்மை வழுத்தி
யெண்ணி வருந்துறேல்
கஞ்ச மேவிய நான்மு கன்கனிந் தேத்தி
வாழ்ந்த கடிநகர்
புஞ்ச மேவிய பெருமை சேர்பிர மாபு
ரம்புகுந் துய்தியே.

223. பிறையணி செஞ்சடையன் பிர மாபுர மேவியவன்
கறையணி கண்டத்தி னமைக் காத்தரு ளண்ணலைவிட்
டுறையணி வாண்முகன்போ லரு குற்றவர்க் காப்பாழுக்
கிறையணி நீர்மையையாய்த் தினம் எய்ப்பதென் னேழை
[நெஞ்சே

---

220. பாடிய தேதி : 13-1-1918.

பேணுதார் - பகைவர். நாண் நாகச் சிலை - நாண் கயிருகப் பாம்பைக் கொண்ட மேருவாகிய வில். சிரபுரம் - சீகாழி.

221. பாடிய தேதி : 14-1-1918.

நீர் - கங்கை. விருத்தர் - பழையவர். புரிசை - மதில்.

222. பாடிய தேதி : 15-1-1918.

கேணமதி - கேட்பாயாக. கஞ்சம் - தாமரை. புஞ்சம் - தொகுதி. பிரமாபுரம் - சீகாழி.

223. இது பாடிய தேதி 16-1-1918. தேவாரச் சந்தம்.

உறை அணி வாள முகன் - உறையை அணிந்த வாளின் முகம். இறை அணி நீர்மையையாய் - இறைத்தலை மேற்கொண்ட இயல்பை உடையையாகி. எய்ப்பது - இளைப்பது.

(கலிவிருத்தம்)

224. நெஞ்சேஎனக் குனேப்போலுள நேயர்பிற ருளரோ
பஞ்சேந்திய முளவேபழி பாவம்மென வேகொல்
தஞ்சேயென வேணுபுரத் தலைவன்கம லப்பூஞ்
செஞ்சேவடி தஞ்சேயெனச் சேரேதுயர் தீரே.

225. மனமு முடலும் வாக்கும் அளவாத்
தினமு மருவித் திகழும் படிசெய்
அனமும் வளையும் அழகாம் வயலின்
இனமும் பயில்வே ணுபுரத் திறையே.

(தரவு கொச்சகக்கலிப்பா)

226. துயர்தீரென் றுன்னடியைத் தொழுதிறைஞ்சிச் சரண்புக்கேற்
கயர்தீர்த்த லுனதுகட னஞ்சினேன் ஆண்டருள்வாய்
மயர்திர்க்கும் வகையில்லை வழியல்லா வழிபுக்கேன்
உயர்தீர்த்தர் பணிவேணு புரத்துறையும் உத்தமனே.

(கலிவிருத்தம்)

227. தமரானவர் போல்பவர் தாம்நிதஞ் செய்யும்
அமராவன யாவையும் ஆற்றகி லேன்யான்
சமரார்கழு முட்படை தாங்கிய செங்கை
விமலாபுக லிப்பதி மேவிய வேந்தே.

(கட்டளைக் கலித்துறை)

228. வேந்தென மேக மெனஉயர் விண்டுவெ ஞநிதமும்
போந்தென புன்மொழி யையன்பிற் புல்லர்கள் பாற்புகன்று

---

224. இது பாடிய தேதி 17-1-1918.

பழி பாவம் எனவோ பஞ்சேந்தியம் உள. தஞ்சு - பற்றுக்கோடு. வேணுபுரம் - சீகாழி.

225. இது பாடிய தேதி 18-1-1918.

அளவா - அளாவி. வளை - சங்கு.

226. பாடிய தேதி 19-1-1918.

அயர் - அயர்ச்சி. மயர் - மயல்; மயக்கம். தீர்த்தர் - தூயவர்.

227. பாடிய தேதி 20-1-1918.

தமரானவர் போல்பவர் - சுற்றத்தாரைப் போலத் தோற்றுகிறவர்கள். சமர் - போர். கழுமுட்படை - சூலாயுதம்.

சாந்துணை யுந்திரி கோநின தாட்கடி யேனலனே
ஏந்துயர் பூம்புக லீசஎண் டோள்கொ ளிறையவனே.

(கலிவிருத்தம்)

229. இறையு மன்பிலேன் இறைஞ்சி லேன்பழி
அறையும் வாயினேன் அவிர்பு கலியை
உறையுங் கோயிலா வுடையன் ஆறும்வெண்
பிறையும் ஏந்திதாள் பேண வல்லனே.

230. பேணவல அன்பரடி பேணுமனம் இல்லேன்
வீணவல மேயுடையன் வெம்மைமிகு பாந்தள்
பூணவல அண்ணலுறை பூம்புகலி தன்னைக்
காணவல னேபிணிகள் கட்டழியு மாறே.

(கலிநிலைத்துறை)

231. ஆறூர்ந்த செஞ்சடையீர் அறமென் றுய வெள்விடையீர்
கூறூர்ந்த சூலத்தீர் கொண்டே யுண்ணு மாலத்தீர்
நீறூர்ந்த வுருவத்தீர் நினைத்தற் கரிய அருவத்தீர்
தேறூர்ந்த புகலியுளீர் சிறியேன் றன்னை யாள்வீரே.

232. விடையதே றிக்கட னஞ்சமுண் டோர்கலை வெண்மதிச்
சடையர்வெம் பாசுப தந்தரித் தோர்முனந் தக்கவர்
கடைகடோ றும்பலி கொண்டவர் அரவணி காதுடையர்
புடைகொளம் மனையினர் வாழ்தரும் புகலியைப் போற்று
[நெஞ்சே

---

228. பாடிய தேதி : 21-1-1918.

விண்டு – திருமால். திரிகோ – திரிவேனே.

229. பாடிய தேதி : 22-1-1918.

இறையும் – சிறிதளவும். ஏந்தி – தலையில் தாங்கியவன்.

230. பாடிய தேதி : 23-1-1918.

வீண் அவலமே உடையன்; அவலம் – துன்பம். பாந்தள் – பாம்பு. புகலி – சீகாழி.

231. பாடிய தேதி : 24-1-1918.

இறைவனுக்குத் தர்மமே இடப வாகனமாக நிற்கிறது. கூறுஆர்ந்த – மூன்று பகுதியாகப் பிரிந்த. தேறு – தெளிவு; தேற்று மரம் என்றும் கூறலாம்; தேறல் என்பது தேறு என்று குறுகியதாகக் கொண்டு தேன் என்றும் கொள்ளுதல் பொருந்தும்.

232. பாடிய தேதி : 25-1-1918.

ஓர் கலை வெண்மதி – ஒற்றைக் கலையையுடைய பிறை. கடைகள் – வாயில்கள். பலி – பிச்சை. புடைகொள் – பக்கத்தே கொண்ட. மனையினர்–தேவியை உடையவர்.

(கட்டளைக் கலித்துறை)

233. ஆண்டவ னேயடி யார்க்கெளி யாய்அர வாபரணம்
பூண்டவ னேதிரு மாலொடு நான்முகன் போய்த்துருவ
நீண்டவ னேஅவி நாசியப் பாவளம் நீடுதில்லைத்
தாண்டவ னேநின தன்படி யேனுக்குத் தந்தருளே.

(வஞ்சி விருத்தம்)

234. போற்றுதி நெஞ்சமே புகலியில்வாழ்
வாற்றுறும் அமலனை யாற்றுறைவான்
கூற்றுறு கண்முனங் குமைத்தஎம்மான்
ஏற்றுறு மிறையவன் எம்மிறையே.

235. ....
....
அலந்தேயுறு மன்பர்க ளல்லல் களைந்தவர்தங்
குலந்தாங்கிய கோமகன் கோளிலி வாழ்பவனே.

(கலிநிலைத்துறை)

236. வாழ்ந்திட வேண்டினெஞ் சேயொரு மாற்றங்கேள் வகுப்ப
கீழ்ந்திடு கீளினன் கிளரராப் பூணினன் கேடிலி [னன்
ஆழ்ந்திடு நீள்கடல் நஞ்சமுண் டேசுர ரார்துயர்
தாழ்ந்திடச் செய்பெரு மான்புக லிப்பதி சார்ந்திடே.

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

237. சார்ந்திடு மைம்பொறித் தன்மை செற்றுச்
சங்கரன் தாளிணை தம்மை என்றும்
சேர்ந்திடும் பத்திகி டைக்க வேண்டிற்
செப்புவ லொப்பில் பெருமை வாய்ந்து

---

233. பாடிய தேதி : 26-1-1918.

துருவ - தேட.

234. பாடிய தேதி : 26-1-1918.

வாழ்வு ஆற்றுறும் - வாழும். அமலன் ஐயாற்று உறைவான். கூற்று உறுகண் - காலனால் வரும் துன்பத்தை.

235. முன் இரண்டடி கிடைக்கவில்லை.

236. பாடிய தேதி : 27-1-1918.

மாற்றம் - சொல். வகுப்பன் - சொல்வேன். கீள் - கோவணம் கட்ட இடையில் அணிவது. அராப்பூண் - பாம்பாகிய அணிகலன்.

237. பாடிய தேதி : 28-1-1918.

கூர்ந்திடு ஞானியர் வாழுஞ் செல்வம்
குலாவு புகலியைக் கூடு பின்னும்
ஆர்ந்திடு கல்வியும் செல்வ மும்பெற்
றமைந்துயர் வாழ்வடைந் துய்தி நெஞ்சே.

238. அடைந்திடு பகைத்துயர் நாடொறும் புல்லர்
அகந்தொறு மடைதுயர் தீர்ந்திட வேண்டின்
உடைந்திடு போது மிடைந்திடு கூந்தல்
ஒள்ளிழை யார்மயல் தீர்ந்திட வேண்டின்
கடைந்திடு பாற்கடல் நஞ்சம துண்ட
கந்தரர் சுந்தரர் கண்ணுதல் வண்டு
குடைந்திடு சோலை குலவிய காழிக்
குருமணி தன்னைக் குறித்திடு நெஞ்சே.

(தேவாரச் சந்தம்)

239. குறித்திடு வெங்குருக் கோயில்கொள் சங்கரர்
தறித்திடு மழுவுடை யாரே
தறித்திடு மழுவுடை யாரடி சார்ந்தவர்
கறித்திடு துன்பிலர் காணே.

(கட்டளைக் கலித்துறை)

240. அலைபோல ஒன்றன்பின் ஒன்றுக வேவந் தலைக்கும்வினை
மலைபோல நின்று வருத்துத லால்மிக மாழ்கிநெஞ்சம்
உலைபோற் கொதிப்புற் றுனையடைந் தேற்கின் புதவலென்
இலைபோலும் வெங்குரு மேய மகேச இறையவனே. [றும்

(தரவு கொச்சகக் கலிப்பா)

241. காண்டகைய பசுங்கிளியே இங்கேவா கனவள்ளத்
தூண்டகைய பாலொடுதே னுணத்தருவேன் உருவமைந்து

238. மிடைந்திடு - செறிந்த. கந்தரர் - கழுத்தை உடையவர். காழி - சீகாழி.
குறித்திடு - தியானம் செய்.

239. தறித்திடு - பொருள்களைத் துண்டாக்கும். கறித்திடு - வெறுப்பதற்குரிய.

240. பாடிய தேதி: 31-1-1918.
மாழ்கி – மயங்கி.

சேண்டகைய மணிமாடத் திருத்தோணி புரத்துறையும்
ஆண்டகைக்கென் ஞருயிர்க்கென் அல்லலெலாம் உரையாயே.

(தேவாரச் சந்தம்)

242. உரைத்திடு வருத்தமு முணர்த்திடுவ
தற்கரியர் உற்ற துயரும்
அரைத்திடு மருட்பெரிய னமரர்பெரு
மானமரு மழிவில் பதிதான்
இரைத்திடு திரைக்கண மெடுத்திடு
வளைக்குலமு மிப்பி யினமும்
விரைத்திடு மகிற்குறடு மேவிமிளிர்
தோணிபுர மாமே.

243. நெஞ்ச மேயுனக் கொன்று நிகழ்த்துவன் கேளினித்
தஞ்ச மேயெனப் பூந்தராய்ச்சங்கரர் தாளிணை
வஞ்ச மோவுறச் சால......
.........லொன் றும்மிலை நம்பிடே.

(கலிவிருத்தம்)

244. நம்பு நெஞ்சமுந் நான்கு பெயர்ப்பதிப்
பம்பு சீரைப் பரவுதி ஈசன்தாள்
வம்பு லாமல ரிட்டு வணங்குதி
சம்பு செய்வன் தலையளி உண்மையே.

245. உண்மை கேட்டிநெஞ் சேஉயர் பூந்தராய்
வண்மை யாளன் மலைச்சிலைக் கையினன்
தண்மை வெண்மதி சார்சடைச் சங்கரன்
பெண்மை வாமத்தி ஞன்புகழ் பேசிடே.

---

241. பாடிய தேதி : 31-1-1918.
கிளிவிடு தூது, ஊண் தகைய – உணவின் தன்மை பெற்ற. தோணிபுரம் – சீகாழி.
242. வளைக்குலம் – சங்குக் கூட்டம். விரைத்திடும் – நறுமணம் வீசும். அகிற் குறடு – அகிற் கட்டை.
243. பாடிய தேதி : 3-2-1918.
பாடல் குறையாக உள்ளது.
244. பாடிய தேதி : 4-2-1918.
முந்நான்கு பெயர்ப்பதி - பன்னிரண்டு பெயர்களை உடைய சீகாழி. வம்பு – மணம். சம்பு – சிவபிரான்.
245. பாடிய தேதி : 5-2-1918.
பூந்தராய் - சீகாழி. மலைச் சிலை - மேருமலையாகிய வில்லையுடைய. வாமம் - இடப்பாகம்.

246. பேசறு பூந்தராய்ப் பித்தர் மீதமை
ஏசறு மின்னன எனுஞ்சொல் மாலையை
நேசமொ டுள்ளமே நித்த மோர்ந்திடின்
ஆசறும் பகைவர தச்ச மில்லையே.

(வெண்பா)

247. இல்லந் தொறுமிரத்த லென்னென்று சம்பந்தர்
புல்லங் கொடியுயர்த்த புண்ணியனை—வல்லம்
பதிகொள் சிரபுரத்துப் பண்ணவனைக் கேட்ட
பதிகத்திற் கில்லை படி.

(வஞ்சி விருத்தம்)

248. படியினில் நிகரறு பன்னிருபேர்க்
கடிநகர்ச் சிரபுரக் கண்ணுதலின்
அடியிணை மலர்களி லன்புடையார்க்
கிடிநிகர் பயமிலை இதுமெய்யே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

249. மெய்ய மேவிய விமலனை யமலைதான்
மேவிய பாலானை
உய்ய வானவர் நஞ்சுண்ட ஒருவனை
ஒள்ளெருக் கலரானை
ஐய மில்மறை பகர்ந்தரு ளாதியை
அத்தியை உரித்தானை
வைய மேத்துசீர்ச் சிரபுர வள்ளலை
வாழ்த்துவோர் வாழ்வாரே.

---

246. பாடிய தேதி : 6-2-1918.

ஏசுஅறும் - பழி அற்ற. மின்னன எனும் சொல் மாலையை - "மின்னன" என்று தொடங்கும் தேவாரத் திருப்பதிகத்தை.

247. பாடிய தேதி : 7-2-1918.

புல்லம் - இடபம். சிரபுரம் - சீகாழி. இங்கே குறித்த பதிகம், "பல்லடைந்த வெண்டலையில்" என்று தொடங்குவது. படி - ஒப்பு.

248. பாடிய தேதி : 8-2-1918.

படி - உலகம். கடி - காவல்.

249. பாடிய தேதி : 9-2-1918.

மெய்யம் - திருமெய்யம் என்னும் தலம். பால் - பாகம். வானவர் உய்ய. எருக்கு அலரானை - எருக்கம்பூவை அணிந்தவனை.

250. வாழ்வா ரவரே கடல்சூழ் புறவம்
மருவி மனமொன்றி
ஏழ்வா ரிதிசூ ழுலகும் பிறவும்
ஈன்ற உமையோடும்
தாழ்வார் சடையெம் பெருமான் மேய
தளியை அடைந்தன்பின்
ஆழ்வார் நறவம் நிறைவண் டறைவார்
அல்லல் அகல்வாரே.

(கலித்துறை)

251. அகல்வான் வளிதீ நீர்புவி என்னும் ஐம்பூதம்
இகல்வான் சுடர்க ளியமா னனுமாம் இறைவனூல்
புகல்வான் புரமூன் றெரிசெய் புனிதன் புகலூரன்
பகல்வா னவன்பல் உகுத்தோன் புறவம் பணிநெஞ்சே.

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

252. பணியொடு நதிமதி மருவிய படர்சடை
முடியின ரிமயமா
தணியொடு வதியிட முடையவ ரறவிடை
மிசைவரு மமலனூர்
பிணிமுத லடியவர் கெடவருள் பெரியவர்
அருளினெ டுறைபகை
தணிமன முடைமறை யவர்பயி றனைநிகர்
வருமைகொள் புறவமே.

---

250. பாடிய தேதி : 10-2-1918.

புறவம் - சீகாழி. தளியை - கோயிலை. நறவம் நிறை வண்டு அறைவார் - ''நறவம் நிறைவண்டு'' என்று தொடங்கும் தேவாரப் பதிகத்தை ஓதுவார். ஆழ்வாரும் அறைவாரும் அல்லல் அகல்வார்.

251. பாடிய தேதி : 11-2-1918.

வளி - காற்று. இயமானன் - யசமானன். நூல் புகல்வான் - வேதமாகிய நூலைச் சொல்பவன். பகல்வானவன் - கதிரவன். அவனுடைய பல்லை உகுத்தது, தக்க யாக சங்கார காலத்தில்.

252. பாடிய தேதி : 12-2-1918.

பணி - பாம்பு. அணியொடு - அழகோடு. வதி இடம் உடையவர் - தங்கும் இடப்பாகத்தை உடையவர். அறவிடை - தருமமாகிய இடபம். பிணி முதல் - நோய் முதலியன. தனை நிகர்வு அருமை கொள் - வேறு பதிகள் தனக்கு நிகராவது இன்மையாக் கொண்ட ; அருமை - இன்மை. புறவம் - சீகாழி.

அம்பிகை துதிகள்

ஆனந்த வல்லியம்மை பஞ்சரத்தினம்

(காப்பு)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

253. கொத்தின மலர லங்கற் கூந்தலா னந்த வல்லி
முத்தின முறழ்வெண் மூரல் முன்னவட் போற்றும் பஞ்ச
ரத்தினம் இடையூ றின்றி இனிதுற முடிய வோர்கோட்
டத்திநம் சிந்தை மேவி அமுதவாக் கருளும் மன்னோ.

நூல்

(பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

254. மணிமேவு செஞ்சடைக் கருமிடற் றொருருவனிடம்
மன்னிவாழ் சொற்கரும்பே
மலர்மிசையி லுறையுமட வாரையிரு நயனமா
மருவுறக் கொளுமமுதமே
கணிமேவு மலையரைய னன்புறப் புரிதவம்
கண்டுமக ளாய்வந்தநற்
கன்னியே மன்னுநடை அன்னமே அருள்வதெக்
காலம்அடி யேற்குநீயே
பணிமேவு மல்குலர மாதரெஞ் ஞான்றுமிரு
பாலும் வழுத்திநின்றே
பணிசெயச் சிங்காத னத்தின்மிசை மேவுபைங்
கிளியே பராசத்தியே
அணிமேவும் அங்கயற் கண்ணியே சந்நிதியில்
அநுதினம் போற்றுமவர்கள்
ஆனந்த முறவருளு மானந் தவாதுவளர்
ஆனந்த வல்லியுமையே. (1)

---

253. இந் நூல் ஐயரவர்கள் இளமையிற் பாடியது. ஆனந்தவல்லி யென்பது உத்தமதானபுரம் சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையின் திருநாமம்.

அலங்கல் - மாலை. ஓர் கோட்டு அத்தி - ஒற்றைக் கொம்பையுடைய யானை; விநாயகர்.

254. சொற்கரும்பே - சொல்லால் கரும்பு போன்றவளே. மடவாரை - திருமகளையும் கலைமகளையும். மானம் தவாது - பெருமை நீங்காமல்.

255. பொன்னையே தேடிப் புதைத்துவைத் தியாவரும்
புணராம லேகாத்திடும்
பூதமென வாழ்ந்திடு முலுத்தர்கடை தோறுமே
புக்குழன் றகம்மெலிந்தே
என்னயாஞ் செய்வதினி என்றுமனம் எண்ணியே
ஏங்கிநோ வாமலடியேன்
இன்புற்று நினதடியில் வீழ்ந்தே துதித்திடற்
கின்றே கடைக்கணிப்பாய்
புன்னைசெறி கானல்சூழ் நெய்தல்நில மகளெனப்
போந்தகா ருணியமுகிலே
புரையோ ரகந்தொறும் இகவாமல் மேவிடும்
பொன்னே புராந்தகனிடத்
தன்னையே கன்னன்மொழி அன்னமே சந்நிதியில்
அநுதினம் போற்றுமவர்கள்
ஆனந்த முறவருளும் மானந் தவாதுவளர்
ஆனந்த வல்லியுமையே. (2)

256. இகலார் விழித்தெரிவை மாரிணை விழைச்சிற்
கிவர்ந்தறிவு சற்றுமின்றி
இப்புவியி னிடையிதற் கொப்பில்லை எனஎண்ணும்
இழிதகைய ரொடுகூடியே
புகலாத புன்மைபல செய்திழிந் தெய்த்துப்
புலம்பலடி யேனுறாமல்
புத்தியுற் றுனதடித் தாமரை பணிந்துதுதி
புகலவருள் செய்வதென்றோ
பகலாரு மணியகல நெடுமால் பணிந்திடும்
பாவையே பைம்பொன்மணியே
பசுமுகிற் கூந்தலெழில் மானே விடக்கறைப்
பரமனணி யாரும்வாமம்
அகலாத அமுதமே தேனே பணிந்துதுதி
ஆற்றுமடி யாரநுதினம்
ஆனந்த முறவருளு மானந்த வாதுவளர்
ஆனந்த வல்லியுமையே. (3)

---

255. நெய்தல் நிலமகளென : இறைவி வலையர் மகளாகத் தோன்றிய வரலாறு, திருவிளையாடற் புராணத்தில் உள்ளது. புரையோர் - உயர்ந்தவர்கள். இடத்து - இடப்பாகத்தில் உள்ள. கன்னல் - கரும்பு.

256. இணைவிழைச்சு-கலவி. இவர்ந்து-விரும்பி. எய்த்து-இளைத்து. பகல் ஆரும் மணி அகல நெடுமால்-பகல் போன்ற ஒளியையுடைய கௌஸ்துப மணியை மார்பில் பெற்ற நீண்ட திருமால். விடக்கறை-விடத்தால் உண்டான கறுப்பைப் பெற்ற.

257. தெருளாரும் அடியார்க ளொடுகூடி நின்பெருமை
செவ்வையுற ஆய்ந்தறிகிலேன்
செந்தமிழ்க் கலைவாண ரொடுகூடி யேதெரீஇச்
சிந்தைதெளி வுற்றறிகிலேன்
கருளாரு மித்தகைய அடியேனை நீக்கல்நின்
கருணைக் கடற்கழகுகொல்
கழறினே னுண்டிடக் கடமைநின தாகுமால்
கன்னியே கன்னல்மொழியே
பொருளாரு மாறன்மல யத்துவசன் மகளெனப்
போந்தகரு ணைநிதியமே
புன்மைய ரகத்தினிற் கெட்டாத மதுரமே
பூரண புராதனமினே
அருளாரு மன்னையே சந்நிதியி லனுதினம்
அன்புறப் பணியுமவர்கள்
ஆனந்த முறவருளு மானனந் தவாதுவளர்
ஆனந்த வல்லியுமையே. (4)

258. புரையாரும் அடியன்விண் ணப்பமொன் றென்னெனிற்
புகலுவன் கேள்நினதடிப்
போதில்மனம் எஞ்ஞான்றும் உறவுமடி யார்களைப்
புணரவும் புலவர்மொழியக்
கரையாரு நற்றமிழ்க் கல்வியைக் கற்பவும்
கவலையற வும்மாகுமால்
கழறுமிவை தமையடிய னெடியிலுற அருளல்நின்
கடமையா தலினருளுவாய்
வரையாளு மரையனருள் மங்கையே மன்னிவளர்
வாழ்வே மணிக்கொழுந்தே
வஞ்சகர்க் கரியகுயி லேயுயிர்க் குயிரே
மறைச்சென்னி யோர்வரியமன்
அரையாக மதில்வாழும் அன்னையே யனுதினம்
அன்புறப் பணியுமவர்கள்
ஆனந்த முறவருளு மானனந் தவாதுவளர்
ஆனந்த வல்லியுமையே. (5)

---

257. தெருள் - தெளிவு. தெரீஇ - ஆராய்ந்து. கருள் - கறுப்பு; இங்கே அறியாமை. மாறன் - பாண்டியன்.

258. புரை - குற்றம். அக்கரை ஆரும் - சிரத்தை நிறைந்த. மன் - சிவபிரான். அரை ஆகம் - பாதி உடம்பில்.

அருளூறை நீலியம்மன் இரட்டைமணி மாலை

காப்பு

(வெண்பா)

259. காமே வருளூறைவாழ் கன்னிமலர்த் தாளிணைமேல்
மாமே விரட்டை மணிமாலை—ஏமேவ
யாம்பாட ஈச னருள்யானை மாமுகன்றுள்
தாம்பாது காக்குமே தான்.

காப்பு – முருகன்

260. நாவார் அருளூறைவாழ் நாரணியின் தாளிணைமேல்
மாவார் இரட்டை மணிமாலை—தாவா
தடியேன் புகல அறுமா முகன்றன்
அடியே நினைப்பன் அறிந்து.

நூல்

(வெண்பா)

261. சீரேறு சண்டிகையைத் தேவியைநா ராயணியைக்
கூரேறு வாட்கணியைக் கொற்றவையைத்—தாரேறு
சூலியையவே தாகமங்கள் சொற்ற அருளூறைவாழ்
நீலியையவன் னெஞ்சே நினை. (1)

(கட்டளைக் கலித்துறை)

262. நின்றன் பொருட்டன் பெனக்கணு காத நிமித்தமென்கொல்
தென்றல் மறுகுல வுஞ்சீ ரருளூறைத் தேவிமிகக்
கன்றன் பரையருள் நீலிநின் சேவடிக் கஞ்சத்தினை
அன்றன் மகிடன் றலைமீது சேர்த்த அதுகண்டுமே. (2)

(வெண்பா)

263. கண்டவருங் கேட்டவருங் கண்ணு மறமொழிய
அண்டருல கொவ்வா வருளூறையே—சண்டிகைஎண்
தோளிசிவை நீலியருட் சுந்தரிகாத் யாயனிகூங்
காளிகலை யானத்தி காப்பு. (3)

---

259. இந்த நூல் இளமையிற் பாடப் பெற்றது.

கா மேவு - சோலைகள் சூழ்ந்த. அருளூறை - ஓர் ஊர். மா மேவு - பெருமை பொருந்திய. ஏமேவ - உயர்வு பெற.

260. தாவாது - குறையாமல்.

261. வாட்கணியை - வாள்போன்ற கண்ணையுடையவளை

262. மறுகு - வீதி. கன்று - உருகும். அன்றல் மகிடன் - பகைத்தலையுடைய மகிடாசுரன்.

263. கண்ணும் மறம் ஒழிய - எண்ணுகின்ற பாவங்கள் அற. காப்பு - காவல் செய்யும் ஊர்.

(கட்டளைக் கலித்துறை)

264. புயல்மேவு சோலை பொழிதேன் பெருகிப் புடைபரந்து
வயல்மே வருளுறை மாதங்கி நீலி மருவியஎற்
கியல்மே வியவருள் ஈயா விடினிதி னேனிருந்தாய்
செயல்மேவ நீயென வேபல காலுரை செய்குவனே. (4)

(வெண்பா)

265. செய்யார் வரம்பைத் திகழ்கரும்பின் சாறுடைக்கும்
ஐயார் வனத்தின் அருளுறையே—வையாரும்
சூலத்தாள் சீலத்தாள் தூலத்தாள் சுந்தரிக
பாலத்தாள் நீலி பதி. (5)

(கட்டளைக் கலித்துறை)

266. பதியிற் சிறந்த அருளுறை மேய பகவதிஅம்
புதியிற் சிறந்த வடிவுடை நீலி புராதனியான்
மதியிற் சிறந்த மதிப்பே றடைய வழங்கிடநீ
ததியிற் சிறந்த ததியிது கோமள சாமளையே. (6)

(வெண்பா)

267. சாகரத்திற் கண்வளர்தா மோதரன்தங் கைகருணை
யாகரத்திற் கோட்டத் தமர்நீலி—ஏகரத்தம்
துன்னியொளிர் வாட்கைச் சுராதிபைத ராதிபைசேர்க்
கன்னிமலர்த் தாளே கதி. (7)

(கட்டளைக் கலித்துறை)

268. கடல்வாய் வருமமு தாசனர் போற்றக் கவின்திகழும்
மடல்வாய் சலச மடந்தையர் வாழ்த்த மணித்தவிசின்
அடல்வாய் அருளுறை மேவிய நீலி அடிபணிந்தோர்
கெடல்வாய் பிணியினைப் போழ்ந்தே சதாஇதங் கிட்டுவரே.

---

264. அருளுறையில் இருந்தும் அருள் ஈயாமல் இருப்பது பொருத்தமன்று என்று நயமாகக் கூறியபடி. எற்கு - எனக்கு. இதின் - இவ்வூரில்.

265. செய் ஆர் - வயலில் உள்ள. ஐ - அழகு. தூலம் - பேருடம்பு.

266. அம்புதியிற் சிறந்த - கடலினும் சிறந்த. யான் அடைய நீ வழங்கிடத் ததி இது ; ததி - சமயம்.

267. கருணையாகரம் - அருளுறை. கோட்டம் - கோயில். சுராதிபை - தேவர்களுக்குத் தலைவி. தராதிபை - உலகுக்குத் தலைவி.

268. அமுதாசனர் – அமுதத்தை உணவாகக் கொண்ட தேவர்கள். சலச மடந்தையர் – தாமரையில் வீற்றிருக்கும் திருமகளும் கலைமகளும். மணத்தவிசைப் போன்ற சிறப்பைப் பெற்ற அருளுறை. இதம் – இன்பம்.

(வெண்பா)

269. கிட்டிச் சமர்புரியும் கேடில்மபி டாசுரனை
வெட்டிச் சிரத்திவர்ந்த வித்தகியே—எட்டிவியோ
மங்கடக்கும் மாடத் தருளுறைவாழ் நீலிமனச்
சங்கடத்தை நீக்கியருள் தா. (9)

(கட்டளைக் கலித்துறை)

270. தாவா மறையின் சிரமோ அடியவர் தம்நெஞ்சமோ
நாவார் பெரும்புகழ் ஓவா அருளுறை நன்னகரோ
தீவாய் மகிடன் தலையாது சேர்த்தனை சேவடியை
நீவாய் திறந்து புகல்நீலி யேஅருள் நின்மலையே. (10)

(வெண்பா)

271. மலையாவும் இந்திரன்கை வச்சிரத்திற் கஞ்சி
நிலையா வதிந்தெனநீள் மாடம்—குலையா
அருளுறைவாழ் நீலி அரிவா கனியாள்
மருளுறையா தின்பருளு வாய். (11)

(கட்டளைக் கலித்துறை)

272. வாயார நின்னை வழுத்தா தவர்நின் மலர்ப்பதத்தை
ஏயாரென் பாரது பொய்யாக மேதி இழிதலையின்
நீயா தரித்து விரைந்தூர்ந் தனைஎன் நினைந்துகொலோ
தாயாய் அருளுறை வாழ்நீலி முக்கட் டயாபரியே. (12)

(வெண்பா)

273. பரிந்தமரர் போற்றும் பதபங் கயத்தாள்
விரிந்த அருளுறையின் மேவி—அருந்த
அருந்தத் தெவிட்டா அமுதன்னாள் நீலி
திருந்தற் புதத்தாளைச் செப்பு. (13)

---

269. சிரத்து – மயிடாசுரன் தலைமேல். வியோமம் - ஆகாசத்தை.

270. மகிடன் தலை மறையின் சிரம் முதலியவையோ, யாது?

271. நிலையா - நிலையாக. வதிந்தென - தங்கினாற் போன்ற. அரி – சிங்கம்.

272. ஏயார் - பொருந்தார். மேதி – மகிடாசுரன். ஆதரித்து - விரும்பி.

273. திருந்து அற்புதத்தாள் - திருத்தமாக உள்ள அற்புதங்களைச் செய்பவள்; அற்புதம் - ஞானமுமாம்.

(கட்டளைக் கலித்துறை)

274\. செப்பும் தமிழின் இயலுண ராத சிறியவன்சொல்
இப்புன் கவியின் வழுக்களைந் தேற்றின் பினிதளிப்பாய்
தப்புங் கயவர் தமைத்தெறும் நீலி தலைவிஎன்றும்
ஒப்பும் உயர்வுமில் லாதாய் அருளுறை உத்தமியே. (14)

(வெண்பா)

275\. தஞ்சமெனச் சார்ந்தோர்கள் தந்துயர்முன் னையவொழித்
தஞ்சலிரென் றருள்செய் தாதரிப்பாள் — துஞ்சலிலா
ஆதவன்சூழ கோட்டத் தருளுறைவா ழம்பிகைஅஞ்
சாத விகல் நீலியென்றுந் தான். (15)

(கட்டளைக் கலித்துறை)

276\. தானே தனக்கிணை யாயே அருளுறைத் தண்டளிவாழ்
மானே கபாலி திரிசூலி நீலி மறையளிசூழ்
தேனே நினது சரணம் புயமென்றுஞ் சிந்தைவைத்த
நானேய் வதுகொல் துயரஃ தோவ நயந்தருளே. (16)

(வெண்பா)

277\. நயந்தஅடி யாருளத்தில் நண்ணியநின் தாளை
அயர்ந்தவடி யேனுளத்தும் அண்ணய்—வியந்தமரர்
பன்ன அருளுறையிற் பாலையினும் வாழ்நீலி
இன்னல் அறவே இனி. (17)

(கட்டளைக் கலித்துறை)

278\. இனிக்கும் தமிழை அறியாத மூட ரிடத்தலைந்து
பனிக்குந் தமியற் கினியாவ தாண்டருள் பங்கயன்வந்
தனிக்குந் தனியரு ளாகர நீலி தகைக்கரத்தில்
தொனிக்குந் துடியும் மலர்க்கணை யும்வைத்த சுந்தரியே(18)

274\. தெறும் - அழிக்கும்.

275\. முன்னைய - முதலாகியவற்றை. ஆதவன் சூழ் - சூரியன் வலம் செய்யும்.

276\. யாயே - தாயே. தளி - கோயில். துயர் ஏய்வதுகொல், அஃது - அத்துயரம். ஓவ - குறைய.

277\. அயர்ந்த - மறந்த. அண்ணய் - வந்து தங்குவாயாக. இனி அண்ணய் என்று கூட்டுக.

278\. பனிக்கும் – நடுங்கும். தமியற்கு - தனியாக உள்ள அடியேனை ; உருபு மயக்கம். வந்தனிக்கும் - வணங்கும். அருளாகரம் - அருளுறை. தகை - அழகு.

(வெண்பா)

279. தரியலர்கட் கஞ்சாம் தவிர்மறலிக் கஞ்சாம்
விரியலர்செய் வெம்பிணிகட் கஞ்சாம்—சொரியலர்பைங்
காச்சூழ் அருளுறைமுக் கண்ணியெமை ஆள்நீலி
மாச்சூலி ஈந்தாள் வரம். (19)

(கட்டளைக் கலித்துறை)

280. வரத்திற் பொலியய னாதியர் போற்றி வணங்கருளா
கரத்திற் பொலியருள் நீலியைக் கண்டு கவலையொழித்
துரத்திற் பொலிய அருள்வா யெனப்பணிந் தோதினன்யான்
திரத்திற் பொலிய அளித்தாள் நலமிகு சீரினையே. (20)

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்துப் பெரிய நாயகி

இரட்டை மணிமாலை

(காப்பு - வெண்பா)

281. அரட்டைமணி மாலைஅகற்றுபெரி யம்மை
இரட்டைமணி மாலை இயம்பத்—தெருட்டும்
உரிவத் திரத்தன் உதவுமொரு கோட்டுக்
கரிவத் திரத்தன் கழல்.

நூல்

(வெண்பா)

282. தேர்கொண்ட வீதித் திருக்குடந்தை மாநகரத்
தேர்கொண்ட கீழ்க்கோட்டத் தீர்ங்கரும்பே—கார்கொண்ட
கந்தரத் தன்பாற் கலந்தஅமு தேஅருள்தி
எந்தரத் தன்பால் இனி. (1)

---

279. தரியலர்கட்கு - பகைவர்களுக்கு. அஞ்சாம் - பயப்படமாட்டோம். மறலி - யமன். விரி அலர் செய் - விரிகின்ற பழியை உண்டாக்கும். அலர் சொரி. கா - சோலை.

280. அயன் ஆதியர் - பிரமன் முதலியோர். அருளாகரம் - அருளுறை. உரத்தின் பொலிய - வலிமையோடு விளங்க. திரத்தின் - நிலையுடன்.

259-80. இந்த நூல் ஐயரவர்களுக்குப் பாடம் சொல்லித் தந்த விருத்தாசல ரெட்டியார் நோய்வாய்ப்பட்டபோது பாடியது.

281. அரட்டை மண்ணி மாலை அகற்று - குறும்பைப் போக்கி மயக்கத்தை நீக்கும்; மணி: இடையிற் குறைந்த செய்யுள் விகாரம். தெருட்டும் - தெளிவை உண்டாக்கும். உரி வத்திரத்தன் - தோலாடையணிகிய சிவபெருமான். கரி வத்திரத்தன் - ஆனைமுக முடையவன்; வத்திரம்: வக்திரம் என்ற வடசொல்லின் திரிபு.

282. கார் கொண்ட கந்தரத்தன் - நீலகண்டன். எம் தரத்து - எளியேங்கள்பால்'

(கட்டளைக் கலித்துறை)

283. இனியே துனதருள் வாய்த்தலென் றெண்ணி இனைந்துதன்னந்
தனியே கிடக்கும் சிறியேனை ஆளல் தருமமன்றோ
பனியேய் வரைப்பசுந் தேனே குடந்தை பயிலமுதே
கனியே பெரியம்மை யேஅருள் பூத்திடு கற்பகமே. (2)

(வெண்பா)

284. கல்லா தனுக்குங் கவலைக் கிடமாய
புல்லா தனுக்கும் புகல்வையோ—நல்லாக்கள்
சூழ்வேயா னந்தத் தொழுகுடந்தைக் கீழ்க்கோட்ட
வாழ்வேயா னந்த வழி. (3)

(கட்டளைக் கலித்துறை)

285. வழிகாட்டு முன்னை மனங்காட்ட லின்றி மறந்தொழிந்தே
பழிகாட்டு மாக்கள் பயன்காட்டு வாரெனப் பாடியந்தோ
கழிகாட்டுஞ் சும்மைக் கடல்காட்டும் பாவங் களையடைகோ
பிழிகாட்டுஞ் சொல்லி பெயல்காட்டுங் கூந்தற் பெரியம்மையே. (4)

(வெண்பா)

286. பெரியைநீ யாயிற் பெரியரையே காத்தற்
குரியையெனற் கோர்விதியும் உண்டோ—விரிகுடந்தைக்
கீழ்க்கோட்ட மேவும் கிளியே பசுமயிலே
பாழ்க்கோட்டம் மேவுமெனைப் பார். (5)

---

283. அருள் வாய்த்தல் இனி ஏது. இனைந்து - வருந்தி. பனியேய் வரை - இமாசலம்.

284. கல்லாது - படிக்காமல். அனுக்கும் கவலைக்கு - துன்புறுத்தும் கவலைக்கு. புல் ஆதனுக்கும் - புல்லிய அறிவிலேனாகிய எனக்கும். ஆக்கள் சூழ் வேயான் நந்த - பசுக்கள் தன்னைச் சூழும், புல்லாங்குழலையுடைய கண்ணன் தான் நலம் பெற்றுப் பெருகும்படி. குடந்தைக் கீழ்க்கோட்டம் - நாகேசுவர சுவாமி கோயில். ஆனந்த வழி புகல்வையோ என்று கூட்டுக.

285. மாக்கள் - அறிவற்ற மக்கள். சும்மை - ஓசை. கடல் காட்டும் பாவங்களை - கடலைப் போன்ற பாவங்களை. அடைகோ - அடைவேனோ. பிழி - தேன். பெயல் - மழை.

286. பாழ்க் கோட்டம் - பாழான மனவளைவை உடைய; கோட்டம் - நடுவு நிலையின்மை.

(கட்டளைக் கலித்துறை)

287. பாரோடு மெங்கும் பரந்தோடும் நின்பெரும் பான்மையென்றன்
காரோடும் நெஞ்சைக் கரைந்தோடச் செய்தலில் காரணம்என்
ஓரோடு கையிற்கொண் டூரோடு மண்ண லுயிர்க்குயிரே
பீரோடு பாற்சொற் பிறையோடு நெற்றிப் பெரியம்மையே. (6)

(வெண்பா)

288. பெருகும் பயமுமிசை பேதுறவுந் தீர்ப்பாய்
பெருகும் பயமுமிசை பெற்றித்—திருவன்பின்
வாய்ந்த மரகதமே வாழ்குடந்தைக் கீழ்க்கோட்டத்
தேய்ந்த மரகதமே யெற்கு. (7)

(கட்டளைக் கலித்துறை)

289. என்றும் பிறந்தைக் கிடமாக யானஃ தெற்கிடமாத்
துன்றுந் தெருமர லென்றொழிப் பாய்பனி தூங்கிமயக்
குன்றும் பசுந்தமிழ்க் கூடலும் போந்தருள் கோமளமே
பின்றுந் துயர்தவிர்த் தோர்வாழ் குடந்தைப் பெரியம்மையே. (8)

290. அம்மையென்று மத்தனென்றும் அஞ்சான் மகத்தகமே
வெம்மையென்று மத்தனென மேவினளால்—நம்மையுமை
முந்தா ளவளை முரல்குடந்தைக் கீழ்க்கோட்டம்
வந்தா ளவளை வணங்கு. (9)

---

287. கார் ஓடும் - அறியாமை பரவிய. செய்தல் இல் காரணம் - செய்தல் இல்லாததற்குரிய காரணம். ஓர் ஓடு. ஊர் ஓடும் - ஊர்களிலெல்லாம் திரியும். பீர் ஓடு பால் - பீராக ஓடும் பால். அழகு கண்டு பிறை ஓடுவதற்குக் காரணமான நெற்றி.

288. பயமும் - அச்சமும். இசை பேதுறவும் - பொருந்தும் மயக்கமும். பெருகும் பயமும் மிசை பெற்றி - தயிரும் பாலும் உண்ணும் தன்மையைப் பெற்ற. பெருகு - தயிர்; தெலுங்கிலிருந்து வந்த திசைச்சொல். திருவன் பின் வந்த - திருமகளை உடையவனாகிய திருமாலின் பின் தோன்றிய. மரகதமே - கிளியே. ஏய்ந்த - தங்கிய. மரகதமே - பச்சை நிறமுடையவளே. எற்கு - எனக்கு. எற்குத் தீர்ப்பாய் என்க.

289. பிறந்தை - பிறவி. யான் பிறவிக்கு இடமாக, அது எனக்கு இடமாக. தெருமரல் - சுழலுதல். கூடல் - மதுரை. பின்றும் - பின்னிடும்.

290. அஞ்சான் - அஞ்சாத தக்கன். மகத்து - யாகத்தையுடைய. அகமே வெம்மை என்று - வீடு வெப்பமானது என்றும். மத்தன் என - அவன் பைத்தியக்காரன் என்றும் எண்ணி. மேவினளால் - அங்கிருந்து வந்து விட்டாள். உமை நமை முந்து ஆள வளைமுரல் குடந்தைக் கீழ்க் கோட்டம் வந்தாள்; அவளை வணங்கு; வளை - சங்கு.

(கட்டளைக் கலித்துறை)

291. வணங்காது நின்னை வழுத்தா துனதடி வாஞ்சைசற்றும்
இணங்கா திருக்கும் எனைப்போல வேநிற் கெவர்கிடைப்பர்
உணங்காத சீர்த்தி உறுமெனை ஆளின் உரைத்தனனல்
பிணங்காத அன்பர் கணஞ்சார் குடந்தைப் பெரியம்மையே. (10)

(வெண்பா)

292. பெரியம்மை என்னும் பெயருனக்குச் சாலும்
விரியம்மை என்றுமன்பர் மேவா—தருள்உமைநீ
சார்கோயில் தன்னையெவர் தாமுமென்று மேமடந்தை
யார்கோயில் என்றுரைத்த லால். (11)

(கட்டளைக் கலித்துறை)

293. ஆல மருந்திப் பணிபூண் குடந்தை அரன்அறவோர்க்
கால மருந்திரு நாகேசன் மூவர்க் கதிபனிடப்
பால மருந்திறத் தாலமு தேயெனப் பாடுவன்விற்
பால மருந்தின் மொழிப்பெரி யம்மையன் பாலுனையே. (12)

(வெண்பா)

294. உனையே நினைந்தேனை ஒன்றனையும் எண்ணு
வினையே நினைந்தேனை வென்னே—அனையேசீர்
வாய்ந்த குடந்தை மருவுங்கீழ்க் கோட்டத்தில்
ஏய்ந்த பெரியம்மை யே. (13)

---

291. நிற்கு - நினக்கு. உணங்காத - அழியாத. எனை ஆளின் சீர்த்தி உறும். அன்பர் கணம் - அடியார் கூட்டம்.

292. மடந்தையார் கோயிலென்பது கீழ்க்கோட்டத்துக்கு ஒரு பெயர். அம்மையின் பெயரால் அது வழங்குதலின் அம்மையின் சிறப்புப் புலப்படுகிறது; ஆதலின் பெரியம்மை என்று பெயர் கொண்டது சாலும் என்றபடி. விரி அம்மை - விரிந்த அடுத்த பிறப்புகள்.

293. ஆலம் அருந்தி. பணி - பாம்பை. ஆல் அமரும் திரு நாகேசன். இடப்பால் அமரும்; பால் - பாகம். விற்பால - வில்லைப் போன்ற நெற்றியையுடைய. மருந்து இன் மொழி - அமுதம் போன்ற இனிய மொழியையுடைய.

நஞ்சை உண்டவன் பாகத்தில் இருத்தலின் அந்த நஞ்சினல் தீங்குருத அமுதாயினள்.

294. ஏனை ஒன்றனையும் - வேறு எதையும். எண்ணு வினையே நினைந்து - எண்ணத என் செயலை எண்ணி. ஏன் நைவு என்னே - ஏன் வருத்தம் என்று சொல்வாயாக; என் - என்று சொல். ஏ : அசை,

(கட்டளைக் கலித்துறை)

295. ஏராரும் பாலற்குப் பாலீந்துன் போலறி வீந்தருளும்
காரார் களத்திரு நாகேச வள்ளலைக் காட்டிலும்நீ
பேராற் பெரியை எனலறிந் தேன்நின் பெயரதனுல்
சீரார் குடந்தையிற் கீழ்க்கோட்டம் மேவிய தெள்ளமுதே.

(வெண்பா)

296. தெள்ளா ரமுதத் தெளிவே திருக்குடந்தை
நள்ளார்கீழ்க் கோட்டத்து நாயகியே—விள்ளாத
வண்ணம் படர்ந்தவிழி மாறகற்றி யாள்பகைப்பால்
அண்ணம் படர்ந்தவிழி யாய். (15)

(கட்டளைக் கலித்துறை)

297. ஆயுந் தொறுஞ்சுவை மிக்கீயும் செந்தமி ழார்த்திமரீஇத்
தாயுன் சரணம் சரணடைந் தேனென் தளர்வகற்றி
நீயுன் கருணை சிறிதேனு மீந்தருள் நீள்குடந்தை
ஏயுங் குணதளி வாழ்வே சிவபரன் இன்னுயிரே. (16)

(வெண்பா)

298. இன்னுமை இன்பம் இகழ்புகழென் றெண்ணவருள்
கொன்னூர் குடந்தைக்கீழ்க் கோட்டத்தாய்—ஒன்னுத
என்பணிகொள் ஈசனிடத் தின்னமுதே வெம்பாவ
வன்பணிகொ ணுயேன் மனம். (17)

(கட்டளைக் கலித்துறை)

299. மனம்போன வாறலைந் தந்தோ வருமரு மந்தபல
தினம்போன வாறுந் திடம்போன வாறுந் தெருளெனுமோர்
தனம்போன வாறுந் தவம்போன வாறுமென் சாற்றுவல்யான்
அனம்போல் நடைப்பெரி யம்மை குடந்தையி லாரமுதே. (18)

---

295. உபமன்யு முனிவருக்கு இறைவன் பாலும் அறிவும் அருளினன். ஞான சம்பந்தருக்கு இறைவி பாலும் அறிவும் அருளினள். கார் - கருமை. களம் - கழுத்து. இவ் வகையில் நீவிர் இருவரும் ஒப்புமையுடையீரேனும், பெயரைக் கொண்டு நீ பெரியை என்று அறிந்தேன் என்றபடி.

296. விழி மாறு - கண்ணிலுள்ள தீங்கு. அண்ணு அம்பு அடர்ந்த - செல்லும் அம்பை அழகால் பொருத.

297. ஆர்த்தி - ஆர்வம். குணதளி – கீழ்க்கோட்டம்.

298. இன்னுமையை இன்பமென்றும் இகழ்ச்சியைப் புகழ் என்றும் மனம் எண்ண அருள். கொன் - பெருமை. வன்பு அணி கொள் - வன்மையை அணியாகக் கொண்ட.

299. வரும் அருமந்த. திடம் - மனவலிமை. தனம் - தன்மை.

(வெண்பா)

300. ஆசைக் கடியேன் அடியே னெனப்பட்ட
மாசை யறுத்தொழிப்ப வந்தருள்வாய்—ஈசைவளம்
கூர்காமக் கோட்டங் குடந்தைக்கீழ்க் கோட்டமுளாய்
ஓர்காமக் கோட்டத்தே னுள். (19)

(கட்டளைக் கலித்துறை)

301. உன்னு திருந்ததி னென்னுய் முடிந்த தொழிகவினிப்
பொன்னுர் குடந்தையிற் கீழ்க்கோட்டம் மேவிய புத்தமுதை
அன்னு அருளெனப் பன்னுளும் போற்றி அகமகிழ்ந்து
தென்னு தெனுவெனப் பாடிட வோர்வழி தேர்திநெஞ்சே. (20)

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

302. கனவினும் அறத்தைக் கருதிடாக் கயவர்
கடைத்தலை உழன்றழுங் காது
நனவினுங் கனவி னிடத்தும்நின் னடியே
நாயினேன் வழுத்துமா றருளாய்
மனவினு மரவி னினத்தினு மணிகொள்
வரதன திடங்கொண்ட மயிலே
உனவினுஞ் சிறக்குங் குடந்தைக்கீழ்க் கோட்டம்
உவந்தருள் பெரியநா யகியே.

மங்கள நாயகி

(தரவு கொச்சகக் கலிப்பா)

303. பாடாமல் நின்புகழைப் பங்கயத்தாள் உண்ணினைந்து
நாடாமல் நின்கோயில் நண்ணுமல் நின்னெதிரே
ஆடாமல் காலம் அவமே கழித்தழிந்தேன்
வாடா தருள்குடந்தை மங்களநா யகித்தாயே. (1)

---

300. அடியேன் ஆசைக்கு அடியேன் எனப்பட்ட மாசை. ஈசை – ஈசையே. காமக் கோட்டம் - காஞ்சியிலுள்ள காமாட்சி கோயில். காமக் கோட்டத்தேன் உள் - காமமாகிய கோணலையுடைய என் உள்ளத்தில். உள் வந்தருள்வாய்.

301. உன்னுது இருந்ததின் - நினையாமல் இருந்ததனுல். அன்னு - அன்னையே.

302. மனவினும் - அக்கு மணியாலும். உன - நினைக்க.

303. அவமே - வீணுக. மங்கள நாயகி : கும்பேசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள அம்பிகை.

304. ஆவியென நட்டோரும் அகம்விண்டு விட்டொழிந்தார்
மேவி நினையடுப்பின் விள்ளா தருள்வையென்றுன்
கோவில் அடைந்தேன் குறைநீக் குதிகமல
வாவிபுடை சூழ்குடந்தை மங்களநா யகித்தாயே. (2)

305. காமுங் தகந்தையின் கைப்பட்டு வெந்நரகில்
வீழுங் கொடியஇந்த வீணனையாண் டருளுலகம்
ஏழும் அளித்த இறைவியழி யாமலென்றும்
வாழும் குடந்தைவளர் மங்களநா யகித்தாயே. (3)

306. கலர்ச்சேர்வி னுள்ளங் கலங்கிச் சுகமடையா
மலச்சோவென் றுள்ளமிக வாடுகின்றேன் துன்பமெலாம்
கலக்கோடி வந்தென் குறையைக் கடிந்தருள்வாய்
மலர்ச்சோலை சூழ்குடந்தை மங்களநா யகித்தாயே. (4)

307. செந்தேன் புரைமொழியார் செய்யுந் துயரடைந்து
நொந்தே தினந்தொழுது நோக்குவார் தங்குழுவின்
முந்தேன் துணைதேட முன்னினேன் இன்றுன்பால்
வந்தேன் அருள்குடந்தை மங்களநா யகித்தாயே. (5)

308. காழ்த்த மலப்பிணியெற் கட்டிக் கலைமுந்நீர்
ஆழ்த்தக் கரைகாணு தமிழ்ந்தினேன் மானிடர்கள்
தாழ்த்தத் துயரந் தலைப்பட்டேன் உன்கழல்கள்
வாழ்த்த அருள்குடந்தை மங்களநா யகித்தாயே. (6)

309. தொண்டர்நித்தம் நின்னைத் தொழுது பலபாடல்
கொண்டரற்றும் அன்பைக் குறியாமல் நால்வேதம்
பண்டரற்றும் இன்னேசை பாவியோ துற்றனனல்
வண்டரற்றும் பூங்குடந்தை மங்களநா யகித்தாயே. (7)

310. நஞ்சம்நிகர் வார்துணையே நாடிச் செழுந்தமிழின்
பஞ்ச வியல்படிக்கும் பாக்கியமில் லாமலந்தோ
விஞ்ச அவமதிப்பு மேவினேன் பாடவருள்
வஞ்சமிலார் சூழ்குடந்தை மங்களநா யகித்தாயே. (8)

---

304. அகம் விண்டு - நெஞ்சம் வேருகி.

305. காழ் உந்து - வயிரம் பாய்ந்த. அளித்த - படைத்த. இறைவி : விளி.

306. கலர்ச் சேர்வின் - இழிந்தவர்களைச் சேர்ந்தமையால். சுகம் அடையாமல் அச்சோ என்று. ஓடிவந்து கலக்கு.

307. நொந்து, முந்தேன்.

308. காழ்த்த – முற்றிய. எற்கட்டி - என்னைக் கட்டி. கலையாகிய கடலில்.

309. அன்பை எண்ணுமல் வேதத்தை ஓதினேன்.

310. பஞ்ச இயல் - ஐந்து இலக்கணம்.

311. கண்காண நின்கழல்கள் கருத்துனேயே கண்டுவக்க
விண்காணும் உன்புகழை விள்ளாது நாக்கலிப்ப
மண்காணத் தேகவசம் மாறியிருப் பன்கொல்லோ
வண்கா விரிக்குடந்தை மங்களநா யகித்தாயே. (9)

312. நற்றேனும் தீங்கரும்பும் நாணும் இனியகவி
சற்றேனும் ஓயாமல் சாற்றவருள் வாயெனவே
உற்றேனுன் கோயில் ஒருவேனுக் குற்றதுணை
மற்றார் திருக்குடந்தை மங்களநா யகித்தாயே. (10)

பெருங்கருணை நாயகி

313. பெருங்கருணை நாயகியைப் பேசுவேற் கொல்லார்
ஒருங்குபுரி துன்பமுமுண் டோ.

கீர்த்தனம்

இராகம் - பரசு

(பல்லவி)

314. காத்தருள வேண்டுமம்மா—அடியேனைக்
காத்தருள வேண்டுமம்மா.

(அநுபல்லவி)

காத்தருள வேண்டும்வஞ்சர்
கடையணுகா மலேயென்றும் (காத்தருள)

(சரணங்கள்)

1. பொய்யனானு லும்மிகு புரட்டனானு லும்கோப
வெய்யனானு லும்எனை விட்டிடேல் பெருங்கருணைத்
தாயே தாயே தாயே அனுதினமும் (காத்தருள)
2. பாதகனா னாலும்படு பாவியானா லும்மிகு
காதகனா னாலும்எனைக் கைவிடேல் பெருங்கருணை
அம்மா அம்மா அம்மா அனுதினமும் (காத்தருள)

---

311. கண் நின் கழல்கள் காண. விள்ளாது - நீங்காமல். நா கலிப்ப - நாக்கு முழங்க. தேகவசம் மாறி - அவசமாகி.

312. உற்றேன் - வந்து அடைந்தேன். ஒருவேனுக்கு - நீங்காதவனாகிய எனக்கு. மற்று ஆர்.

313. பெருங் கருணை நாயகி : அவிநாசியில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை. ஒல்லார் - பகைவர்.

3. போற்றுறுமார்க் கண்டனுக்காக் கூற்றையுதைத் தோர்வலத்தை
ஏற்றுறைசாம் பவியுன்ற னுற்றலைநன் ருகவின்று
கண்டேன் கண்டேன் கண்டேன் அனுதினமும்
(காத்தருள)

4. காசியென்றே சொல்லுமவி நாசிமாத் தலத்தைவிசு
வாசியேனின் பாதமலர் நேசியேனென் றுலும்நீயே
தஞ்சந் தஞ்சந் தஞ்சம் அனுதினமும் (காத்தருள)

5. ஒப்பிலா அவிநாசி யப்பர்தம் வலத்துறை
கற்பகமே தற்பரையே இப்படியே முன்புவந்தே
ஆள்வாய் ஆள்வாய் ஆள்வாய் அனுதினமும்
(காத்தருள)

சரசுவதி துதிகள்

315. பிரமன்செந் நாவும் பெரும்புலவர் நாவும்
வரமன்னும் வெண்டா மரையும்—திரமுறவே
மன்னி யுறைவதுபோல் மாணிலடி யேன்நாவும்
துன்னியுறை வாள்கலைமா து. (1)

316. எய்தாப் பொருளொன்றும் இப்புவியில் வேறில்லை
வெய்தாத் தெறுவினையும் வீந்திடுமே—ஐதாரும்
வெண்டா மரைமலரின் மேவுங் கலைமகள்தாள்
தண்டா மரைவணங்கிற் ருன். (2)

கலைமகள் மாலை

காப்பு

(வெண்பா)

317. கலைமகள்பா தாம்புயத்திற் கண்ணியடி யேன்சொல்
மலைவில்பல பாக்கள் வழுத்த—உலைவில்கர
வாரணன்முன் னோன்பரமன் மைந்தன்மா தங்கமுகக்
காரணன்செம் பாதமலர் காப்பு.

---

314. இதனைப் பாடிய நாள், 26-1-1918.

315. இவை இளமையிற் பாடியவை. வரம் - மேன்மை. திரம் - நிலை. மாண் இல் - மாட்சி இல்லாத.

316. ஐது ஆரும் - அழகியதாக உள்ள.

317. கண்ணி - தியானித்து. மலைவு இல் - மயக்கமில்லாத. உலைவு - அழிவு. கரவாரணன் முன்னோன் - கையில் கோழிக் கொடியை உடைய முருகனுக்குத் தமையன்.

நூல்

(கட்டளைக் கலித்துறை)

318. திருவளர் நின்மலர்ச் சேவடிபோற்றும் திறமதில்லாக்
கருவளர் என்மன மும்நாவும் மேவிக் கதித்துறைவாய்
குருவளர் எண்கணன் நாவில்எஞ் ஞான்றும் குடியிருக்கும்
மருவளர் பூங்கொடி யேகம லாசன மாமணியே. (1)

319. ஆசு கவிமுதல் நான்கானும் நின்சர ணும்புயத்தைப்
பேசு திறமெனக் கென்றுறு மோபிறர் பேசுபழிக்
காசு படுமல ரென்றுறு மோகடை யேனறியேன்
மாசு சிறிதும் இலாக்கம லாசன மாமணியே. (2)

320. அருள்மேவும் நின்திருப் பாதாம் புயத்தன் பணுவுமின்றி
இருள்மேவு புல்ல ரிடத்தன்பு கொண்டிழிந் தேங்குமெனைத்
தெருள்மேவும் நம்மடி யானல னென்று தியங்கவிடேல்
மருள்மே வுதலொழி வெண்கம லாசன மாமணியே. (3)

321. துன்னும் பெரும்புல வோருடன் கூடல் துளியுமின்றிப்
பன்னுங் கயவ ருடன்கூடும் என்னைப் பதறவிடேல்
உன்னும் அடியர் உளந்தோறும் மேவும் ஒளிவிளக்கே
மன்னும் கவின்மிகு வெண்கம லாசன மாமணியே. (4)

322. பாடா தவன்நின் பதாம்புயந் தன்னைப் பரிந்துதினம்
கூடாத வன்சந் நிதிக்கெதி ரேகுலை யாப்புகழைத்
தேடா தவன்இனி என்றுய் வதுகொல் திகழஅருள்
வாடாத மாமை திகழ்கம லாசன மாமணியே. (5)

323. சதாவெந் துயரக் கடலிடை மூழ்கித் தளரவிடல்
இதாநின் கருணைக் கடற்கழ காம்எளி யேற்குநலப்
பிதாவும் அனையும் பினையாரும் நீபிற ழாதருள்வாய்
மதாசலக் கும்ப முலைக்கம லாசன மாமணியே. (6)

---

318. குரு – நிறம். எண் கணன் - பிரமன். மரு - நறுமணம்.

319. பிறர் பேசுகின்ற பழி வார்த்தைகளுக்கு அவை குற்றப்பட்டு ஒழிவதற்குரிய அவற்றைப் பற்றிய பழி. ஆசு – குற்றம். அலர் - பழி.

320. இருள் - அறியாமை. தெருள் - அறிவுத் தெளிவு.

321. கவின் - அழகு.

322. மாமை - பேரழகு.

323. இதா - இதுவா. மதாசலம் – யானை.

324. உளமன்னும் கல்வியும் செல்வமும் பெற்றுணர் வுற்றடியேன்
தளமன்னும் நின்திருச் சேவடி போற்றத் தகவருள்வாய்
களமன்னும் நீசர் உளங்கா ணரிய கவின்மயிலே
வளமன்னி வாசம் கமழ்கம லாசன மாமணியே. (7)

325. அலையிடைப் பட்ட துரும்பென வேஅலைந் தாசுமிக்கு
வலையிடைப் பட்ட அரிணத்தின் மாழ்கி வருந்துறும்யான்
கொலையிடைப் பட்டபுல் லோருடன் கூடிக் குலையவிடேல்
மலையிடைப் பட்ட முலைக்கம லாசன மாமணியே. (8)

326. பாராத கண்ணும் பணியாத சென்னியும் பண்பில்நினை
ஓராத நெஞ்சும் உரையாத நாவும் உறுதியுடன்
நேராத மற்றும் எனக்கே படைத்த நியதிஎன்னே
வாரா தவனுவக் குங்கம லாசன மாமணியே. (9)

327. பாரும் விசும்பும் பகர்பா தலமும் பதியெனக்கொள்
ஆரும் உணர்வுநின் சேவடி போற்றி அடைவரெனில்
நேரும் எனக்குணர் வீயா திருத்தல் நினக்கழகோ
வாரும் அரியல் மிகுகம லாசன மாமணியே. (10)

பயன்

328. கலைமகள் தாளிற் புகலொரு பான்கவி கற்பவர்கற்
றலைவற என்றும் உரைப்போர் எழுது மவர்இவர்கள்
மலைவகல் கல்வியும் செல்வமும் வாய்ந்து மறுமையினில்
தலையமை இன்பக் கடலாடு வார்உள் தளர்வகன்றே. (11)

வேறு துதிகள்

329. அடையும் அடியார்க் கருள்சுரந் தூறும் அமுதவிழிக்
கடையும் கவினுடை யும்மலர்க் கையும் கவினரம்பைத்
தொடையும் வடவடை யும்மிடை யும்பண்டி யுந்துடிநேர்
இடையும் உடைவெண் கொடியென்வெண் ணெஞ்சின் இலங்கிடுமே.

324. தளம் மன்னும் - பூவிதழின் தன்மை தங்கும்.

325. ஆசு – குற்றம். அரிணத்தின் – மானைப் போல.

326. மற்றும் – பிற உறுப்புக்களும். வார் ஆதவன் – கதிர் நீண்ட சூரியன்.

327. உணர்வு - ஞானத்தை. வாரும் அரியல் - ஒழுகும் தேன்.

328. கற்று அலைவு அற.

329. அரம்பை - வாழை போன்ற. வட அடையும் மிடையும் பண்டியும் - ஆல் இலையின் அழகு நெருங்கும் வயிறும். துடி - உடுக்கை. வெண்ணெஞ்சு - அறியாமையையுடைய வெள்ளை நெஞ்சு.

330. உள்ளக் கவலை யெலாமுரைத் தேனுக் குவந்தருள
மெள்ளக் கவின்அன மீதிவர்ந் தேவர வேளையிதே
கள்ளக் கயவர்க் கருமமு தேகற் பகக்கனியே
வள்ளக் கமல மலர்மீதில் வாழும் மனோன்மணியே.

331. சிறிதுங் கலையுணர் வில்லாது நெஞ்சம் தியங்கிமடம்
எறிதும் வருகவென் றேதும்நிற் சேர்வெள் ளளவுமின்றிச்
செறிதுன்ப வாரி யிடைமுழ்கும் என்னைத் தியங்கவிடேல்
அறிதுங்கர் உள்ளந் தொறுமேய வெண்கம லாசனியே.

(வெண்பா)

332. வெண்டா மரைமிசையின் மேவும் மடவனமே
கண்டார் மொழிக்குயிலே கற்பகமே—ஒண்டாள்
நலமென் றுரைப்பப்பா நான்சொல் வதற்குப்
பலமென் றுரைப்பவருள் பண்.

333. வேதன்செந் நாவும் விளங்கடியார் நன்னாவும்
ஓதன்பர் நெஞ்சகமும் உற்றருள்வாய்—தீதுற்ற
ஏழையேற் காப்ப இரங்கா திருத்தியென்னை
மாழையேர் கண்கலைமா தே. (1)

334. மாதே கலைகட்கு மாதாவே வெண்கமலப்
போதேய் கருணைக்கட் புத்தமுதே—தீதே
புரிவேன் எனினுமுனைப் போற்று திரேனல்
பரிவேய் பெருங்கருணை பண். (2)

---

330. வள்ளக் கமல மலர் - வள்ளத்தைப் போன்ற தாமரை மலர்.

331. மடம் எறிதும் - அறியாமையை அழிப்போம். சேர்வு எள்ளளவும் இன்றி.

332. கண்டு ஆர் - கற்கண்டைப் போன்ற. ஒள்ளிய தாளின் அழகு இது என்று நான் விரித்துரைக்கும் வகையில் நான் பாக்களைச் சொல்வதற்குப் பலமாகும் என்று யாரும் சொல்ல உன் திருவருளைச் செய்வாயாக.

333. இது முதல் சில பாடல்கள் அந்தாதித் தொடையாக வந்தன. மாழை ஏர் - மாவடுவின் பிளப்பை யொத்த.

334. போது ஏய் - மலரில் தங்கிய.

335. பண்ணும் இசையும்நீ பாட்டும் பொருளும்நீ
எண்ணும் எழுத்தும்நீ என்தாயே—கண்ணும்
கருத்தும்நீ வெள்ளைக் கமலா தனம்வாழ்
ஒருத்திஅடி யேன்பாட உன். (3)

336. உன்னையன்றி வேறுதுணை உண்டோ எனக்கருளாய்
அன்னையன்றி மைந்தர்களுக் கார்துணைசொல்—தன்னையன்றி
ஒப்பில்லா மேன்மை உடையாய் கலைமகளே
தப்பில்லா தோதவரந் தா. (4)

337. தாதா எனவீணர் தம்மைப் புகழ்ந்தலைந்து
போதா யினவெல்லாம் போக்கினேன்—மாதா
அருட்கடலே ஆனந்த அம்புதியே நெஞ்ச
இருட்கடலை நீக்கியருள் ஈ. (5)

338. ஈவாய் வரமென்ன ஏழையேன் நித்தநித்தம்
ஓவாது போற்றி உழல்கின்றேன்—தாவாத
வண்ணம் கருணை வழங்கிக் கவிபாடும்
வண்ணம் கருணையொடு வா. (6)

339. வாழ்த்தா தநேகநாள் வாளா கழித்திடினும்
ஏத்தா திருந்ததுண்டோ இல்லையே—சீர்த்தாய்
வெண்கமல அன்னாய் வினையேன் தடையின்றித்
தண்கவிதை பாடவரந் தா. (7)

340. தாயே கலையனைத்தும் தந்தாய்வெண் புண்டரிகத்
தேயேய் கருணை இறைவியே—தீயே
அனையேன் எனினும் அருங்கவிதை பாடத்
தினையேனும் ஒண்கருணை செய். (8)

341. செய்யுள்தினம் பாடிஉனைத் தெண்டனிட நாயடியேற்
குய்யுநெறி தந்தவத்தை ஓவுவிப்பாய்—நையும்
படிநீவிட் டாலிப் படிமீதே இந்த
அடியேனுக் குற்றதுணை யார். (9)

---

335. ஒருத்தி : விளி. உன் - திருவுள்ளம் கொள்வாயாக.
337. தாதா - வள்ளல். அம்புதியே - கடலே.
341. அவத்தை ஓவுவிப்பாய் - துன்பத்தை நீக்குவிப்பாய்.

342. ஆரா அமுதேவெள் ளம்புயத்து வாழன்பே
தீராத துன்பமெலாம் தீர்ப்பவளே—நேராக
வந்தென் துயர்களைந்து வண்கவிதை பாடவரம்
தந்தென்றும் காத்தருள்வாய் தான். (10)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

343. பூமேவு படிகவடம் புண்டரிக மலர்கிளிபுத்
தகங்கள் தாங்கும்
பாமேவு நாற்கரத்தள் குருந்தமலர் மதிசங்கு
படிகம் போலும்
தூமேவு காந்தியினள் நிகரிலொளி யினளாய
தொன்னூற் செல்வி
ஏமேவு நாமடந்தை எஞ்ஞான்றும் என்நாவீற்
றிருந்து காக்க.

(முதற்பாகம் முற்றும்)

343. இது ஒரு வடமொழிச் செய்யுளின் மொழி பெயர்ப்பு. பூ - பொலிவு. காந்தியினள் - மேனி நிறத்தை உடையவள்.

செய்யுண் முதற்குறிப்பகராதி

(எண் - செய்யுள் எண்)

அகமும் புறனும்	62	ஆயுந் தொறுஞ்	297
அகமுன் வயமா	51	ஆரணனே	145
அகமென் றிடு	61	ஆரா அமுதே	342
அகமே ஒருசொல்	65	ஆரானே வல்லிடம்	150
அகல்வான்	251	ஆல மருந்திப்	293
அங்க ணுலகம்	118	ஆவியென	304
அடைந்திடு பகைத்துயர்	238	ஆளா தெனைநீ	99
அடிநினைவ	198	ஆரூர்ந்த செஞ்சடை	231
அடையுஞ் சருகும்	67	ஆறுதலை மருவி	85
அடையும் அடியர்க்	329	இகமும பரமும்	68
அதுவென் றிதுவென்	25	இகலார் விழித்	256
அம்மையென்று	290	இடரே துமிலா	71
அரசே இலங்கும்	112	இல்லந் தொறு	247
அரட்டை மணி	281	இழையார் முலை	87
அருகா தவலம்	53	இறையு மன்பிலேன்	229
அருவோ டுருவும்	58	இன்றுல் நமக்	13
அருள்பெருகு	108	இன்னுமை இன்பம்	298
அருள்மேவும்	320	இனனை ஏய்	77
அருளா கர	46	இனிக்கும் கவி	55
அருளினு சற்ற	76	இனிக்கும் தமிழை	278
அருளே திருமேனி	10	இனியே துனதருள்	283
...அலந்தேயுறு	235	ஈவாய் வர	338
அலைபோல ஒன்றன்	240	ஈனசம் பந்த	200
அலையிடைப்	325	உண்ணல் உடுத்தல்	137
அறவா னிவரு	165	உண்மை கேட்டி	245
அறிவான உன்றன்	111	உய்க்கும் பவ	47
அன்பர்க் கெளிய	211	உருகன் பருக்	27
அன்பி னேடு	121	உருப்பொதி	167
அன்னம் பலத்	154	உருவா திரையி	172
ஆசு கவி	319	உரைத்திடு வருத்தமு	242
ஆசைக் கடியேன்	300	உரையாமுன்	97
ஆடர வம்புலி	166	உள்ளக் கவலை	330
ஆடும் அரவிற்கு	39	உளமன்னும்	324
ஆண்டவ னேயடி	233	உறவும் நீ	79
ஆதந் தினமும்	187	உன்னு திருந்த	301

உன்னையன்றி 336
உனையே நினைந் 294
எட்டீசர் மேனி 143
எண்ணிற் சிறந்த 29
எண்மை விராவிய 40
எந்நாளும் நின்றனையே 86
எய்தாப் பொருள் 316
என்றும் பிறந்தைக் 289
எனக்கு மனமோர் 117
ஏகாய மன்றத் 156
ஏரார் மயில் 63
ஏராரும் பாலற் 295
ஏனையர்கள் 106
ஒருநாலு முனி 147
ஒருமுல்லை வாயி 202
ஓடேற்ற கையும் 128
ஓயாது பாழுக் 95
ஓரா யிரங்கணன் 176
ஓரானை அம்பென 151
ஓவாது பொய்ம்மை 38
கங்கங்கங் 160
கச்சன் புறு 141
கட்டிலும் பாயல் 84
கடல் வண்ண 9
கடல்வாய் 268
கடுங்கண்ணர் 125
கண்காட்டு 210
கண்காண நின்கழல்கள் 311
கண்டவருங் கேட்டவரும் 263
கண்ணுர் நுதலன் 54
கண்ணுங் கருத்து 116
கண்ணுத லெந்தை 216
கத்தனை அன்பர 152
கரனு ருயிரைக் 52
கல்லாத தனுக்குங் 284
கலர்ச் சேர்வி 306
கலைமகள் தாளிற் 328
கலைமகள் பா 317
கழைவளர் 41
களைகண் ணென 59
கற்பகமே 6
கனக வரையன் 180
கனவினும் 302
காசினி காரிகை 19
காட்டஞ் சுமந்த 185
காண்டகைய 241
காத்தருள 314
காதலொடு கண்டேன் 105
காமே வருளுறை 259
காய்ந்த கனலினில் 131
காரண காரண 18
காரா றுடி 82
காரியந்தான் 134
காவியங் கண்மட 217
காழ்த்த மலப் 308
காழுந் தகந்தை 305
கிட்டிச் சமர் 269
குகவிஞ டுற்ற 75
குகனு மகப் 173
குணமார் சுவைகள் 122
குரங்கத் தினுக் 34
குறித்திடு வெங்குருக் 239
கேட லவனம் 155
கொடுப்பாய் 5
கொண்டார் பெருந் 110
கொத்தின மலர 253
கொந்தேர் 43
சங்க மருவுந் 119
சதா வெந் 323
சந்தங் குலை 169
சயிலச் சுவர்க்க 182
சாகரத்திற் 267
சாய்க்காட்டுப் 205
சார்ந்திடு மைம்பொறித் 237
சாரணனே 146
சாற்ற இனிக்கும் 123
சிறிதுங் கலையுணர் 331
சிறந்த வளத்த 178
சிறையிலா 81
சீரேறு சண்டி 261
சுக்கிர வார 83
சுதத்தி னுனுங் 186
சுந்தர மேனிப் 130
செந்தேன் புரை 307
செப்பும் தமிழின் 274
செய்யார் வரம்பைத் 265

செய்யுள் தினம்	341	தேவாதி தேவன்	191
செல்லொன்று	129	தேர்கொண்ட	282
சேயனை யார்	163	தேனிருக்குஞ்	201
சொல்லா முன	101	தொண்டர் நித்தம்	309
சொல்லும் பொருளும்	1	தொண்டான் மானக	161
தஞ்சமெனச்	275	தொலையா தபவத்	64
தகைதீஞ் சுவை	70	தொன்மைப் புலவர்	120
தந்திக் கிளையாய்	45	தோடுலா மலர்க	206
தமரானவர்	227	தோற்றம் கெடுத்தேம்	12
தரியலர்கட்	279	நஞ்சம் நிகர்	310
தருவும் மணியும்	60	நண்ணல் புரிவேன்	140
தழலுக்கு வாழ்வீட	192	நத்தனைத் தேடு	148
தாதா என	337	நம்பாச	170
தாபன மார்சுவை	23	நம்பு நெஞ்சமுந்	244
தாயே கலை	340	நயந்த அடி	277
தாரகத்தின்	26	நல்கிய தாயொடு	3
தாவா மறையின்	270	நற்றவத் தார்	164
தாழ்தரு பாவ	16	நற்றேனும்	312
தானந் தவ	183	நன்று சேரன்பர்	213
தானே தனக்கிணை	276	நனவுமா சற்று	78
திங்கள் முடி	2	நாயிற் சிறியேன்	98
.. திருத்து கவலாத	113	நாவல் வந்த	215
திருநின்றி யூரொடு	193	நாவார் அருளுறை	260
திருப்புன்கூ	194	நித்த நித்தலு	204
திருமுறைக	136	நித்தம் பிறர்	138
திருவளர் நின்மலர்ச்	318	நின்புகழை	96
திருவாப்பாடி	177	நின்றன் பொருட்டன்	262
திருவும் கலையும்	44	நின்னை அன்றி	92
தினமே மடவார்	66	நின்னை நினைந்	197
தீங்கான மாந்த	174	நின்னை நினைந்த	126
துயர்தீ ரென்	226	நினைப்புகழ் கல்வி	30
துன்னும் பெரும்	321	நீதி வழி	139
தூண்டான் என	142	நீயே மறைகள்	102
தூயவர	190	நீரணி வேணியர்	221
தெருளாரும் அடியார்	257	நெஞ்ச மேயினி	222
தெள்ளா ரமுதத்	296	நெஞ்ச மேயுனக்	243

நெஞ்சேஎனக்	224	புயமா றினெ	56
நேரார் பகையும்	33	புயல் மேவு	264
நோபா தகங்	162	புரந்தர னங்கி	159
பங்கப் பலகை	171	புரிசடையாய்	104
படவா ரணிய	179	புரியாத தீமை	89
படியா ரேத்தும்	208	புரிவளைகொள்	8
படியினில் நிகரறு	248	புரையாரும் அடியன்	258
பண்ணுத தீமை	90	பூபுரந் தரர்	144
பண்ணும் இசையும்	335	பூமேவு படி	343
பணியா டவலைப்	57	பூவணுந் திருச்	195
பணியொடு நதிமதி	252	பெரியம்மை	292
பதியிற் சிறந்த	266	பெரியை நீ	286
பரசு பாணிய	209	பெருகும் பய	288
பரிந்த நெஞ்சம்	114	பெருங்கருணை	313
பரிந்தமரர்	273	பேசுறு பூங்	246
பற்றுத நின்	94	பேணவல அன்பரடி	230
பாகினை நேர்தரு	20	பேணுதார் புர	220
பாசவி மோசந	17	பேயழைத்தா	196
பாசாந்த காரம்	127	பேயாய்ப் புடவி	35
பாடலவ ளத்துப்	189	பொய்யன் புலையன்	133
பாடா தவன்	322	பொன்னையே தேடிப்	255
பாடாமல்	303	போதிவர் வார்குழல்	15
பாடுகின் றுள்பரி	32	போற்றுதி நெஞ்சமே	234
பாரணி யார்தரு	24	மடந்தந்த	124
பாரத்து வாசந்	175	மணிமேவு	254
பாராத கண்ணும்	326	மந்திர மறை	212
பாராளை முன்	149	மயிலயா வுற்ற	80
பாரும் விசும்பும்	327	மயிலில் வாழ்	73
பாரோடு மெங்கும்	287	மலர்கொண் டுனையே	69
பாவத்தை	207	மலையாவும்	271
பாவிக் குமிநினைப்	50	மறவா தடிக்க	184
பித்தனை முன்விடும்	153	மறையா தரிக்கும்	42
பிரமன்செங்	315	மறையினே துற்ற	74
பிறையணி சடைமுடி	219	மனம்போன வாறலைக்	299
பிறையணி செஞ்சடை	223	மனமு முடலும்	225
புண்ணிய நின்னடிப்	28	மனமும் வாக்குஞ்	115

மனமே அடைதி 203
மாதங்க ஆனனத்து 4
மாதே கலைகட்கு 334
மாற்றார் நகை 91
மாற்றுயர்ந்த 109
மானன மாதர்கள் 22
மிடியும் துயரும் 36
முக்கணனைக் கோமுத்தி 132
முத்தன நங்கை 158
முத்தனே வெள்ளடை 218
முருகமே கத்து 72
முருகா அகில 31
மெய்ய மேவிய 249
மேலாச் சுவர்க்கம் 11
யாரே துணையென்ன 93
வணங்காது 291
வரத்திற் பொலி 280
வரமா தவர் 49
வழிகாட்டு முன்னை 285
வழுத்தாது நின்னை 107
வளம்படைத்த 214
வாச வருக்க 188
வாடலை நீவிய 21
வாதாடும் 37
வாய்ந்த அருட் 7
வாயார நின்னை வழுத்தா 272
வாயார நின்னை வழுத்தேன் 103
வாயே பல 199
வாலீச மாய 135
வாழ்த்தா தநேக 339
வாழ்ந்திட வேண்டி 236
வாழ்வா ரவரே 250
வாழ்வே மதித்து 88
வானும் பணியும் 48
விஞ்சத் தனத்தி 181
விடையதே றிக் 232
விண்டானந் 168
வில்லாக 14
விளம்ப இனிக் 100
வெண்டா மரை 332
வெருக்கோ கரண 157
வேதன்செந் 333
வேந்தென மேக 228

சென்னை, அடையாறு

மகாமகோபாத்யாய டாக்டர்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய

வெளியீடுகள்

நூல் நிலையத்தில் கிடைப்பன :			ரூ.	ந.பை
1.	பரதசேனுபதீயம்	...	1	25
2.	கம்பராமாயணம் — ஆரணிய காண்டம்	...	12	00
3.	,, — கிஷ்கிந்தா காண்டம்	...	12	00
4.	,, — சுந்தர காண்டம்	...	12	00
5.	சூளாமணி	...	12	00
6.	திருவாசக வியாக்கியானம்	...	13	00
7.	மகாபரத சூடாமணி — பகுதி 1	...	10	00
8.	,, — ப்குதி 2	...	5	62
9.	திருக்குற்றால நாதருலா	...	2	50
10.	அபிநய தர்ப்பணம் (படங்களுடன்)	...	5	50
11.	தக்கயாகப்பரணி — மூலமும், உரையும்	...	6	50
12.	நளவெண்பா	...	5	00
13.	மநுவிஞ்ஞானேசுவரீயம்	...	4	00
14.	கமலாலயச் சிறப்பு என்னும் திருவாரூர்ப் புராணம்	...	5	00
15.	அகிலாண்ட நாயகி மாலை	...	0	50
16.	தமிழ்ச் சுவடிகளின் நாமாவளி	...	0	37
17.	சுவடிகளின் விளக்கம் (Descriptive Catalogue, Vol. II)	...	10	00
18.	திருக்குறள்-மூலமும் ஒரு பழைய உரையும்	...	4	00

அடையாறு, கலாக்ஷேத்திரத்தில் கிடைப்பன :

நவநீதப் பாட்டியல் – மூலமும் உரையும்	...	2	00
கும்பேசர் குறவஞ்சி நாடகம்	...	1	50
திருக்குற்றாலக் குறவஞ்சி	...	0	75
மூவருலா – பழைய குறிப்புரைகளுடன்	...	5	00
யாப்பருங்கலக் காரிகை-மூலமும் உரையும்	...	3	50
கம்ப ராமாயணம் —			
பாலகாண்டம்-மூலமும் குறிப்புரையும்	...	6	50
அயோத்யா காண்டம் ,,	...	6	50

சென்னை கவர்ன்மெண்டு ஓரியண்டல் மானுஸ்கிரிப்ட்ஸ் லைப்ரேரியில் கிடைப்பன

கப்பற் கோவை	...	3	00
சுவடிகளின் விளக்கம் (Descriptive Catalogue, Vol. I	...	10	00